நன்றி - நூலகத்திட்டம்


# புதிய பூமி

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

PUTHIYA POOMI පුදියපූමි

சுற்று 05 செப்டெம்பர் 1998 பக்கம் 12 விலை ரூபா 10/= சுழற்சி 23


## தீர்வு எப்படி வரும்?

- தமிழீழக் கோரிக்கையையும், ஆயுதங்களையும் கைவிட்டு புலிகள் பேச்சுக்கு வந்தால் அவர்களுக்கு கதவு திறந்திருக்கும்
  –ஐ.நா.வில் ஜனாதிபதி
- திம்புக் கோரிக்கை அடிப்படையில் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடன் பேச்சுவார்த்தைக்கு தயாராக உள்ளோம்.
  –புலிகள் சார்பாக சு.ப. தமிழ்ச்செல்வன்
- ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வந்தால் நிபந்தனை இன்றி புலிகளுடன் பேசி இனப்பிரச்சினைக்குத் தீர்வும் காண்போம்.
  –ஐ.தே.க. தலைவர் ரணில்

# இரத்தினபுரியில் இனவெறியாட்டம்

**இரத்தினபுரி வேவல்வத்தையில் நடைபெற்ற இனவெறியாட்டத்துக்கு பொறுப்பானவர்கள் அரசியல் வாதிகளால் பாதுகாக்கப்படாமல், பராபட்சமின்றி, தயவு தாட்சண்யமின்றி தண்டிக்கப்பட வேண்டும். இனவெறியாட்டத்தால் பாதிக்கப்பட்ட தோட்டத் தொழிலாளர்கள் உட்பட சகல மலையகத் தமிழ் மக்களுக்கும் நிவாரணங்கள் என்ற பேரில் கண்துடைப்புக்களை செய்யாது அவர்கள் மீண்டும் அங்கு நிலைகொண்டு வாழக்கூடியவாறு அர்த்தமுள்ள நிவாரணங்களும் நட்டஈடுகளும் வழங்கப்பட வேண்டும். அர்த்தமுள்ள புனர்வாழ்வு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.**

- பொறுப்பானவர்கள் தண்டிக்கப்படுவார்களா?
- நிவாரணம் வெறும் கண்துடைப்பாகுமா?
- மலையகத் தலைவர்கள் பதுங்குவது ஏன்?

இரத்தினபுரி வேவல்வத்தை தோட்ட இளைஞர்களுக்கும் கிராமத்து கசிப்பு வியாபாரிக்குமிடையே ஏற்பட்ட தகராற்றினை தொடர்ந்து கிராமத்தை சேர்ந்த வல்ஹேனகே பந்துசேன, அசித்தகுமார ஆகிய இரண்டு பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து திட்டமிட்ட வகையில் கிராமத்திலிருந்து ஆட்களை வாகனங்களில் ஏற்றிச் சென்று அவர்களை கொண்டு தோட்டத் தொழிலாளர்கள் தாக்கப்பட்டுள்ளனர். லயங்கள் எரித்து நாசம் செய்யப்பட்டுள்ளன. தோட்டப் பெண்கள் பாலியல் துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கப் பட்டதாகவும் தகவல்கள் கிடைத்துள்ளன.

உத்தியோகபூர்வ தகவல்களின்படி வேவல்வத்தை, அளுத்தபொத்த உட்பட சில தோட்டங்களில் 29 லயங்களும் கடைகளும் எரிக்கப்பட்டுள்ளன. இரண்டு தொழிலாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர். முழுமையான விபரம் வெளிப் படுத்தப்படவில்லை.

இரண்டு சிங்கள இளைஞர்கள் கொல்லப்பட்டது தொடர்பில் 9 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக உத்தியோகபூர்வ அறிக்கைகள் தெரிவிக்கின்றன. ஆனால் திட்டமிடப்பட்டு தோட்டத் தொழிலாளர்கள் தாக்கப்பட்டதும், லயன்கள் எரிக்கப்பட்டதும் தொடர்பாக இன்னும் ஒருவரும் கைது செய்யப்படவில்லை.

அவ்வாறான இனவெறியாட்டத்துக்கு பின்னணியில் ஆளும்கட்சி அரசியல்வாதிகள் இருந்ததாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

17 வருட ஐ. தே. கட்சியின் இருண்ட காலத்தில் 1977, 1979, 1981, 1983, 1984, 1986, ஆகிய ஆண்டுகளில் இரத்தினபுரி உள்ளடக்கிய சப்பிரகமுவ மாகாணத்தில் மலையகத் தமிழர் தாக்கப்பட்டுள்ளனர். இன வன்முறைகள் மிகவும் மோசமான முறையில் கட்டவிழ்த்து விடப்பட்டன. இதேவகையில் இன உறவுகளை சிதைக்கும் வகையில் பொதுசன ஐக்கிய முன்னணியின் சில அரசியல் வாதிகளும் தொடர்ந்து நடவடிக்கைகளை முன்னெடுத்து வந்ததால் நிலைமை மேலும் மோசமாகிக்கொண்டே வந்தது. இதனால் இப்பகுதி சிங்கள மக்களுக்கும் தமிழ் மக்களுக்கும் இடைவெளி கூடிக்கொண்டே வந்தது. இதன் உச்சக்கட்டமாகவே செப்டெம்பர் 9ஆம் திகதி முதல் ஒரு வாரத்துக்கு மேலாக இரத்தினபுரி வேவல்வத்தை தோட்டத்திலும் ஏனைய பல தோட்டங்களிலும் இன வன்முறைகள் இடம் பெற்றுள்ளன.

1977க்குப்பின் இனவாதத்தை தூக்கிப் பிடிக்கும் ஐ.தே. கட்சி, சுதந்திரக் கட்சியின் மாவட்டமாகவே இரத்தினபுரி மாவட்டம் இருந்து வருகிறது என்பதை விளங்கிக் கொள்ள வேண்டியிருக்கிறது. இன்று அம்மாவட்டத்தில் சில சுதந்திரக்கட்சி, ஐ.தே. கட்சி அரசியல்வாதிகள் வாயளவில் இன ஒற்றுமை பற்றி கதைத்தாலும் சிங்கள மக்களிடம் இனவாதத்தை உசுப்பிவிட்டு மலையகத்தமிழ் மக்களுக்கு எதிரான வன்முறைகளை செய்யத் தூண்டுபவர்களாக இருக்கின்றனர். அத்தோடு பயங்கரவாத எதிர்ப்பு தேசிய முன்னணி, தேசிய பாதுகாப்பு முன்னணி, சங்கசபா போன்ற அமைப்புகள் சிங்களமக்கள் மத்தியில் இனவெறியை தூண்டுவதற்கான வேலைகளைச் செய்து வருகின்றன.

நிறுவனப்படுத்தப்பட்டு வருகின்ற பௌத்த பேரினவாதத்துக்கு ஆதரவாக சிங்கள மக்களை திருப்பும் முயற்சிகள் திட்டமிட்டு மேற்கொள்ளப்படுகின்றன. ஒரு சிங்களவருக்கும் ஏனைய தேசிய இனத்தவருக்குமிடையே நிலவும் தனிப்பட்ட முரண்பாடுகளை ஒரு தேசிய இனத்துக்கு எதிராக திருப்பி பேரினவாதத்தின் மேலாண்மையை அபிவிருத்தி செய்வதில் பேரினவாத சக்திகள் திட்டமிட்டு செயற்படுகின்றன. இதனை இரத்தினபுரி வேவல்வத்தை தோட்டத் தாக்குதலிருந்தும் அதன் பின்னர் பரவலாக அப்பிரதேசத்தில் மலையக மக்களுக்கு எதிராக புரியப்பட்ட இனவன்முறைகளிலிருந்தும் விளங்கிக் கொள்ள முடிகிறது.

ஆனால் மலையகத் தலைவர்கள் எனப்படுபவர்கள் அரசாங்கத்துடன் தமக்கு உள்ள உறவுக்கும் பதவிகளுக்கும் பங்கம் எதுவும் ஏற்படாத விதத்திலேயே வேவல்வத்தை சம்பவம் பற்றி கதைத்து வருகின்ற னர். அந்த வன்முறைக்கு பொறுப்பான ஆளும் கட்சி அரசியல் வாதிகளைச் சுட்டிக் காட்ட வெளிப் படையாக தயக்கம் காட்டி வருகின்ற னர். நிவாரணங்களையும், நட்டஈடு களையும் வழங்குமாறு அவர்கள் விடுக்கும் கோரிக்கைகளும் வரையறுக்கப்பட்டதாகவே இருக்கின்றன.

நிவாரணங்களும் நட்டஈடுகளும் வழங்கப்படுவது இனவன்முறை களிலிருந்து மட்டுமன்றி மலையகத் தமிழ் மக்கள் தம்மைப் பாதுகாக்கவும் அழிவுகளை தடுக்கவும் தற்காப்புரீதியான நடவடிக்கைகளில் ஈடுபடும் உரிமையை நிலைநாட்டவும் வேண்டும் என்பதை மக்கள் உணருகின்றனர். இதேவேளை சிங்கள மக்கள் மத்தியில் சிதறிவாழும் மலையகத் தமிழ் மக்கள் சிங்களப் பேரினவாத ஒடுக்கலிருந்து தம்மை பாதுகாத்துக்கொள்ள அரசியல் அமைப்பு ரீதியான நிரந்தர ஏற்பாடுகளை செய்யப்பட வேண்டும் என்பதை உணருகின்றனர். மலையகத் தமிழ் மக்களின் இந்த விருப்பத்துக்கு ஏற்ப அவர்களின் தலைவர்கள் எனப்படுபவர்கள் உறுதியான நடவடிக்கைகளை எடுப்பார்களா? முடியாவிட்டால் பகிரங்கமாக கூறிவிட்டு மக்களை தொடர்ந்து ஏமாற்றாமல் ஒதுங்கிக் கொள்வார்களா?

அதேவேளை சிங்கள மக்கள் மத்தியிலுள்ள முற்போக்கு ஜனநாயக சக்திகள் பேரினவாத குண்டர்களைப் பகிரங்கமாகக் கண்டிக்க வேண்டியதுடன், அவர்களுக்கு எதிரான அபிப்பிராயம் சிங்கள மக்கள் மத்தியில் பரப்பப்பட வேண்டும். இதுவே பேரினவாதத்துக்கு எதிராக தமிழ் மக்களும், முஸ்லீம் மக்களும், மலையக தமிழ் மக்களும் நடத்துகின்ற போராட்டங்களுக்கு சக்தியூட்டுவதாக அமையும். வர்க்க சக்திகள் ஒன்றுபடுவதற்குத் தடையாக உள்ள பேரினவாத சக்திகளுக்கு எதிரான பன்முக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படல் வேண்டும்.

# யாழ்–குடாநாடு கட்டி இறுக்கப்படுகிறது

## திறந்த வெளிச் சிறைச்சாலையில் மக்கள்

யாழ்–குடாநாடு இன்று பல வழிகளாலும் இறுக்கப்பட்டு வருகின்றது. பாதுகாப்பின் பெயரால் பன்முக நெருக்கடிகள் நாளாந்தம் கூடிக் கொண்டு செல்கின்றன. ஏற்கனவே முதல் மேயர் சரோஜினி, வடமராட்சி இராணுவ பிரிகேடியர் ஆகியோரது கொலைகளுடன் இறுக்கமடைய ஆரம்பித்த இராணுவ பாதுகாப்பு நடவடிக்கைகள் தற்போது இரண்டாவது மேயரினதும் யாழ்–நகரில் பிரிகேடியரினதும் கொலைகளுடன் மேலும் உக்கிரமாக்கப்பட்டுள்ளன. இதனால் கைது தடுத்து வைப்பு தேடுதல் போன்றவற்றில் சிலர் இறந்தும் உள்ளனர். பலர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

யாழ்–குடாநாட்டில் இயல்பு வாழ்க்கையும் சமாதானமும் இல்லாத சூழலில் கட்டாயத் தேர்தல் நடத்தியதன் விளைவையே இன்று அரசாங்கம் அறுவடை செய்கிறத. தமிழக்கட்சிகள் யதார்த்த நிலையை மறுத்து அரசியல் சித்து விளையாட முனைந்தார்கள். அரசாங்கம் அவர்களையும் பகடைக் காய்களாக்கிக் கொண்டது. சமாதானமாகவும் தமது சொந்த மண்ணில் வாழவும் அங்கு சென்ற ஐந்து லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் இன்று திறந்தவெளிச் சிறைச்சாலை வாழ்வையே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இதுவே குடாநாட்டை அரசாங்கம் விடுவித்த லட்சணமாகும்.

துப்பாக்கிகளுக்கும் வெடி குண்டுகளுக்கும் சதா அஞ்சி அஞ்சி வாழ வேண்டிய அதேவேளை அன்றாட உயிர் வாழ்வதற்கு தேவையான உழைப்பும் உணவும் பெற வேண்டி அலைச்சல் பட வேண்டியுள்ளது. கப்பல் ஒன்று அடிபட்டுவிட்ட செய்தி வந்த மறுகணம் பொருட்கள் மாயமாய் மறைந்து இரண்டு நாட்களின் பின் விலை உயர்வுடன் வெளி வந்து கொள்ளும். பதுக்கல், கறுப்புச்சந்தை, கொள்ளை லாபம் குடாநாட்டின் இயல்பாகி விட்டது.

அதேவேளை அன்றாடத் தொழிலாளர்கள் விவசாயிகள் மீனவர்கள் போன்றோர் தத்தமது முயற்சிகளை ஆற்ற முடியாது அரைகுறை உழைப்புடன் மல்லாட வேண்டியவர்களாகவே உள்ளனர். நல்லூர் திருவிழா, செல்வச்சந்நிதி தேர்விழா, மாவிட்டபுரம் புனரமைப்பு இவைகளைக் காட்டி குடாநாடு சீரும் சிறப்புமாக உள்ளது எனக் காட்டிட அரசாங்கம் முற்படுகிறது. அதற்கு ஒத்து ஊதச் சில தமிழ்க் கட்சிகளும் உள்ளன. ஆனால் யாழ்–குடாநாட்டின் நிலை ராணுவக் கயிறுகளால் கட்டி இறுக்கப்பட்டே வருகின்றன. குடாநாட்டு வாழ்க்கை திறந்த சிறைச்சாலை வாழ்க்கை என்றே அங்குள்ள அநேக மக்கள் வருணிக்கின்றனர். அதில் உண்மை இருக்கவே செய்கிறது.

நன்றி - நூலகத்திட்டம்



# புதிய தலைமுறையினருக்கு தொண்டமான் வழிவிட்டுக் கொடுப்பாரா?

'எனது தந்தையார் 1890ம் ஆண்டு இலங்கைக்கு வந்தார். வேவண்டன் தோட்டத்தில் 33சதம் தினக் கூலிக்கு வேலை செய்தார். பின்பு அதே தோட்டத்தில் கங்காணியானார். அதன்பின் பெரியகங்காணியாகிக் கொண்டார். அத்துடன் இத்தோட்டத்தை விலைக்கும் வாங்கிக் கொண்டார். அவரின் தளராத உழைப்பும் தன்னம்பிக்கையும் ஒரு தோட்டச் சொந்தக்காரர் என்ற அந்தஸ்தைப் பெற்றும் கொடுத்தது. ஆனால் இன்று தோட்டத் தொழிலாளர்கள் நாம் பிரயாசைப்பட்டு வாங்கிக் கொடுத்த பங்குச் சான்றிதழ்களை விற்று வருகின்றனர். அதனால் அவர்கள் தோட்டச் சொந்தக்காரர் ஆகும் வாய்ப்பை இழந்து வருகிறார்கள்.'

இவ்வாறு பேசி இருப்பவர் அமைச்சர் தொண்டமான். கடந்த மாதத்தின் கடைசி வாரத்தில் அவரது எண்பத்தாறாவது பிறந்த நாள் மலையகத்தில் அவரது சொந்த தோட்டத்தில் கொண்டாடப்பட்டது. அவரது பிறந்த நாள் வரப்போவதை அறிந்த பல தொழிலாளர்களும் சில மலையகப் புத்திஜீவிகளும் மலையக மக்களுக்கு ஏதோ புதிய விடயங்களைப் பற்றித் தொண்டமான் குறிப்பிடப் போகிறார் என்றே எதிர் பார்த்தனர். மேலும் இதுவரை பெற்றுக் கொள்ள முடியாத உரிமைகளுக்கும் சம்பள உயர்வுக்கும் புதுப் போராட்ட வழிமுறை பற்றிக் கூறப் போகிறார் என்றே நம்பினர். ஆனால் எல்லாம் பழைய கதையைத்தான் அமைச்சர் கூறி உள்ளார். சிலர் கூறலாம் அவருக்கு எண்பத்தியாறு வயதாகியதால் எப்படி புதிய வாக்குறுதியை புதிய போராட்ட வழிமுறையைக் காட்ட முடியும் என்று. எண்பதைத் தாண்டிய நெல்சன் மண்டேலா இன்னும் தனது மக்களுக்கும் உலகின் அடக்கப்பட்ட மக்களுக்கும் தன்னால் முடிந்த நம்பிக்கையை கொடுத்து அநீதி அடக்குமுறைகளுக்கு எதிராக நின்று வருகிறார் என்பது இவ்வேளை சுட்டிக் காட்டத்தக்கதாகும். வயது என்பது அல்ல பிரச்சனை என்ன கொள்கை யாருக்கு சேவை செய்வது என்பதே முக்கியமானது.

அமைச்சர் தொண்டமான் தனது தந்தை வழியில் தன்னை முன்னேற்றிக் கொண்டவர். வெள்ளைத்துரையின் தோட்ட ஆட்சியில் 33சதம் பெற்ற தொழிலாளர்களில் ஒருவர் எப்படி கங்காணியாகி பெரிய கங்காணியாகி இறுதியில் அத்தோட்டத்தையே விலைக்கு வாங்குவதென்றால் அது இலகுவானதாக இருக்க முடியாது. வெள்ளைத்துரைக்கு விசுவாசமாகவும் தொழிலாளர்களுக்குத் துரோகமாகவும் ஒருவர் இருந்தால் மட்டுமே அத்தகைய குறுக்குவழி முன்னேற்றத்தைப் பெற்றிருக்க முடியும். இது சகலருக்குமான பொதுவிதியானால் இன்று மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் ஒவ்வொருவரும் தோட்டச் சொந்தககாரர்களாகி இருப்பர். இவ்வாறு கூறுவது முதலாளித்துவ ஏமாற்றுத்தனமாகும். இன்றும் தோட்டத் தொழிலாளர்களுக்கு கிடைத்த பங்குச் சான்றிதழின் பெறுமதி மிக மிக அற்பமான தேயாகும். அதனை விற்ற ஒரு தொழிலாளி கதிர்காம யாத்திரை சென்று வர மட்டுமே போதுமானதாக இருந்தது என்று கூறினார். அதற்காக எல்லோரும் அதனை விற்க வேண்டும் என்பதில்லை. ஆனால் அதன் மூலம் தோட்டச் சொந்தக்காரர் ஆகிவிடலாம் என்பது தான் வெறும் 'ஏமாற்று என்பதே உண்மையானதாகும்.

இறுதியாக அமைச்சர் தொண்டமான் அவன் இவன் பின்னால் செல்லாது காங்கிரசைப் பலப்படுத்துமாறும் அதன் கீழ் ஐக்கியப்படுமாறும் தனது பிறந்த தினத்தில் கேட்டுள்ளார். தன்பலம் தெரிந்தே ஏற்கனவே இ.தொ.கா. ஏனையவர்களோடு சேர்ந்து பேரணி அமைத்திருக்கும் போது எவ்வாறு காங்கிரசைப் பலப் படுத்த முடியும் என்று அதன் அடி மட்டத் தொண்டர்கள் கேட்கிறார்கள்.

தனது 86வது வயதில் அமைச்சர் தொண்டமான் எழுந்து வரும் மலையக இளம் தலைமுறையினரின் எழுச்சிக்கு வழி விட்டுக் கொடுத்து உறுதியான போராட்டப் பாதையில் செல்லுங்கள் என ஆசி கூறி நிற்பதே இன்றைய சூழலில் பொருத்த மானதாகும்.

# பேரினவாத ஆதிக்கத்திற்கு ஓர் உதாரணம்!

நாட்டில் பேரினவாத ஆதிக்கம் எந்தளவுக்கு விரிவு பெற்றுக் காணப்படுகின்றது என்பதற்கு பல நூறு உதாரணங்களை எடுத்துக் காட்ட முடியும். குறிப்பாக வடக்கு கிழக்கில் அதன் ஆதிக்கக் கரங்களுக்கும் நிறைய உதாரணங்கள் உண்டு. அதில் ஒன்றுதான் திருகோணமலை நகரசபையினால் சுமார் அறுபது லட்சம் ரூபா செலவில் புதிய சந்தை கட்டிடம் கட்டப்பட்டது. பழைய சந்தை எவ்வித வசதிகளும் அற்ற நிலையில் சுகாதாரச் சீரகேடுகளின் மத்தியில் பஸ்நிலையத்துக்கு அருகாமையில் இருந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். ஆனால் புதிய சந்தை மக்கள் செறிந்து வாழும் பகுதியில் ஓரளவிற்கு சகல வசதிகளுடனும் சுகாதாரத்தைப் பேணும் வகையிலுமே கட்டப்பட்டது.

ஆனால் வரியிறுப்பாளர்களின் பணத்தில் நகரசபையின் மக்களால் தெரிவு செய்யப்பட்ட புதிய சந்தைக் கட்டிடம் பூர்த்தி செய்யப்பட்டு ஒரு வருடத்திற்கு மேலாகியும் திறக்க முடியாத அவல நிலையில் காணப்படுகிறது. இதனை திறக்க விடாது தடுத்து நிறுத்தியதில் இராணுவ இணைப்பதிகாரி, பொலிஸ் அதிபர், அரசாங்க அதிபர் என்போர் முக்கிய பாத்திரம் வகித்து வருகின்றனர். பழைய சந்தையில் கொழுத்த வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள விரல்விட்டு எண்ணக்கூடிய சிங்கள முதலாளிகளது விருப்பத்திற்கு இணங்கவே அவ்வாறு சந்தை திறப்பு தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது. புதிய சந்தையானது தமிழ்ப் பகுதியில் நிறுவப்பட்டுள்ளது என்றும் அதனால் தமக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது என்பதுமே சிங்கள முதலாளிகளின் குற்றச் சாட்டாகும். ஆனால் புதிய சந்தையில் சிங்கள வியாபாரிகளுக்கு பாகுபாடு காட்டாது போதிய இடம் வழங்கப்பட்டுள்ளது என்பது நகர சபைத்தலைவரின் கூற்றாகும். அப்படி அநீதி இழைக்கப் பட்டிருந்தால் அதனை எடுத்துக் காட்டுமாறு அவர் சம்பந்தப்பட்டவர்களுக்கு சவால் விடுத்துள்ளார்.

பேரினவாதத்தை முன்தள்ள தமது பணப்பைகளை நிரப்பிக் கொள்ளும் குறிப்பிட்ட சிங்கள முதலாளிகளே திருகோணமலையின் இனக் குரோதத்திற்கும் வித்திடுபவர்களாக உள்ளனர். அவர்களைப் பாதுகாத்து வருபவர்கள் ராணுவம், பொலிஸ், கடற்படையினராக உள்ளனர். திருகோணமலையை முற்று முழுதான சிங்களப் பிரதேசமாக்கும் பேரினவாத ஆதிக்க விஸ்தரிப்பின் ஒரு பகுதியாகவும் உதாரணமாகவும் புதிய சந்தைத் திறப்பு விவகாரத்தை கண்ட கொள்ளலாம்.

இது பற்றி ஜனாதிபதி வரை அமைச்சர்கள்வரை நகரசபை சார்பாக அதன் தலைவர் முறையிட்டும் எதுவும் ஆகவில்லை. உள்ளூராட்சி அமைச்சர் அலவி மௌலானா அண்மையில் நகரசபைத் தலைவருக்கு எழுதிய கடிதத்தின் படி புதியசந்தை திறக்கப்படுவதற்கு வாய்ப்பே இல்லை என்பதாகவே உள்ளது. அரசாங்கத்தோடு கூடிக் குலாவி சல்லாபம் செய்யும் தமிழ் கட்சிகளுக்கு இந்த விவகாரம் முக்கியமான தொன்றாகத் தெரியவில்லை. குறிப்பாக திருகோணமலைப் பாராளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதியின் உள் வீடுவரை செல்வாக்குள்ளவர் எனக் கூறப்படுகிறது. அவர் இது பற்றி அலட்டிக் கொள்ளவே இல்லை. அவர் பா.உ. ஆக வருவதற்கு எடுத்த முயற்சிகளும் முனைப்புகளும் ஏராளம். ஆனால் உரிய ஆசனம் கிடைத்ததும் தமது ஆளும் கட்சி வர்க்க சகாக்களுடன் இணைந்து சல்லாபம் செய்கிறாரே தவிர மிக முக்கியமான ஒரு பேரினவாத ஆதிக்கமாகவும் ஆபகரிக்கமாகவும் மாறி உள்ள புதிய சந்தை கட்டிடத்தை உரியவாறு திறந்து வைப்பதில் அவருக்கு அக்கறையே இல்லை. இதுதான் தமிழர் கூட்டணியின் தமிழ்மக்களுக்கான தொண்டு. இதுதான் பொதுசன ஐக்கிய முன்னணியின் தமிழ் மக்கள் மீதான பாசப்பிணைப்பு.

**திருமலை சிவன்**

# நாலு நடக்கும் உலகிலே

## சொல்லாயோ வாய்திறந்து வார்த்தை ஒன்று...............

வாஜ்பாயி மகாமுனிவர் வந்து போனார். இந்தியா மறுபடியும் தலையிட்டால்தான் தமிழ் ஈழத்துக்குச் செம்ம ஈடேற்றம் என்று தவமிருந்தவர்கள் இந்துத் தமிழ் அடியார்கள் படும்பாடு மனமிரங்கி அவர் சிங்களப் பேரினவாத மகாசூரனுக்கு எதிராகப் போராடக் கத்தி, துவக்கு வரவழைத்துத் தராமல் போனாலும் பரவாயில்லை, காசு பணம் வரவழி செய்யாமல் விட்டாலும் பரவாயில்லை (முன்னையவை தேவையில்லை பின்னவை எப்படியோ வருகின்றன) பிடிசாபம் என்று எதிரியை ஒரு வார்த்தையாவது ஏசவா என்றாவது நினைத்தார்கள். முனிவர் அதுவும் செய்யவில்லை. அடியார்கள் தேடிப்போய், முனிவர் மறந்து போயிருந்தாலும் என்று முறையிட்டும் பார்த்தார்கள். ஆள் வாயேதிறக்கவில்லை. வாஜ்பேயி மௌனவிரதம் பிடிக்கிற நாளாகப் பார்த்து இவர்கள் போனார்களோ தெரியாது. என்னவானாலும் விழுந்தாலும் மண் ஒட்டாத நொன் ஸ்றிக் மீசைக்காரவீரர்கள்தானே. காலங் கெட்டுப்போய் காலில் விழுவதே பிழைப்பாகப் போய்விட்டது.

## ஒரு சிறுவர் கதை

ஒரு நாள் ஒரு பத்திரிகை முதலாளியும் நிருபரும் தெருவழியே போகும் போது ராணுவ பொலிசார் இருவரையும் மறித்தார்கள். முதலாளி தன்னை அடையாளப்படுத்தியதால் அவர்கள் அவரைப் போக அனுமதித்தனர். நிருபர் அவர் தனது எசமானர் என்று சொல்லிப்பார்த்தார். ஆனால் முதலாளியோ ஒன்றும் தெரியாத மாதிரி ஓடி விட்டார். கொஞ்ச நேரம் விசாரித்த பிறகு ராணுவ பொலிசார் நிருபரையும் போக அனுமதித்தனர்.

அலுவலகத்தில் நிருபரை அடுத்த நாள் கண்ட முதலாளி மிகுந்த உற்சாகத்துடன் அவரை வரவேற்று என்ன நடந்தது என விசாரித்தார். நிருபர் "உங்களைப் போல ஆளுக்காக ஏன் வேலை செய்கிறாய்? என்று கேட்டார்கள். என்னுடைய தலைவிதி என்றேன். உன்னை அடைத்து வைப்பதை விட அங்கேயே வேலைக்கு அனுப்புவது தான் நல்ல தண்டனை" என்று சொல்லி என்னை அனுப்பி விட்டார்கள் என்று சிரிக்காமலே சொன்னார்.

## இன்னொரு சிறைச்சாலைத் தாக்குதல்

கிருஷாந்தி வழக்கில் குற்றவாளியாகக் காணப்பட்டவரும் செம்மணிகள் புதைகுழிகள் பற்றி பேசியதன் மூலம் அரசாங்கத்திற்கும் படைகளுக்கும் ஒரு புதிய சிந்தனை உருவாக்கியவருமான ராஜபக்ஷ சிறைச்சாலையில் தாக்குதலுக்கு உள்ளானார்.

புதியபூமி ஓகஸ்ட் இதழில் இப்படி ஏதாவது அசம்பாவிதம் நடக்கலாம் என்று அச்சம் தெரிவிக்கப்பட்டிருந்தது. எதிர்பார்த்தபடியே நடந்துள்ளது. சம்பந்தப்பட்டவர் உயிர் பிழைத்தாலும் தகவல் தர அனுமதிக்கப்படுவாரோ என்பது தான் இனி உள்ள கேள்வி.

## காணாமற் போவோர்

முன்னாள் திருகோணமலைப் பாராளுமன்ற உறுப்பினரான தங்கத்துரையின் சாவை ஒட்டி அந்தப் பதவியை ஏற்ற திருகோணமலை உறுப்பினர் சம்பந்தன் ஊர் மக்களை காண்பது அரிதாகி வருகிறது. சொந்த அலுவல்கட்காக ஓரிரு மாதத்தில் ஒரு தடவை வந்துவிட்டுத் தலைமறைவாகும் இவரைத் திருகோணமலையிலிருந்து காணாமற்போனோர் பட்டியலில் சேர்க்கலாமா? இதே நபர் முன்பு 1983க்குப் பின்பு காணாமற் போய் சென்னையில் கண்டுபிடிக்கப்பட்டவராவார்.

## பின் மோசடித்துவம்

"மறுமலர்ச்சி இலக்கிய இயக்கம் ஈழத்தில் 1942ல் தோன்றவில்லை 1943ல் தான் தோன்றியது" என்று கண்டு பிடித்துள்ள ஒரு பத்திரிகையாளர்(?) அதோடு நிற்காமல் 1942 என்று எவரும் சொன்னது எல்லாம் ஒரு மோசடி என்று பிரகடனம் செய்துள்ளார். மோசடி என்றால் என்ன என்பதற்கு அவரே இலக்கணம் வகுத்து அவர் விரும்பாத எதையும் மோசடி என்று சொல்லிக் கொள்ளுவார்.

அவர் சொல்கிற 'மோசடி' எப்படியாவது இருந்து விட்டுப் போகட்டும். இலங்கையில் வருகிற வெவ்வேறு ஏடுகளில் வெவ்வேறு புனைபேர்களில் எதையாவது உளறிவிட்டு அவற்றை மறுத்து விமர்சனம் வருகிறபோது புனைபேரைத் தூக்கி எறிந்து விட்டு வேறு ஒரு பேரில் பழைய புராணத்தையே பாடுகிற மோசடியை விட மோசமான மோசடி ஏதேனும் உண்டா என்று தமிழ் வாசகர்கள் தான் சொல்ல வேண்டும்.

## விமர்சகத் தகைமை

சில வாரங்கள் முன்பு நடந்த ஒரு நூல் வெளியீட்டு நிகழ்வில் சி. வன்னிய குலம் அவர்கள் கைலாசபதிக்கும் பிறகு ஈழத்தில் அவருடன் ஒப்பிடத்தக்க ஒரு தமிழ் இலக்கியத் திறனாய்வாளர் உருவாக இல்லை என்ற விடயத்தை ஆணித்தரமாகவும் ஆதாரபூர்வமாகவும் புட்டுப் புட்டு வைத்தபோது தமது அசவுகரியத்தைச் சிலரால் தாங்கமுடியவில்லை. வன்னியகுலம் கூறிய முக்கிய உண்மை ஏதெனில் கைலாசபதி ஓர் தெளிவான இலக்கியக் கோட்பாட்டை முன்வைத்து தனது கருத்தை நேர்மையுடனும் ஐயத்துக்கிடமில்லாமலும் கூறி வந்ததாலேயே ஓங்கி நின்றார் என்பதாகும். 18-08-98 வீரகேசரியில் ஏதோ புலம்பியுள்ளவர் முதலில் விமர்சனம் என்றால் என்ன என்று விளங்கிக் கொண்டு எழுதினால் நல்லது.

நன்றி - நூலகத்திட்டம்




# புதிய பூமி

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

PUTHIYA POOMI புதியபூமி

S-47, 3வது மாடி, கொழும்பு சென்றல் சுப்பர் மார்க்கட், கொழும்பு 11, இலங்கை. தொ.பேசி. 435117, 335844


## இரத்தினபுரித் தாக்குதல்களும் தற்காப்பின் அவசியமும்

இரத்தினபுரி வேவல்வத்தை தோட்டத்திலும் அதன் அருகாமையில் உள்ள தோட்டங்களிலும் பேரினவாதப் பேயாட்டம் இடம்பெற்றுள்ளன. எட்டுக்கு மேற்பட்ட தோட்டங்களில் தீ வைப்பு, தாக்குதல்கள், வெட்டுகள், கொள்ளையிடல் பாலியல் வன்முறை போன்றன வெறித்தனமாக நடாத்தப்பட்டுள்ளன. இரண்டு தொழிலாளர்கள் கொல்லப்பட்டுள்ளார்கள். ஆனால் இறந்தவர்களின் எண்ணிக்கை கூடுதல். படுகாயம் பட்டவர்கள், தீக்காயங்கள் பட்டவர்கள் மருத்துவ மனைகளில். தொழிலாளர்களின் குடியிருப்புகளான லயன்கள் எரித்து நாசமாக்கப்பட்டுள்ளன. அதனால் உடமைகளுக்கு பாரிய இழப்பு அப்பகுதி தோட்டத் தொழிலாளர்கள் கடுமையான பாதிப்புகளுக்கு உள்ளாகி நிற்கதியாகி நிற்கின்றனர்.

கசிப்பு வியாபாரியினால் ஏற்பட்ட தகராறும் இரண்டு கொலைகளும் இரண்டு நாளில் பேரினவாத வெறியாக உருமாற்றப்பட்டிருக்கிறது. அந்த உருமாற்றத்தின் பின்னால் ஆளும் கட்சியின் அமைச்சர்கள் முதல் உள்ளூர் அரசியல்வாதிகள் வரை சம்பந்தப்பட்டுள்ளனர். ஒரு சிறு கும்பல் மட்டுமல்லாது பெரும் கூட்டம் பலநூறாகிச் சென்று தாக்குதல்களில் ஈடுபட்டுள்ளது. சம்பந்தப்பட்டவர்கள் மட்டும் குறிப்பிட்ட தகராற்றில் ஈடுபட்டிருந்தால் சொந்தப் பிரச்சனையாகி விட்டிருக்கும். ஆனால் நடந்ததோ வேறு. சொந்தப் பிரச்சனையும் தகராறும் இனவன்முறையாக மாற்றப்பட்டுள்ளது. அதில் ஆளும் கட்சியினர் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள். அதற்கு பொலிஸார் அனுசரணை வழங்கி தாக்குதல்களுக்கு வழிவிட்டுக் கொடுத்திருக்கிறார்கள்.

இலங்கையில் இன வன்முறை என்பது இலங்கைக்கே இயல்பான ஒன்றாகிவிட்டது. பேரினவாத வெறித்தனத்துடன் தமிழர்கள், மலையக மக்கள், முஸ்லீம்கள் என்போருக்கு எதிராக அவ்வப்போது இவ் இன வன்முறை இடம் பெற்று வருகின்றன. ஐக்கிய தேசியக் கட்சியின் பதினேழு வருடகால ஆட்சியில் தாராளமாகவும் மிக உக்கிரமாகவும் இனவன்செயல்கள் இடம் பெற்றன. அதற்கு அதன் தலைவர்களே வழிகாட்டினர். அத்தகைய இழிநிலை இன்றைய ஆட்சியில் இடம்பெறாது என்றே மலையக மக்கள் நம்பி இருந்தனர். அந்த நம்பிக்கை இன்று இரத்தினபுரி சம்பவத்தால் தகர்ந்து போயுள்ளது. வடக்கு கிழக்கில் யுத்தத்தின் பேரால் பேரினவாதத் தாக்குதல்கள் குறிப்பாக ஆயுதப்படையினரால் முன்னெடுக்கப்படுகிறது. ஆனால் யுத்தத்துடன் சம்பந்தமற்ற மலையகத்தில் சிங்கள மக்களில் பலநூறு பேர் பேரினவாத வெறியுடன் திரட்டபட்டு ஏவி விடப்பட்டுள்ளனர். இதனைத் தட்டிக் கேட்கும் வல்லமை ஆளும் கட்சியில் இருப்போருக்கு இல்லை. அவர்களுக்கு மட்டுமன்றி அந்த அரசில் அங்கம் பெற்று அமைச்சர்களாகி உள்ள மலையகத் தலைவர்கள் என்போருக்கும் இல்லை. அவர்களுக்கு இவையாவும் பழக்கப்பட்டவைதான். அன்று ஜே.ஆர். நான்கு நாடு தழுவிய இன வன்செயல்களை தமிழர்கள் அனைவருக்கும் எதிராக முன்னெடுத்த போதும் 'மலையகத் தந்தை'யும் அவர்தம் மைந்தர்களும் அவ் அரசாங்கத்தில் வீற்றிருந்தனர். இன்றும் அதே தந்தையும் மைந்தர்களும் மட்டுமன்றி பேரன்மாரும் இன்றைய அரசாங்கத்திலும் வீற்றிருக்கின்றனர். இவர்களால் எதுவும் ஆகப் போவதில்லை என்பதை மலையக மக்கள் உணருகின்றனர்.

மலையக மக்களுக்கு எதிரான வன்முறையைத் தடுத்து நிறுத்துவதற்கான வழிவகைகளை அரசியல் சமூக அடிப்படையில் நிதானத்துடன் சிந்தித்து முன்னெடுக்க முற்பட வேண்டும். பழைய உறைந்து போன நிலையில் உள்ள தொழிற்சங்க அரசியல் தலைமைகளிடம் எதிர்பார்க்காது புதிய தலைமுறையினர் ஆழமாகச் சிந்தித்து செயல்பட முன்வரல் வேண்டும். அத்தகைய சிந்தனைப் போக்கு சரியான அரசியல் மார்க்கமாகவும் உறுதியான தற்பாதுகாப்பு செயல்முறையாகவும் ஏனைய வழிகளிலான சமூக விழிப்புணர்வாகவும் அமைய வேண்டும். பரந்த மக்கள் நலன் சார்ந்ததும் இனவாதம் அற்றதுமான செயற்பாடுகள் அவசியம். அதேவேளை தனிநபர் குழுவாத அடிப்படையிலான அதிதீவிர நடவடிக்கைகள் எவ்வகையிலும் ஏற்றுக்கொள்ளப்படலாகாது. இதில் மிக விழிப்புடனும் முன்னெச்சரிக்கையுடனும் மலையக மக்கள் செயற்படுவது அவசியம்.

–ஆசிரியர் குழு

# ஜனாதிபதி புலிகள் தீர்வு

அ. பூபதி

**ஐ.நா. சபையிலும் அமெரிக்காவிலும் பேசி இனப்பிரச்சனைக்குத் தீர்வு காணஇயலாது. இலங்கை பல்லினங்கள் வாழும் நாடு என்பதை ஏற்றுக் கொண்டு இதய சுத்தியுடன் பேச முன்வரல் வேண்டும்.**

ஐ.நா. சபையின் 53வது கூட்டத் தொடரில் இலங்கை ஜனாதிபதி நீண்ட உரையினை நிகழ்த்தியிருக்கிறார். தனது உரையில் இலங்கையின் இனப்பிரச்சனை பற்றிய தமது நிலையினை எடுத்து விளக்கியிருக்கிறார். இலங்கையின் தமிழ் இனத்தவர்களுக்கு சில மனக் குறைகள் இருப்பது உண்மை என்றும் அவற்றை ஏனைய கட்சிகளின் இணக்கத் தோடு பேசித் தீர்ப்பதற்கு தயாராக இருப்பதாகவும் சுட்டிக் காட்டியுள்ளார். அத்தகைய தனது முயற்சிகளுக்கு விடுதலைப் புலிகள் தடையாக இருப்ப தாகவும் சுட்டிக் காட்டியுள்ளார். அவர்கள் வன்முறை மூலம் சகல முயற்சிகளையும் நாசப்படுத்தி வருவதாகவும் கூறி உள்ளார். அவர்களது நடவடிக்கைகளை சர்வ தேசப் பயங்கரவாதத்துடன் இணைத்து மேற்படி புலிகளின் உலகளாவிய செயற்பாட்டிற்கு சகல நாடுகளும் தடைவிதிக்க வேண்டும் எனக் குறிப்பிட்டார். இந்த விடயத்தில் இந்தியாவும், அமெரிக்காவும் எடுத்த நடவடிக் கையைப் பாராட்டியும் உள்ளார். இத்துடன் தமிழீழக் கோரிக்கையை கைவிட்டு ஆயுதங்களை வீசி எறிந்து விட்டு புலிகள் பேச்சு வார்த்தைக்கு வந்தால் அவர்களுக்காகத் தமது கதவுகள் திறந்தி ருக்கும் எனக் கூறியும் உள்ளார்.

ஜனாதிபதியின் உரையில் ஆக்க பூர்வமான கருத்துகள் எதுவும் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். ஆனால் உலக மன்றம் முன்பாக ஆற்றிய உரை என்ற வகையில் ஒரு வகை முக்கியத்துவம் இருக்கவே செய்கிறது. தான் இலங்கையின் அதி உயர் பீடமான ஜனாதிபதி பதவிக்கு வருவதற்கு முன்பு இலங்கையில் இனப்பிரச்சனை முக்கியத்துவம் பெற்றுள்ளது எனக்கூறி அதற்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பேன் என வாக்குறுதி வழங்கியவர். இன்று ஜனாதிபதிப் பதவியை நான்கு ஆண்டுகளாக அனுபவித்த பின்பு இனப் பிரச்சினையை மிகமிகக் குறைத்து தமிழர்களுக்கு சில மனக்குறைகள் என்ற அளவுக்கு சிறுமைப்படுத்தி கூறியுள்ளார். அதே போன்று புலிகள் இயக்கம் தமிழ் மக்களின் முதன்மைப் பிரதிநிதிகள் என்றும் கௌரவமான அரசியல் தீர்வின் அவசியம் பற்றியும் அன்று பேசிய ஜனாதிபதி இன்று புலிகளைப் பயங்கரவாதிகள் என்றும் அவர்கள் பேச்சுவார்த்தைக்கு வருவதானால் தமிழீழக் கோரிக்கை, ஆயுதங்கள் இரண்டையும் கைவிட்டு வரவேண்டும் என வற்புறுத்தி கூறியுள்ளார்.

ஜனாதிபதியின் உரையில் குறிப்பிட்டுள்ள மேற்படி விடயத்தில் உண்மைகளும் யதார்த்தங்களும் பிரதிபலிக்கவில்லை. இனப் பிரச்சினைக்கு நியாயமான தீர்வுக்கான ஆக்கபூர்வ கருத்துக்கள் எதுவும் இடம் பெறவில்லை. புலிகளை உலக அரங்கில் தனிமைப்படுத்தும் கோரிக்கை மட்டுமன்றி உலக மேலாதிக்க வல்லரசான அமெரிக்காவிடமும் மேற்கு நாடுகளிடமும் புலிகளை ஒழித்துக்கட்ட உதவுமாறு கெஞ்சிக் கேட்டுள்ளமையைத்தான் காண முடிந்துள்ளது. இது இனப்பிரச்சினைக்கு ஏற்றுக் கொள்ளத்தக்க நியாயபூர்வமான ஒரு தீர்வை ஜனாதிபதி சந்திரிகா ஏற்படுத்துவார் என இன்றும் நம்பிக் கொண்டிருப்பவர்களின் மண்டையில் பலத்த பொல்லடியைத்தான் வழங்கியுள்ளது. அதே வேளை பேச்சுவார்த்தை அரசியல் தீர்வு வெறும் ஏமாற்றேதான் என்பதையும் அப் பேச்சுப் பிரகடனம் செய்துள்ளது. இது பேரினவாத யுத்தவாதிகளுக்கு மிகவும் களிப்பூட்டும் ஒன்றாக அமைந்துள்ளது. அதற்கு உதாரணமாக அண்மையில் பயங்கரவாத எதிர்ப்பு முன்னணியினராகிய பேரினவாதிகள் கொழும்பில் ஒரு ஊர்வலத்தை நடத்தியமை குறிப்பிடத்தக்கதாகும். புலிகளுடன் நிபந்தனையுடனோ நிபந்தனை இன்றியோ பேசக்கூடாது என்றும் புலிகளை அழித்தொழித்து சிங்கள இனத்தையும் பௌத்த மதத்தையும் காப்பாற்ற வேண்டும் என ஆவேசத்துடன் அவர்கள் முழங்கி இருக்கிறார்கள்.

அதேவேளை புலிகள் இயக்கம் தனது நிலைப்பாட்டை ஏற்கனவே வெளிப்படுத்தியுள்ளது. திம்புக் கோரிக்கையின் அடிப்படையிலும் மூன்றாவது தரப்பு மத்தியஸ்துடனான பேச்சு வார்த்தையிலும் கலந்து கொள்ளத் தயாராக இருப்பதாக அறிவித்துள்ளனர். இதனை உற்று நோக்கும் போது பேச்சு வார்த்தைக்கான ஒருவகை நிபந்தனையாகவே காண முடிகிறது. மறுபுறத்தில் புலிகளுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடாது இனப்பிரச்சினைக்கான தீர்வைக் காண முடியாது என்பதும் அதனையும் நிராகரித்து ஒரு தலைப்பட்சமாக தீர்வு எதனையும் திணிக்க முற்பட்டால் நிலைமைகள் மேலும் சிக்கலடைந்து மோசமடையவே செய்யும். அதற்கான அண்மைய உதாரணமே குடாநாட்டுக்கான உள்ளூராட்சித் தேர்தலும் அதன் பின்னான நிலைமைகளும் ஆகும். விடுதலைப் புலிகளின் நிலைப்பாடும் அவர்களது சகல ராணுவ நடவடிக்கைகளும் கண்களை மூடிக்கொண்டு யாவும் சரி என்று ஏற்றுக் கொள்ளத்தக்கன அல்ல. அவர்களது ஜனநாயக மறுப்பு செயல்பாடுகளும் தனி இயக்கச் செயல் முறைகளும் விமர்சனத்திற்கும், விவாதத்திற்கும் உரியனவாகும். ஆனால் இதே விடயங்களை மட்டும் வைத்து புலிகள் இயக்கத்தின் போராட்ட நிலையை நிராகரிக்க முடியாது. அவர்களை ஒட்டு மொத்தமாக கண்டித்து நிராகரித்து விட்டு தேசிய இனப்பிரச்சனைக்கு எத்தகைய தீர்வை எவராலும் கண்டு கொள்ள வியலாது. அவர்களது அரசியல் நிலைப்பாட்டில் போராட்ட தந்திரோபாயங்களில் எதிரிகள் யார்? நண்பர்கள் யார்? என்பதை வரையறை செய்வதில் அவர்களிடம் முழுமையான மாற்றம் வேண்டும். அத்தகைய நிலைப்பாடு தேசிய இன விடுதலைப் போராட்டத்தின் சரியான பாதைக்கும் தேசிய இனப்பிரச்சனையின் தீர்வுக்கும் பங்களிப்பை வழங்க முடியும்.

யுத்தம் நிறுத்தப்பட்டு புலிகள் இயக்கம் உள்ளடங்கலாக சம்பந்தப்பட்ட சகலரும் கலந்த கொள்ளும் நேர்மையான பேச்சுவார்த்தை ஒன்றிற்கான முன் முயற்சிகள் முன்னெடுக்கபட வேண்டும். இதனை இதய சுத்தியுடன் முன்னெடுப்பதற்குத் தேவைப்படும் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் பெறப்படல் வேண்டும். அத்தகைய மத்தியஸ்தம் தன்னலங்கள் கருதாத உள்நோக்கங்கள் கொண்டிராத ஒரு மத்தியஸ்தமாக அமைதல் வேண்டும். அத்தகைய பேச்சுவார்த்தையில் இதுவரை தமிழ் மக்கள் சார்பாக முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளும் முன்வைக்கப்பட்டு நடைமுறைக்கு கொண்டு வரப்படாத தீர்வுகளும் பரிசீலிக்கப்படல் வேண்டும். அவையாவும் இன்றைய இலங்கையின் யதார்த்த சூழலில் வைத்து நிதானத்துடனும் நீண்டகால நோக்குடனும் நோக்கப்படல் வேண்டும் அத்தகைய பேச்சுவார்த்தையும் தீர்வும் மட்டுமே இந்நாட்டையும் சகல தேசிய இனங்களின் இருப்பையும் வளர்ச்சியையும் உத்தரவாதப் படுத்தக் கூடியவையாகும்.

இத்தகைய ஒரு நிலைப்பாட்டை ஆளும் வர்க்க சக்திகளும் அவர்களின் பின்னால் உள்ள பேரினவாத சொத்துடைய சக்திகள் மட்டுமன்றி அந்நிய ஏகாதிபத்திய மேலாதிக்க சக்திகளும் தாமாக முன்வந்து எடுத்துக்கொள்ள மாட்டார்கள். இதற்கு மிகப் பலம் வாய்ந்த மக்கள் திரள் இயக்கங்கள் கட்டியெழுப்பி முன்னெடுக்கப்படுவது அவசியமாகும். இதனை சாத்தியமாக்கும் பொறுப்பும் வல்லமையும் கொண்ட சக்திகளாக நேர்மையான இடதுசாரி முற்போக்கு ஜனநாயக சக்திகள் தமக்கு முன்னால் உள்ள சகல தடைகளையும் தாண்டி பொறுப்புடன் முன் செல்ல வேண்டும். அதற்கான ஆரம்ப அறிகுறிகளை ஆங்காங்கே ஒளிக்கீற்றுக்களாகத் தென்பட ஆரம்பித்து விட்டன. அதனைச் சக்திப் படுத்துவது இன்றைய உடனடி அவசியமும் நாளைய தேவையுமாகும்.

நன்றி - நூலகத்திட்டம்



## குடாநாடு இழக்காத சில போக்குகள்

# அடுத்த நூற்றாண்டிலும் நீடிக்கும் அவலம்.

யாழ் குடாநாட்டின் இன்றைய நிலை மிகவும் சோகமானது. சமாதான சூழலும் இயல்பு வாழ்க்கையும் திரும்பாத நிலை. முற்றிலும் இராணுவ நிர்வாகத்தின் கீழ் மக்கள் பலதரப்பட்ட துன்பங்களை அனுபவித்து வருகின்றனர். இருந்ததை விடப் பரவாயில்லை என்று கூறப்படுகிறதே தவிர எந்த நேரம் எது நடக்குமோ என்ற அச்ச உணர்வும் அன்றாட வாழ்வுக்காக அலைந்து உலையும் நிலை நீடிக்கிறது.

இவை ஒருபுறம் நீடித்து வரும் அதேவேளை மக்கள் மத்தியிலான நடைமுறைகளும் முரண்பாடுகளும் நாளாந்தம் பூசல்களாகவும் பிரச்சினைகளாகவும் வளர்ந்து செல்கின்றன. யாழ்ப்பாண சமூகத்திற்கென சில விஷேட இயல்புகள் உள்ளன என்று ஏற்கனவே கூறப்பட்டு வந்துள்ளது. சுயநலம், சொத்துச் சேர்த்தல், சமூக அக்கறையின்மை, பொதுநலத்தை உதாசீனம் செய்தல், சாதிய, சீதனக்கண்ணோட்டம் போன்றவற்றை குறிப்பிடலாம். மேற்கூறிய அனைத்தும் ஒட்டு மொத்தமாக யாழ்ப்பாண சமூகத்திற்கு ஏகப்பொருத்தம் பெற்றவை என்று கூறிவிட முடியாது. இவை வெவ்வேறு அளவுகளில், பல்வேறு வர்க்கப் பிரிவுகளில் இருந்து வருவனவாகும்.

இவை அனைத்தும் கடந்த இரண்டு தசாப்த காலத்தில் எவ்வகையிலும் அடிப்டுப் போகவில்லை. உள்ளார்ந்த நிலையில் அவை வெவ்வேறு வடிவங்களில் கெட்டியாகியே வந்துள்ளன. சில நிர்ப்பந்தங்களால் வலுவிழந்தவை போன்று தோற்றம் காட்டிய அனைத்தும் இன்று தத்தமது சுயரூபத்தை வெளிக்காட்டி நிற்கின்றன. சுயநலம் சார்ந்த விடயங்கள் முனைப்பாகியுள்ளன. அடுத்தவர் வீட்டில் உள்ளவற்றை அபகரித்தல், காணி எல்லைகளைக் கூட்டுதல் தமதாக்கிக் கொள்ளல் தாராளமாக இடம் பெற்று வருபவை. இன்றைய சூழலைப் பயன்படுத்தி சிறிய வியாபாரி முதல் பெரும் வியாபாரிவரை பதுக்கல், கள்ளச் சந்தை, கொள்ளை லாபம், அடிப்பதில் போட்டி போட்டு செயல் படுகிறார்கள். ஒரு பகுதியினர் அவ்வப்போது யார் யாரைச் சார்ந்தும் சேர்ந்தும் நின்றால் சம்பாதித்துக் கொள்ளலாம் என்பதை சுழியோடிக் கண்டுபிடித்து தம்மை வேகமாக வளர்த்துக் கொள்கிறார்கள்.

அதே போன்று சமூகச் சீரழிவுகளுக்கு மேன்மேலும் வழி திறந்துவிடப் பட்டுள்ள நிலையைச் சுட்டிக்காட்டாது விடமுடியாது. கசிப்பு, போதைவஸ்து பாவனை, விபச்சாரம் பரவியுள்ளன. பெரியதிரை சின்னதிரைகள் தாராளமாகியுள்ளதுடன் நீலப் படங்கள் சிறியோரையும் பெரியோரையும் படுபாதாளத்திற்கு இட்டுச் செல்வதாக மக்கள் மத்தியில் பேசிக்கொள்ளப் படுகிறது. தமக்குள் சரி பிழைகளை பேசித் தீர்த்துக் கொள்ள முடியாது பொலீஸ் நிலையங்களுக்குச் சென்று சிங்கள மொழி விசாரணையில் சிக்கித் தவிக்கிறார்கள். சிலர் அங்கும் தமது சொல்வாக்கைச் செலுத்தி தங்கள் பக்கக் காரியங்களைச் செய்து கொள்கிறார்கள்.

சாதியம் புதிய புதிய வடிவங்களில் தன் வினையாற்றுகிறது. யார்? எந்தப் பகுதி? இன்னாருக்குச் சொந்தமோ? என்ற கேள்விகள் இன்றும் போது இடங்கள் அரசாங்க காரியாலயங்கள் கல்வி நிறுவனங்களில் கேட்கப் படுகிறது. திருமணப் பேச்சின் பொது உள்நாட்டில் கேட்கப்பட்ட இக் கேள்விபதில்கள் இன்று தமிழர் வாழும் பூமிப் பரப்பு எங்கும் கேட்கப்படுகிறது. ஆனால் அரசாங்க அல்லது பொது நிறுவனங்களில் கேட்கப்படுவதும் அதன் அடிப்படையில் காரியங்கள் கையாளப்படுவது தான் கவனத்திற்கும் விசனத்திற்கும் உரியது.

இவை மட்டுமின்றி பிரதேச ஊர் ஊறவு என்பதற்கு முதன்மை வழங்கி விடயங்கள் வழிநடத்தப் படுகிறது. பேரினவாத ஒடுக்கு முறையின் கீழ் மிதிபட்டுக் கொண்டே இவற்றையெல்லாம் நுணுக்கமாக முன்னெடுக்கப் படுகிறது. யாழ் பல்கலைக் கழகத்தில் வழங்கப்படும் பலவகைப்பட்ட நியமனங்களில் ஒரு குறிப்பிட்ட பிரதேசத்திற்கு முன்னுரிமை வழங்கப்படுவதாக சில ஊழியர்கள் குறைப்பட்டுக் கொண்டதைக் கேட்க முடிந்தது. உபவேந்தர் முதல் உயர் பதவிகளில் உள்ளவர்கள் நம்ப ஊர்காரர்கள் தானே எனப் பகிரங்கமாகவே, ஒரு உயர் பதவி வகிப்பர் சில காலத்திற்கு முன் பெருமை பேசியதையும் அவ் ஊழியர் சுட்டிக்காட்டினார். இவை தான் யாழ் குடா நாட்டின் யதார்த்தம் என்றால் நாம் எங்கே நிற்கிறோம்? எங்கே செல்லப் போகிறோம் எதிர் காலம் தான் என்ன? என்ற கேள்விகளை எழுப்புவதில் தவறு இருக்க முடியாது.

இன்று குடா நாட்டில் முழு வடக்கு கிழக்கிற்கும் முதன்மையாக தேவைப்படுவது நியாயமான அரசியல் தீர்வும் அதன் வாயிலான சமாதானமும் இயல்பு வாழ்க்கையுமாகும். அத்துடன் குடாநாட்டு உயர் வர்க்க–உயர் குடிச்சிந்தனைகளிலும் செயல் பாடுகளிலும் பெருமளவு மாற்றங்கள் அவசியம். அவை தானாக ஏற்பட்டுவிட முடியாது. தவறானதும் ஊறிப்போனதுமான யாழ்ப்பாண உயர் குடிச் சிந்தனைகள் செயற்பாடுகளை பார்த்தொழுகும் நடைமுறைகளைச் சாதாரண மக்கள் பிரிவினர் நிச்சயம் மறுதலிக்க வேண்டும். அவற்றுக்கான விழிப்புணர்வும் கல்வியூட்டலும் அடிநிலைகளில் இருந்து வளர்க்கப்படல் வேண்டும். இந்த நூற்றாண்டில் செய்யத் தவறிய அனைத்தையும் அடுத்த நூற்றாண்டில் செய்வதற்கு திட்டமிடப் படுவது அவசியம்.

சி. முருகவேள்

## செம்மலர்களின் வீதி நாடகம்

மாகாண சபை தேர்தலை அடிப்படையாக கொண்டு பிற்போக்கு கட்சிகளும், தொழிற்சங்கங்களும் பொய் வாக்குறுதிகளையும், பம்மாத்து விளையாட்டுகளையும், ஏமாற்று 'சுத்துமாத்து' வேலைகளையும் செய்து வருகின்ற சூழலில், மக்கள் என்ன செய்ய வேண்டும் என்பதை மிக தெளிவாக கூறும் வகையில் செம்மலர்கள் குழுவினர் தோட்டங்கள் தோறும் வீதி நாடகங்களை நடத்தி வருகின்றனர்.

வரலாறுகள் தோற்பதில்லை, தட்டு, இது நம்ம கத, எட்டடிக்குள்ளே. போன்ற நாடகங்களை ஆக்கி நெறிப்படுத்திய எஸ்.இராஜேந்திரனின் வழிகாட்டலில் இவ்வீதி நாடகங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

1948இலிருந்து இன்றுவரை பதவியிலிருந்த அரசாங்கங்கள் மலையக மக்களுக்கு செய்தது என்ன என்பதையும், மலையக பிற்போக்குத் தொழிற்சங்கங்களால் சாதிக்கப்பட்டவை என்ன? என்பது பற்றிய விடயங்கள் பாடல்கள், நடிப்பு, இசை போன்றவற்றால் உணர்வு பூர்வமாக வெளிப்படுத்திப்படுகின்றன.

12 நடிகர்கள் பங்கு ஏற்கும் வீதி நாடகம், ஏறத்தாழ 25நிமிடங்களுக்கு விவாத அடிப்படையில் பலவற்றை வெளிச்சத்துக்குக் கொண்டு வருகின்றது. 'ஜால்ரா'காரன், தோட் இளைஞன், வயதானவர் பாத்திரங்கள் மிகச்சிறப்பாக இருந்தமையால் நேரடியாகவே மக்கள் பாராட்டுக்களைத் தெரிவித்தனர்.

சாமிமலை மஸ்கொலியா பகுதியில் பிரபல ஆசிரியர்களான வெ.இராமையா, வே,இராமர் ஆகியோரின் தலைமையில் அட்டன் பொகவந்தலாவை பகுதியில் பிரபல நாடக இயக்குனர் எஸ்.வாசுதேவன் மற்றும் ஆசிரியர் எம்.சண்முகராஜா தலைமையிலும், தலவாக்கலை நுவரெலியா பகுதியில் ஆசிரியர்களான எஸ்.மலர்ராஜ், பி.சந்திரகுமார் தலைமையிலும். இராகலை, உடபுசல்லாவ பகுதியில் எம்.தமிழ்வாணன், எம்.சத்தியமூர்த்தி தலைமையிலும் ஐபோரஸ்ட், கந்தப்பளை பகுதியில் எஸ்.பன்னீர்செல்வம், எம்.மகேந்திர பிரகாஸ் ஆகிய ஆசிரியர்கள் தலைமையிலும் டயகம, அக்கர பத்தனை பகுதியில் எஸ்.குமரேசன், தலைமையிலும் குழுக்கள் அமைக்கப்பட்டு வீதி நாடகங்களை நடத்துவதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன. இதற்கு முன்னோடியாக நுவரெலியா, ஐபோரஸ்ட் பகுதியிலும், சாமிமலையிலும், வீதிநாடகங்கள் பலதோட்டங்களில் நடத்தப் பட்டுள்ளன. வீதிநாடகங்களை. பொது மக்கள் ஆர்வத்துடன் பார்த்து வருகின்றனர். வீதி நாடகத்தில் வரும் சண்டைக் காட்சியினை மக்கள் வியப்புடன் பார்த்து புகழ்ந்துள்ளனர். மலையக மக்களுக்கு பல்வேறு விடயங்களை மீள ஞாபகப்படுத்தி யூ.என்.பி, பொதுஜன ஐக்கிய முன்னணி. கடந்த காலத்தில் மலையக மக்களுக்கு எதிராக செயற்பட்ட விதத்தை உணர்வுடன் எடுத்துக்காட்டி, மலையக பிற்போக்கு தொழிற் சங்கங்கள் மக்களுக்கு இழைத்த துரோகத்தை தோலுரித்துக்காட்டும் இந்த வீதிநாடகங்கள் எல்லா தோட்டங்களிலும் பலமுறை இடம்பெறுவது அவசியம் என பலர் அபிப்பிராயப்படுகின்றனர்.

மலையக கலைஞர்கள், எழுத்தாளர்கள் என்று கூறப்படுபவர்கள் மேற்கொள்ளும் ''மேசைப்புரட்சி'' 'தேயிலை கறைபடியா முத்துக்கள்' என்பவற்றுக்கு அப்பால் மக்களின் தேவையறிந்து மக்களுக்காக கலைப்படைத்து. மக்கள் முன்னே செல்லும், செம்மலர்கள் குழுவிலுள்ள ஆசிரியர்கள், தொழிலாளர்கள், இளைஞர்கள், பாடசாலை மாணவர்களை மக்கள் மனதார பாராட்டுவது வியப்புக்குரியதல்ல.

அரசியல் விடயங்களால் மட்டுமின்றி. சமூக சீர்திருத்த விடயங்களில் உதாரணமாக, தற்கொலை, வீட்டுவேலைகளுக்குச் செல்லல், கல்வி போன்ற விடயங்களாலும் வீதி நாடகங்களை தயாரித்து மக்கள் முன் கொண்டு செல்வது அவசியமாகும்.

## மலையக மாணவர்களின் வளர்ச்சிக்கு

மாணவரின் வளர்ச்சிக்கு ஆசிரியரும் பெற்றோருமே பெரும் பங்களிப்பு தரவேண்டும். பெற்றோர் ஆசிரியருடன் மிகவும் நெருங்கிய தொடர்பு வைத்துக்கொள்ள வேண்டும். அப்பொழுதே மாணவர்களுக்கு தேவையான கல்வியை முறையாக வழங்க முடியும். மாணவர்களை ஒரு நல்ல நிலைக்குக் கொன்டுவருவது ஆசிரியரின் கடமையாகும்.

மலையகத்தில் உள்ள பெற்றோர்கள் பெரும்பாலும் கல்வி வளர்ச்சி அற்றவர்களாக உள்ளப்டியால் ஆசிரியர்கள் அவர்களை அரவணைத்து தங்கள் பிள்ளைகளின் கல்வி சம்பந்தமாக எப்படி குழந்தைகளை வசப்படுத்தி கல்வியில் ஊக்கமளிக்க வேண்டும் என மனோவியல் ரீதியாக ஆலோசனை கூற வேண்டும். இதனால் அவர்களுக்கு தமது குழந்தைகளின் கல்வியில் ஆர்வமாகப் பங்கெடுப்பார்கள். அதைவிடுத்து ஆசிரியர் பெற்றோரை புறக்கணித்தால் குழந்தைகள் மத்தியில் கல்வி வளர்ச்சியை காணமுடியாது. சில பகுதிகளில் சென்று ஏன் பிள்ளைகளின் படிப்பை தொடராமல் இடைநடுவில் வேலைக்கனுப்புகிறீர்கள் என கேள்வி எழுப்பிய போது அவர்கள் ''இவனை எவ்வளவு கஸ்டப்பட்டு படிக்க வைத்தாலும் இவன் படிக்க மாட்டான்'' என்கிற பதில் வெளியாகியது. இவ்விடயத்தில் ஆசிரியரை குறை கூற முடியாது. காரணம் பாடசாலைகள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கி நிற்கின்றன. அதேவேளை பெற்றோர்களும் இவன் படிக்க மாட்டான் என்று குறை கூறாமல் சக மாணவர்களின் உதவி பெற்று படிக்க ஆலோசனை கூறவேண்டும். இதனால் மாணவர்களிடையே ஆற்றல் வளரும் ஒற்றுமை ஓங்கும் பொறாமை நீங்கும்.

இப்பொழுது புதிய கல்வி முறை அறிமுகப்படுத்தப் போகிறார்கள். கல்வி பாதிப்படைகிறது. தற்போதுள்ள கல்வி முறையே மாணவர்களுக்கு ஒழுங்காக போய் சேராமல் இருக்கிறது. இதனால் புதிய கல்வி முறையை இலகுவாக்கி ஆசிரியர்கள் மாணவர்களுக்கு போதிக்க வேண்டும்.

ஒரு சில ஆசிரியர்கள் நகரத்தில் பணம் வசூலித்து கல்வியை வியாபாரம் போல் நடத்துகிறார்கள். நகரத்தில் அவர்களுக்கு போட்டி ஏற்பட அவர்கள் தோட்டப் புறங்களுக்கு செல்கிறார்கள். சென்று தம் வியாபாரக் கல்வியை தொடர்கிறார்கள். இதனால் பயனடையப்போவது மலையக தோட்டப்புற மாணவர்கள் அல்ல. மலையகத்தில் உள்ள செல்வந்தர்களினதும், வியாபாரிகளினதும் பிள்ளைகளே பயனடைகிறார்கள். இதனால் சாதாரண மாணவர்களுக்கு ஒழுங்கான கல்வியை' பெறமுடியாத நிலைதான்.

ஆசிரியர்கள் பெற்றோர்களை அழைத்து இவ்விதமான விடயங்களை எடுத்துக்கூற வேண்டும். இன்றைய நிலையில் ஆசிரியர்களால் இதைத்தான் செய்ய முடியும். இப்படி செய்வதால் சில ஆசிரியர்களிடம் உள்ள ஒரு குறிப்பிட்ட மாணவனை மட்டும் நன்றாக கவனிக்கும் பழக்கம் மாறிவிடும். ஆசிரியருக்கு பல வழிகளில் பிரச்சினைகள் இருந்துவருகிறது. சில ஆசிரியர்கள் பாடசாலைக்கு வெகுதூரத்தில் இருந்து வருகிறார்கள். இந்நிலை மாறவேண்டும். அவர்களுக்கு பாடசாலைக்கு அருகிலேயே இருப்பிடம் அமைத்து தரவேண்டும்.

மலையக மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு ஆசிரியர்களும் பெற்றோர்களும் பரஸ்பரம் கலந்து பேசி செயல்படுவதைதான் விரும்புகின்றோம்.

**சமூகப்பிரியன்**
ஆண்டு–8, ஹட்டன்.

## என்.ஜீ.ஓ ச் சுதந்திரம்

தமிழகத்து சமகால நாடகத்துறையில் முக்கியமான ஒருவரான மங்கை இலங்கை வந்து போகுமுன் கொழும்பில் நடத்திய கருத்தரங்கில் நாடகத்தின் சமூக–அரசியல் பார்வைகள் பற்றிக் கூறியவை அங்கு வருகைதந்த பல தன்னார்வக்குழுக்காரருக்கு பிடிக்க வில்லை. ஆயினும், மங்கை தான் கட்சி அரசியலிலிருந்து ஒதுங்கி இருப்பதால் தனக்கு அதிக சுதந்திரம் இருப்பதாகக் கூறியபோது அவர்கள் முகம் மலர்ந்தது. அதற்கும் பின்னர் கருத்துரைத்த இன்னொருவர், கட்சி அரசியல் வேண்டாம் என்றால் என்.ஜீ.ஓ அரசியல் தான் மிஞ்சும் என்று காட்டமாகச் சொன்னதை அங்கிருந்த என்.ஜீ.ஓ கூட்டத்தால் தாங்க முடியவில்லை. முடிவில் கூட்டத்துக்குத் தலைமை வகித்த என்.ஜீ.ஓ. அம்மணி, ''என்ஜீஓ சேவை நாட்டுக்குத் தேவை'' என்ற ஒரு பிரகடனத்துடன் கூட்டத்தை முடித்து வைத்து வாடிய முகங்களில் ஒரு சொட்டு மலர்வை உண்டாக்கி ஆருளினார்.

நன்றி - நூலகத்திட்டம்



# இந்துத்துவ அச்சுறுத்தலுக்கு எதிராக நான்கு நூல்கள்

விமர்சனம்

தேசபக்தன்



நடவடிக்கையாகவே "வகுப்புவாதமும் மதச்சார்பின்மையும். பண்பாடு–மதம்–தத்துவம்" என்ற தலைப்பில் நான்கு நூல்கள் ஒரு தொகுதியாக "சவுத் விஷன்" வெளியீட்டாளர்களால் வெளியிடப் பட்டுள்ளன. முதலாவது நூல் "வகுப்புவாத அச்சுறுத்தலும் மதச்சார்பின்மை சவால்களும்" வரலாற்றியலாளர் கே.எஸ். பணிக்கருடைய எழுத்திலானது. இது முதலில் 1996 முடிவில் ஆங்கிலத்தில் வந்தது. மிகவும் பொறுப்புணர்வுடன் மதச்சார்பின்மை எனறால் என்ன, அதன் தேவை என்ன, அதனை நடைமுறை படுத்துவதற்கான வழி என்ன என்ற தேடல்களை அடுத்து வகுப்புவாதம் எவ்வாறு உருவாக்கப்பட்டு வளர்க்கப்படுகிறது எனவும் அதை எதிர்கொள்வதற்கான வழிமுறைகளும் விரிவுபடுத்தப் பட்டுள்ளன. நூலின் இறுதிப் பகுதி "அயோத்தி" பற்றியது. பல இந்துத்துவ வரலாற்றுப் பொய்கள் ஆதாரத்துடன் தகர்க்கப்பட்டுள்ளன. இவ்வாறான மதவாத வரலாற்றுத் திரிப்பு இந்தியாவில் மதச்சார்பற்ற ஜனநாயகத்துக்கு எவ்வாறு முடிவு கட்டிவிடும் என்ற பணிக்கரது விளக்கம் ஈழத்தில் சிங்கள பௌத்த மதவாதம் பற்றிய ஒரு பலமான எச்சரிக்கையாகவும் வாசிக்கப் படலாம். அதே வேளை, இங்கும் இந்துத்துவத்தின் நகங்கள் பலவேறு இடங்களில் தென்படுகின்றன. இந்துத்துவ ஆன்மிகக் குண்டு

உள்ளாகும் வரலாறு' பற்றி 1989ல் வரலாற்றுப் பேராசிரியர்கள் எழுதிய அறிக்கை ஒன்றின் தமிழாக்கம். அடுத்த கட்டுரை, ராம ஜென்ம பூமி பாபர் மசூதி வழக்கு பற்றிய முக்கியமான தகவல்களை உள்ளடக்கி நன்கறியப்பட்ட வழக்குரைஞர் ஏ.ஜி.நூரானியால் எழுதப்பட்டது. மூன்றாவதாக வருவது வி.பாபு சங்கப்பரிவாரத்தின் வரலாற்றுத் திரிப்பு பற்றி எழுதியது. புராதன இந்திய வரலாறு கூட இந்துத்துவ வாதிகளால் எவ்வாறு திரிக்கப்படுகிறது என்பதை இக்கட்டுரை சுருக்கமாக விளக்குகிறது. நான்காவதாக வருவது சிவசேனை பற்றி ஜயந்த் லீலே 1993ல் எழுதியது. சிவசேனை ஒரு குறுகிய மராத்தி தேசியவாத ஆரம்பத்தினின்று தொடங்கி எவ்வாறு இந்துத்துவ மதவெறிக் குடும்பத்தின் ஒரு முக்கிய உறுப்பாக பரிமாணமடைந்தது என விளக்கப்பட்டுள்ளது. ஐந்தாவது கட்டுரை 'பாஸிஸம்: பழசும் புதுசும்' என்ற தலைப்பிலானது. கிராம்ஷியின் ஆழமான ஆய்வுகள் மிகவும் துல்லிய முறையில் அய்ஜஸ் அகமத் என்பவரால் 1995ல் ஒரு தொடர்கட்டுரையாக எழுதப்பட்டு இப்போது தமிழாக்கப்பட்டுள்ளது. இதற்கு முன்பு கிராம்ஷி பற்றிய தடித்த ஒரு நூல் இதே நூல் வெளியீட்டாளரிடமிருந்து வந்ததை நினைவுகூரும் போது, அந்த நூலோ நான் பார்த்த வேறு எந்தத் தமிழ் கட்டுரையோ இதுவரை கிராம்ஷி

நடவடிக்கைக்கான கையேடு' அஜித் முறிக்கன் தொகுத்தளித்த இந்த நூல் 1997 டிசெம்பரில் தொகுக்கப்பட்டு 1998ல் பூவுலகின் நண்பர்களால் தமிழாக்கப்பட்டது. இது பரவலான வாசிப்பை மனதிற்கொண்டு எழுதப்பட்ட கட்டுரைகளின் தொகுப்பு. கே.எம்.பணிக்கர் எழுதிய 'வகுப்புவாதம்: ஒரு பொதுவான பார்வை' வரலாற்றியலாளர் ரொமிலா தப்பரின் 'வகுப்புவாதமும் வரலாறும்' ஆகியன இந்துத்துவ பிரச்சினைக்கும் அப்பால் சென்று வரலாறு பற்றிய பயனுள்ள சில பார்வைகளையும் முன்வைக்கின்றன. பெருமரபு, சிறுமரபு என்று ஏதோ பேசும் பின்னமைப்பியல் சிந்தனை குழப்பக்காரர்களும் இவற்றை வாசிப்பதில் பயனிருக்கலாம். அடுத்த பகுதியில் முஸ்லிம்கள் பற்றி வழங்கும் பல பேரினவாத ஐதிகங்கள் தர்க்கப்படுகின்றன. ஃபாஸிஸத்துக்கும் இந்துத்துவத்துக்கும் உள்ள முக்கிய ஒற்றுமை வேற்றுமைகள் நமது கவனமான ஆய்வுக்கு உட்பட வேண்டியன. முன்றாம் பாகம் மதச்சார்பற்ற சமூகங்களை கட்டியெழுப்பல் பற்றியும் நான்காவது மதச் சார்பின்மை நோக்கில் கலாசார அணுகுமுறைகள் பற்றியும் கூறும் சுருக்கமான பகுதிகள். நூலின் இறுதியில் ஆதார நூல்களும் ஒலி–ஒளி ஊடக வெளியீடுகளும் பட்டியலிடப்பட்டுள்ளன.

நூலில் சில தமிழாக்கக் குறைபாடுகள் இடையிடை தலை நீட்டினும் வாசிப்புக்கு இடைஞ்சலாக இல்லை என்பேன். சில கட்டுரைகளுடன் வரும் மதிப் பீடுகளுடனும் முனைப்புகளுடனும் உடன்படுவது இயலாது போயினுங் கூட ஒட்டுமொத்தமாக பார்க்கும் போது, இன்றைய தமிழக சூழலில் திராவிடக் கட்சிகளின் தில்லு முல்லுகளும் பெரியாரியம் என்ற பேரில் மக்களைக் குழப்பிச் சாதிய அரசியல் மூலம் லாபம் சம்பாதிக்கும் போக்கும் இந்துத்துவ அபாயத் துக்கு எதிரான ஒரு வலிய அணியைக் கட்டிஎழுப்ப உதவ மாட்டா என்பது தெளிவு. அதைச் செய்யும் பொறுப்பை இடதுசாரி இயக்கங்களே மேற்கொள்ள முடியும். இந்த வகையில் இத்தொகுதியின் வரவிற்குப் பின்னால் நின்று செயற்பட்டதில் மாக்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பணியை நாம் பாராட்டாது விடமுடியாது. மதச்சார்பின்மை பற்றி இந்நூல்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள அணுகுமுறை தேசிய இனப்பிரச்சனை பற்றியும் இந்திய இடதுசாரிக் கட்சிகளால் அதே அளவு நிதானத்துடனும் தெளிவுடனும் நோக்கப் படுமாயின் இந்திய இடதுசாரி இயக்கமும் அதனால் மிகுந்த நன்மை அடையலாம்.

(வகுப்புவாதமும் மதச்சார் பின்மையும்: பண்பாடு –அரசியல் – தத்துவம். 4நூல்கள் சவுத் விஷன், 4 தாயார் சாகிப் தெரு, 2வது சந்து, சென்னை 600 002. ரூபா.225) (இலங்கையில் கொழும்பு வசந்தத்தில் பெறலாம்)

இந்தியாவின் சமகால அரசியலின் யதார்த்தம் இந்துத்துவம். இந்தியாவின் பல்வேறு தேசிய இனங்களையும், சிறுபான்மை இனப்பிரிவுகளையும், பல்வேறுபட்ட சமுதாய வேறுபாடுகளுக்கும் ஒன்றாக இணைந்து வழிநடத்த இந்திய முதலாளிய அரசியல் தலைமையினால் இயலாது என்பதை 50வருட கால சுதந்திர இந்திய வரலாறு காட்டியுள்ளது. மதமும் சாதியமும் இன்று அரசியலின் முக்கிய பரிமாணங்களாகி விட்டன என்றால் அது அவற்றின் உள்ளார்ந்த அடிப்படையான தேவையோ முக்கியமோ காரணமாக இல்லாது மதத்தினதும் சாதியினதும் அடிப்படையிலான ஆதிக்கம் இன்னும் தொடர்கிறது என்பதாலேயே தான்.

பாபர் மசூதி இடிப்புக்கு முன்னரே இந்துத்துவம் என்கிற சாதிய இந்து மதவாத அரசியல் எழுச்சி பெறத் தொடங்கிவிட்டது. இதற்கொதிரான பதிலை காங்கிரஸாலோ மாநிலங்களின் பிரதேசவாத தலைமைகளாலோ தரமுடியவில்லை. ஆரிய திராவிட வேறுபாடும் தமிழ் தேசியமும் இந்தி எதிர்ப்பும் அடையாளங் காட்டிய தமிழகத்தின் தேசியவாத அரசியற் தலைமைகள் பா.ஜ.கட்சியின் அரசில் பங்குபற்றுகின்றன. பங்குபற்றாதவர்கள் பதவியைக் காப்பாற்றுவதற்காக பா.ஜ.க. ஆட்சியைப் பகைத்துக் கொள்ளாமலிருக்க என்னென்னவோ செய்கிறார்கள். இந்திய அணுகுண்டு பரிசோதனையைக் கூட தமிழன் தயாரித்த குண்டு என்று ஏதோ சொல்லிக் கொண்டாடுகிற அவலம் அங்கே.

சீக்கிய தேசியவாதமும் காஷ்மீர் தேசியவாதமும் கூட பா.ஜ.க வுடன் சல்லாபம் நடத்துகின்றன. தெலுங்கு தேசிய கட்சியும் தனது முன்னாள் சகாக்களை நிராகரித்து பா.ஜ.கட்சி அரசை ஆதரிக்கிறது. இவர்கள் எல்லோரும் பா.ஜ.க. என்பது ஆர்.எஸ்.எஸ். எனும் இந்து மதவாத சாதிய வெறியர்களது அமைப்பினதும் விஸ்வ ஹிந்து பரிஷத் எனப்படும் இந்து "அடிப்படைவாத" கும்பலதும் அவர்களோடு சேர்ந்த பிற சனாதனக் குழுக்களதும் பிரதிநிதி என்பது பற்றி அறியாதவர்களல்ல. எந்த விதமான சந்தர்ப்பவாதம் இந்திய தேசிய

காங்கிரஸைச் சீரழித்ததோ அதுவே இந்திய மாநிலங்களின் தேசிய வாதிகளையும் சாதி அடிப்படையில் அரசியல் நடத்துவோரையும் கூட இன்று பீடித்துள்ளது.

பாரதிய ஜனதா கட்சியோடு விளையாடுவது சாதியாதிக்க ஆணாதிக்க நெருப்புடன் விளையாடுவதாகும். பாபர் மசூதி இடிப்பின் பின்பும் பம்பாய் கலவரங்களின் பின்பும், இன்றும், தனது வாக்குறுதிகளை மீறி, "அயோத்தியில்" ராமர் கோயில் கட்டுவதற்கான காரியங்கள் மும்முரமாக நடக்கும் போதும்,

## இலங்கையின் இடதுசாரிகள் கற்கவேண்டிய பாடம்

பா.ஜ.க. எனபது என்ன, அதன் பின்னாலிருந்து இயங்கும் இந்துத்துவ சக்திகள் எவை என்பது பற்றி அறியாதது போல பாவனை செய்வது இந்தியத் துணைக்கண்டத்தின் சகல மக்களுக்கும் எதிரான ஒரு துரோகம் எனலாம்.

மதவாத அரசியல் பற்றி மக்களுக்கு அவசியமான தகவல்கள் எப்போதோ எடுத்துச் சொல்லப்பட்டு அதற்கொதிரான மதச்சார்பற்ற அரசியல் நடவடிக்கைகள் முறையாக வளர்த்தெடுக்கப்பட்டு இருந்தால் பா.ஜ.க மற்றும் இந்துத்துவ விஷமிகளது செயல்கள் பல தடுக்கப்பட்டிருக்கலாம். அதை விட முக்கியமாக இந்திய அரசியலில் மதவாதத்தின் விஷம் ஏறுவதை ஓரளவேனும் கட்டுப்படுத்தி இருக்கலாம். அதற்கான வாய்ப்புக்கள் அன்று சரிவரப் பயன்படுத்தப் பட்டனவா என்பது ஒரு கேள்வி. ஆயினும் இந்திய இடதுசாரிகள் இந்த விஷயத்தில் கொள்கையளவிலும் அரசியல் பிரசார வேலைகளிலும் சரியான நிலைப்பாட்டையே கொண்டிருந்துள்ளனர். இந்தத்துவம் என்பது தானாக அணையும் தீ அல்ல, அது இந்தியா முழுவதையும் சாதி, மத, இனப் பூசலில் எரிய வைத்துவிடும் என்ற ஆபத்தை அவர்கள் உணர்கிறார்கள். அதன் விளைவான ஒரு

வெடிப்பு பற்றி நம்மூர்க்காரர்கள் சிலரது கொண்டாட்டமும் இலங்கைத் தமிழர் கவனத்துடன் பரிசோதிக்க வேண்டிய விடயம். வே.மீனாட்சிசுந்தரம் எழுதிய 'புராணங்களும் பி.ஜே.பியின் புரட்டும்' என்ற நூல் தொகுப்பில் இரண்டாவது ஆகும். இது 1993 அக்டோபரில் வெளியான நூலின் திருத்திய மறுபதிப்பு.

இந்துத்துவம் என்பது ஒரு அரசியல் மோசடி என்ற கருத்தை நெறிப்படவும் தெளிவாகவும் எளிமையான முறையில் பத்திரிகைகளின் வந்த கேலிச்சித்திரங்களின் உதவியுடன் நூலாசிரியர் வழங்கியுள்ளார். இந்து என்பது கூட எந்தவிதமான குழறுபடி என்பதை அவர் விளங்குவதோடு இந்த 'இந்து' அடையாளத் திணிப்பின் பின்னணியில் இருப்பது ஹிட்லரின் நாஜி தேசியவாதத்தை ஒத்த ஒரு அரசியல் சித்தாந்தம் என்று அழகாகச் சித்தரித்துள்ளார். அதுமட்டுமன்றி இந்து சீர்திருத்த வாதிகள் கருதியிருந்த இந்துமத கோட்பாட்டுக்கும் பா.ஜ.க., விஸ்வ ஹிந்து பரிஷத் ஆகியன முன்வைக்கும் இந்துத்துவத்துக் குமிடையிலான பாரிய வேறுபாடுகள் உணர்த்தப்பட்டுள்ளன. மூன்றாவது நூல் 'வகுப்புவாதமும் மதச்சார் பின்மைக்குமான போராட்டமும்'. இது பத்துக் கட்டுரைகளின் தொகுப்பு முதலாவது கட்டுரை 'அரசியல் திசைதிருப்பலுக்கு

பற்றி இந்தக் கட்டுரைபோல அருமையான ஒரு அறிமுகத்தைத் தரவில்லை என்றே தோன்றுகிறது. மைதிலி சிவராமன் 'பெண்களும் மதச்சார்பின்மையும்' பற்றி எழுதிய கட்டுரை ஆறாவது வருகிறது. இந்துத்துவமும் பெண்களின் நிலையும் பற்றிய அவரது ஆய்வு 'மாக்ஸிய பெண்ணியம்' பற்றிய குழப்பங்களை விளைவிக்க முயல்வோரும் அக்குழப்பங்களுக்குப் பலியாவோரும் படிக்க உகந்த கட்டுரை. முஸ்லிம்களுக்கு அரசு அதிக சலுகை அளிக்கிறது என்ற பொய்ப் பிரசாரத்திற்கு எதிராக ஸ்ரீதர் 1992ல் எழுதிய 'கற்பனைகளும் நிஜங்களும்' என்ற சிறுகுறிப்பு ஏழாவது வருகிறது. அதை அடுத்து இவ்வாண்டு காலஞ்சென்ற மாக்ஸியத் கம்யூனிஸ்ட் தலைவர் நம்பூதிரிபாட் மதச்சார்பின்மைக்கான பேபாராட்டத்தில் இடதுசாரி இயக்கம் பற்றி 1990ல் எழுதிய கட்டுரை வருகிறது. வகுப்புவாதத்தின் தொடர்பாகப் பத்திரிகையாளர் நடத்தைப் பற்றி 'ஃபுரொண்ட் லைன்' ஆசிரியர் ராமும் அதன் நிருபர் சுகுமார் முரளிதரனும் எழுதியவை நூலை நிறைவு செய்கின்றன. அவர்கள் சார்ந்துள்ள பத்திரிகை நிறுவனத்தின் நடத்தை பற்றி சிறிது அடக்கியே வாசிக்கப்பட்டிருந்தாலும். அங்கும் இங்கும் பத்திரிகைச் சுதந்திரத்தின் காவலர்களது நடத்தையில் பல ஒற்றுமைகளைத் தரிசிக்க முடிகிறது.

நான்காவது நூல் 'மதச்சார்பின்மை

நன்றி - நூலகத்திட்டம்



# மலையகத் தமிழ் மக்களும் போராட்ட அரசியலும்

**மலையகத்திலிருந்து ஒரு அரசியல் மாணவன்**

மலையக தமிழ்மக்கள் தம்மை ஒரு தனிப்பட்ட அடையாளம் கொண்ட மக்களாக அடையாளம் காணும் நிலை இன்று முழுமை பெற்றுள்ளது. இந்த அடையாளம் மொழி அடையாளமோ இனப்பிரிவு சார்ந்த அடையாளமோ பிரதேச அடையாளமோ என்று மட்டும் இல்லாமல் சரித்திர அடிப்படையில் உருவான ஒரு அடையாளம் ஆகும். இந்த அடையாளம் தன்னைத் தமிழ்ப்பேசும் மக்கள் அல்லது தமிழர் என்ற விதமான அடையாளங்கட்குள் கரைத்து கொள்ளாமலும் தனது தனிப்பட்ட தன்மையை மேலும் அடையாளங் கண்டு தன்னை வலியுறுத்தும் நிலை உருவாகி நிலை பெற்றுவிட்டது. சிங்களப் பேரினவாதம் மலையகத் தமிழ் மக்கள் மீதுசுமத்தி வந்த கொடுமைகளின் பாரம் இதற்கு ஒரு முக்கிய காரணம். மறுபுறம் இலங்கைத் தமிழ் மக்கள் எனக்கூறப்படும் வட-கிழக்கு மாகாணத்தைப் பூர்வீகமாக கொண்ட தமிழ் மக்களின் தேசியவாத தலைமையின் அணுகுமுறையும் வசதி படைத்த உயர் சாதி தமிழர்களது மனோபாவமும் இன்னொரு முக்கிய காரணம்.

ஆங்கிலேயர் ஆட்சி மலையகத் தமிழ் மக்களில் பெரும்பாலன வர்களை மலைநாட்டுச் சிங்கள மக்களிடமிருந்து திட்டமிட்டே தனிமைப்படுத்தி ஒரு இனப்பகையை வளர்ப்பதில் வெற்றிகண்டது. சிங்கள பௌத்த பேரினவாதத்தின் எழுச்சிக்கான அடையாளங்கள் தெரிந்த போதே இலங்கையின் அரசியலில் மலையக மக்களுக்கெதிரான போக்குகளும் ஓங்கின. இந்தப் பேரினவாதமே கோ.நடேசய்யயரை மலையக மக்களுக்கான ஒரு தனித் தொழிற்சங்க அமைப்பை உருவாக்க நிர்ப்பந்தித்தது. ஆயினும் அன்று அவரது நோக்கம் மலையக மக்களைத் தனிமைப்படுத்தும் ஒன்றாக இருக்கவில்லை.

**பாராளுமன்ற அரசியல் பாதையை ஆதரிப்பது சில வேளைகளில் போராட்டமாகவும் அமையலாம். வேறு சூழலில் அதை நிராகரிப்பது ஒரு தற்கொலையாகவும் நிகழலாம்.**

மலையக மக்களின் வாக்குரிமைப் பறிப்பிற்கு முன்னமே அவர்கள் மத்தியில் தம்மை நிலைநாட்டிக் கொள்வதற்காகவும், தொழிற்சங்க அரசியல் மூலம் தம்மை வளர்க்கும் அதே வேளை, அதே மக்களைச் சுரண்டிக் கொழுக்கவும் ஒரு கூட்டம் இருந்தது. இதன் முக்கிய பிரதிநிதி இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைமை எனலாம்.

உயர் வர்க்க அடிப்படையும் சாதிய ஆதிக்கமும் கொண்ட இத்தலைமை ஆரம்பத்தில் இலங்கை இந்தியன் காங்கிரஸ் என ஆரம்பித்து பின் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் என்றும் தொழிலாளி வர்க்கத்தை தொழிற்சங்கத்தின் மூலமாக ஏமாற்றித் தம்மை வளர்ப்பதில் வெற்றி கண்டனர்.

மலையக மக்களது வாக்குரிமை பறிக்கப்பட்டதன் பின்பும் அவர்கள் மத்தியில் இடதுசாரி இயக்கத்தின் செல்வாக்குச் சிறிது இருந்தது. ஆயினும் அவர்கள் சமுதாய ரீதயாகப் பல வகையிலும் பின்தங்கியே இருந்த காரணத்தால் ஒரு வலிய இடதுசாரி இயக்கத்தை கட்டி எழுப்புவது லேசான காரியமாக இருக்கவில்லை. 1947 தேர்தலில் மலையக தமிழ் மக்களது வாக்குகளின் துணையுடனேயே பல இடதுசாரி வேட்பாளர்கள் தேர்தலில் வென்றனர். 1952ன் பின்பு இந்த நன்மை அவர்களுக்கு கிட்டவில்லை. 1956க்குப் பின்பு சிங்களப் பேரினவாத அரசியலின் முன்பு துவண்டு போன பாராளுமன்ற அரசியற் பாதைக்கார இடதுசாரிகள் மலையக மக்களைப் பற்றி அதிக அக்கறை காட்டவில்லை சில பிரதேசங்களில் ல.ச.ச.கட்சிக்குச் சார்பான தொழிற்சங்கங்கள் சிறு தொகையான உறுப்பினர்களுடன் இயங்கி வந்தன.

**ஒரு புறம் சுரண்டப்பட்ட வரலாறு மறுபுறம் ஏமாற்றப்பட்ட வரலாறு இவற்றிலிருந்து மலையக மக்கள் கற்கவேண்டும்.**

1963ல் கம்யூனிஸ்ட் கட்சியில் ஏற்பட்ட பிரிவை அடுத்து அக்கட்சியின் மலையகத் தொழிற்சங்க இயக்கம் மாக்ஸிஸ லெனினிஸ அணியின் பின் திரண்டது. தோழர் சண்முகதாசன் தலைமையின் கீழ் அது வேகமாக வளர்ச்சியும் பெற்றது. மாக்ஸிஸ லெனினிஸ வாத (சீன சார்பு) கம்யூனிஸ்ட்டுக்கள் ஏற்கனவே தமக்கு இருந்து வந்த தொழிற்சங்க அரசியல் தளத்தை பாடுபட்டுப் பலப்படுத்தியதோடு சிறிமாவோ-சாஸ்திரி உடன்படிக்கையை எதிர்ப்பதில் பிற இடதுசாரி தலமைகளிடமிருந்து வேறுபட்டு உறுதியாக நின்றதாலும் மேலும் வேகமாக வளர்ந்தனர். இவ்வளர்ச்சி மலையகத்தின் எல்லாப் பகுதிகளிலும் ஒப்பிடத்தக்கக அளவில் அமையாவிட்டாலும், அன்று, இ.தொ.கா. தலைமைக்கு அதி முக்கியமான சவாலாக வளர்ந்தது. இதன் வளர்ச்சிக்குக் காரணமாக இருந்தவை தொழிலாளர்களுகட்கு நம்பகமான ஒரு தொழிற்சங்க அமைப்புக்கும் மேலாக, கொள்கையில் ஊறுதியான கட்சித் தலைமையின் வழிகாட்டலில் உருவான வெகுஜன அமைப்புக்கள் எனலாம். செங்கொடிச்சங்கம் என்ற பேர் தொழிற்சங்கத்தின் அதிகார பூர்வமான இலங்கை தோட்டத் தொழிலாளர் சங்கம் என்ற பேரை விடவும் பிரபலம் பெற்று அதுவே சங்கத்தின் பேராகவும் மக்களால் அறியப்படுமளவுக்கு அதனுள் புரட்சிகர அரசியல் சிந்தனை வளர்ந்தது. இந்த வளர்ச்சியை சில வகைகளில் மிகைபடுத்தி அளவிட்டதன் காரணமாக தோழர் சண்முகதாசன் பெரிய பிழைகளைச் செய்தார். தொழிற்சங்கத்தை அரசியல் மயப்படுத்தல் என்ற ஒரு தவறான சுலோகம் உருவானது. மலையகத் தமிழ் தொழிலாளரே அதிகம் சுரண்டப்படுவோர், எனவே அவர்களே நாட்டின் புரட்சியை முன்னின்று வழிநடத்துவர் என்ற கணிப்பீடும் உருவானது. இது இலங்கையின் பேரினவாத அரசியலைச் சரியாக மதிப்பிடத் தவறியதன் விளைவுமாகும். இதன் காரணமாகவும் தான், ரோஹண விஜேவீரவின் தலைமையிலான ஜே.வி.பி., மலையக மக்களை இந்தியாவின் ஐந்தாம்படை என வர்ணித்தது, ஒரு புறம் இனவாதத்தின் மூலம் தன்னை பலப்படுத்தவும் மறுபுறம் மலையகத்தில் சொல்வாக்கு பெற்றிருந்த மாக்ஸிஸ லெனினிஸ கம்யூனிஸ்ட் தலைமையைச் சிங்கள மக்களிடமிருந்து தனிமைப்படுத்தவும் சிறிது இயலுமாக்கியது,

சண்முகதாசனது மிகையான மதிப்பீட்டின் விளைவாகச் செங்கொடிச் சங்கத்தின் தொழிற்சங்க வளர்ச்சி தடைப்பட்டது. ஏனெனில் அதனால் ஒரே நேரத்தில் தொழிற்சங்கமாகவும் புரட்சிகர இயக்கமாகவும் செயற்பட முடியவில்லை. தொழிற்சங்க அரசியலின் வரையறைகளை உணர்ந்தே அதனுள் இடதுசாரிகள் செயற்பட வேண்டும் என்ற பாடத்தை கட்சி இதன் மூலம் பெற்றது. ஆனாலும் அதற்கு முன்னமே ஓ.ஏ. ராமையா என்னும் அரசியல் சந்தர்ப்பவாதி 1972ல் கட்சியில் ஏற்பட்ட பிளவைப் பயன்படுத்திச் செங்கொடிசங்கத்தின் மீது தனது சிறு கும்பல் ஒன்றின் ஆதிக்கத்தைப் பலப்படுத்திக் கொண்டாயிற்று. இதன் பின்பு பிளவு பட்ட கட்சியின் பலவீனமான நிலையும் மலையகத்தில் ஏற்பட்ட புதிய சூழலும் மீண்டும் மலையகத்தில் தொண்டமானின் தொழிற்சங்க அரசியலுக்கு வலிமை தந்தன. அவரது தொழிலாளிவர்க்கத் துரோகத்தனத்திற்கு எதிராக வி.கே.வெள்ளையன் போன்றோரால் மாற்று தொழிற்சங்க அமைப்புக்களை உருவாக்க முடிந்தாலும் அவற்றுக்குத் தெளிவான அரசியல் பாதை இல்லாததால் வெள்ளையனின் மரணத்திற்கு பின்பு படு வேகமாக சீரழிந்து யூ.என்.பிக்கு ஆதரவாக செயற்படும் அவலத்தையும் கண்டோம். இன்று தொன்டமான் தலைமையில், அவர்களும் சீரழிந்து போன செங்கொடிச் சங்கமும் கூட்டணி அமைக்கும் நிலைமை வந்துவிட்டது.

மாக்ஸிஸ-லெனினிஸ கம்யூனிஸ்ட்டுக்களது அன்றைய தலைமையின் ஒரு நிலைப்பாடு மலையகத்தில் அதன் தொழிற்சங்க அமைப்பை மட்டுமில்லாது வளர்ந்து வந்த ஒரு அரசியல் தளத்தயும் கூட மிகவும் பாதித்து விட்டது. 1974-1976 காலகட்டத்தில் மலையகத்தில் நிலவிய வேலையின்மை, பசி-பட்டினி, தோட்டங்களிலிருந்து மலையகமக்கள் விரட்டப்பட்ட நிலை போன்றவற்றின் மத்தியில் அந்த மக்களுக்கு ஒரு சரியான ஒரு அரசியல் பாதையைக் காட்டி அணிதிரட்டி அவர்களது வலிமைகட்காகப் போராட வல்லதாக ஒரு உறுதியான வலிய தலைமை இல்லாமற் போனது தான் அந்தத் தவறான நிலைப்பாட்டின் மிகவும் தீமையான அம்சம்.

**அன்று இடதுசாரித் தொழிற்சங்க வேலைமுறை இழைத்த தவறுகள் மீளவும் இடம் பெறக்கூடாது. புதிய சூழலில் புதிய வேலைமுறை அவசியம்.**

இலங்கையின் முழு இடதுசாரி இயக்கமும் 1975-76 அளவில் எதிர்நோக்கிய சரிவு, 1977 தேர்தலின் பின்பு, பாராளுமன்ற அரசியலில் மூழ்கி இருந்த் சமசமாஜக் கட்சியையும் சோவியத் சார்பு கம்யூனிஸ்ட் கட்சியையும் கிட்டத்தட்ட விலாசம் இல்லாமலே செய்துவிட்டது. இந்த நிலையில் தொண்டமானும் ஜே.ஆர்.ஜயவர்த்தனவும் ஏற்படுத்திய இரகசிய உடன்பாட்டின்படி தொண்டமான் அமைச்சராகித் தனது அரசியல் தளத்தைச் சிறிது காலம் பலப்படுத்த முடிந்தது. மலையக மக்களின் மேலும் ஒரு பகுதியினர் வாக்குரிமை பெறமுடிந்ததையும் தொண்டமான் தனது சாதனையாகவே காட்ட முயன்றார். என்றாலும் அவரால் முன்போல மலையக மக்களை எளிதாக ஏய்க்க முடியவில்லை. இதன் காரணமாகவே சந்திரசேகரனின் மலையக மக்கள் முன்னனி போன்ற அமைப்புக்களால் அரசியலில் முன் வரிசைக்கு வரமுடிந்தது. ஆயினும் அவர்களது சாயம் வேகமாகவே வெளுத்து விட்டது. இன்று மலையக மக்களை ஏமாற்றி அரசியல் நடத்தித் தோல்வி கண்ட எல்லாச் சக்திகளும் (பௌத்த சிங்கள பேரினவாத சக்திகள் போக) ஒரு அணியில், மலைகய மக்களின் பிரதான துரோகியான தொண்டமானின் தலைமையில் "இந்திய வம்சாவழி" என்ற அடையாளத்தையும் ஏந்தி ஒன்று திரண்டிருக்கின்றனர். இது மலையகத்தின் புரட்சிகர சக்திகளைப் பொறுத்த வரை ஒரு நல்ல அடையாளமே. ஏனெனில் போலிகள் எல்லாரும் தாமாகவே தமது அரசியல் அடையாளத்தை பகிரங்கப்படுத்திக் கொண்டுள்ளனர். இன்று மலையக மக்கள் மத்தியில் புதிய ஜனநாயக கட்சி கண்டு வரும் வளர்ச்சியை கட்சியின் எதிரிகள் கூட வேண்டா வெறுப்பாக ஒப்புக் கொள்ளுகிற நிலைமையை நாம் காணலாம். ஆயினும் இது போதுமானதா? இவ் வளர்ச்சியின் திசை என்னவாயிருக்க வேண்டும்? புதிய ஜனநாயக் கட்சி மக்களிடையே எந்தெந்த தளங்களில் செயற்பட வேண்டும்? அது எவரெவருடன் ஒத்துழைக்க வேண்டும்? பழைய காலத்தில் தோழர் சண்முகதாசன் தலைமையில் கீழ் இருந்த சாதகமான அம்சங்களிலும் பாதகமான அம்சங்களிலும் இருந்து கட்சி கற்றுக் கொள்ள வேண்டிய பாடங்கள் எவை? இவை கட்சி மலையகத்தில் எதிர் நோக்கும் கேள்விகள், புதிய ஜனநாயக கட்சியின் அரசியல் நிலைப்பாடு அடிப்படையில் மிகவும் தெளிவானதும் சரியானதும் ஆகும். அது நாட்டின் இன்றைய நிலைமையை மிகவும் சரியாகவே கணிப்பிட்டுள்ளது. தேசிய இனப்பிரச்சினையின் முக்கியத்துவம், ஜனநாயக உரிமைகள், மனித உரிமைகள் மற்றும் அடிப்படை உரிமைகள், பன்னாட்டு நிறுவன ஊடுருவலுக்கும், கலாசார சீரழிவுக்கும் எதிர்ப்பு என்பன போன்ற பல்வேறு விடயங்களிலும் வேறெந்த அரசியற் கட்சியையும் விட அதன் நிலைப்பாடு நேர்மையும் உறுதியும் உடையது. ஆயினும் இவற்றை மக்கள் மத்தியில் கொண்டு செல்வது எப்படி? சரியான கொள்கைகளைக் கண்டு மக்கள் தாமாகவே தேனுள்ள பூவைத் தேடிவரும் வண்டுகள் போல வருவார்கள் என்று எண்ணுவது கற்பனாவாதமாகும். எனவே கட்சியின் செயற்பாட்டுத்தளம் அதன் வளர்ச்சிக்கு ஏற்ற விதத்தில் விரிவு படுத்தப்பட வேண்டும். மலையகத்தின் குறிப்பான சமூக, அரசியல், பொருளாதார, கலாச்சாரச் சூழ்நிலைகள் கவனத்தில் எடுக்கப்பட வேண்டும். பழைய சாதனைகளிலும் தவறுகளிலும் இருந்து கற்பது என்பது எளிதல்ல. சில சமயங்களில் குறிப்பிட்ட சாதனைகளை இயலுமாக்கிய சூழ்நிலைகள் இல்லாது போகலாம். சில தவறுகளை தவிர்க்கும் நோக்கில் ஒரு கட்சி அதனோடு சேர்ந்த பல அவசியமான பயனுள்ள காரியங்களையும் ஒதுக்கி விடநேரலாம். ஒவ்வொரு நடவடிக்கையும் திறந்த மனத்துடன் நோக்கப்பட வெண்டும். ஒவ்வொன்றும் கட்சியினதும் அதன் அரசியல் இலக்குகளினதும் சார்பாக என்ன பங்களிக்கின்றன என்பது பற்றிய மதிப்பீடு தொடர்ச்சியனாக மேற்கொள்ளப்படல் வேண்டும். இது வெகுஜன ஸ்தாபன வேலைகள் முதல் ஐக்கிய முன்னனி அரசியல் வரை ஒவ்வொரு தளத்திலும் முக்கியமானது.

**ஒரு புரட்சிகர கட்சியின் உண்மையான வலிமையும் அதிமுக்கிய தளமும் வெகுஜன அரசியலாகவும் தளராத போராட்ட இயக்கங்களாகவும் இருப்பது அவசியம்.**

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

நன்றி - நூலகத்திட்டம்



# சத்தியாக்கிரகமா, சப்பாணிப் போராட்டமா?

## தந்தையும் மைந்தரும் (9)

1958 இனக்கலவரத்தின் பின்பு தென்னிலங்கையின் இனவாத அரசியல் மீண்டும் தன்னை உறுதிப்படுத்திக் கொண்டது. பண்டாரநாயக செல்வநாயகத்துடன் செய்த உடன்படிக்கையைக் கிழித்தெறிவதற்கு அவரது அரசாங்கத்தில் இருந்த இனவாதிகளும் சில புத்த பிக்குகளுமே காரணமாயிருந்தனர். அதற்கு முந்திய ஆண்டு ஜே. ஆர். ஜயவர்தனவின் கண்டி யாத்திரை கம்பஹா தொகுதி பாராளுமன்ற உறுப்பினரான எஸ். டி. பண்டாரநாயக்காவின் உறுதியான எதிர்நடவடிக்கையால் முறியடிக்கப் பட்டதைத் தமிழரசுவாதிகளோ பிற தமிழ்த் தேசியவாதிகளோ சொல்ல விரும்புவதில்லை. பண்டாரநாயக செல்வநாயகம் உடன்படிக்கைக்கு ஜே. 'ஆர். ஜயவர்த்தன திரட்ட முயன்ற எதிர்ப்பை முறியடித்ததோடு மட்டுமல்லாது சிங்கள வெகுசன ஆதரவை வெல்வதற்கும் அந்த முயற்சி உதவியது. ஆயினும் தெற்கில் உள்ள நிலைமைகளை நன்கு உணராத தமிழரசுத் தலைமையின் சிறிஎதிர்ப்புப் போராட்டம் நந்தவனத்திலோர் ஆண்டி நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டிக் கொண்டு வந்த தோண்டியைக் கூத்தாடிப் போட்டுடைத்த கதையாக நிலைமைகளைக் கெடுக்க உதவியது.

1958க்குப் பின் இலங்கை அரசியல் பல திடீர்த்திருப்பங்களைக் கண்டது. 1959ல் வன்னியசிங்கம் இறந்தமை தமிழரசுத் தலைமையில் நிதானமுடன் கொள்கை உறுதியும் மிகவும் கொண்ட ஒருவரின் இழப்பானது. அவர்போல ஒரு தலைவர் பின்பு அக்கட்சிக்குக் கிடைக்கவில்லை. அதே ஆண்டு பண்டாரநாயக ஒரு புத்த பிக்குவால் சுட்டுக் கொல்லப்பட்டார். இதை அடுத்து மதத்தை அரசியலுடன் பிணைப்பதை எதிர்த்து முறியடிக்கும் ஒரு வாய்ப்பு இருந்தது. ஆயினும் அதைச் சிங்களப் பேரினவாத அரசியற் தலைமைகள் விரும்பவில்லை. எனினும் 1960ல் நடந்த தேர்தல்கள் இரண்டிலும் புத்த பிக்குமாரின் பங்கு 1956ஐ விடவும் சிறிது தணிந்தே இருந்தது.

1960 மார்ச் தேர்தலில் எதிர்கட்சிக்கும் பெரும்பான்மை வலிமை இருக்கவில்லை. அதிகப்படியான ஆசனங்கபை் பெற்ற யூ.என்.பி. சிறுபான்மை அரசாங்கத்தை அமைத்தது. தமிழரசுக் கட்சி அதற்கு உதவினாலுங் கூடப் பூரண பெரும்பான்மைக்கு இடமில்லை. எனவே தமிழரசுக் கட்சியும் ஒதுங்கி நின்றது. இக்காலகட்டத்தில் வடக்கே தமிழ்க் காங்கிரசுக்கு சிறிது செல்வாக்கு மிஞ்சியிருந்ததும் டட்லி சேனநாயக தலைமையிலான யூ.என்.பிக்கும் தமிழ் காங்கிரஸிற்கும் இருந்த சுமுக உறவும் கூட தமிழரசுத் தலைமையின் நிதானத்துக்கு காரணமாயிருக்கலாம். அதை விட யூ.என்.பி எதிர்ப்புச் சக்திகள் தமிழரசுக்கட்சிக்கு ஆதரவான அரசாங்க ஊழியர் மத்தியிலும் வடக்கில் கட்சியின் கீழ்மட்டங்களிலும் இருந்ததும் ஒரு காரணமாயிருக்கலாம்.

தமிழரசுக்கட்சி இடதுசாரிகளுட னில்லாவிட்டாலும் ஸ்ரீ.ல.சு.கட்சியுடன் ஒரு அரசியற் பேரத்தை நடத்துவதாக சந்தேகப்பட்ட யூ.என்பி., 1960 ஜுன்தேர்தலின் போது மிக மோசமான இனவாத பிரசாரத்தை முடுக்கி விட்டது. ஆயினும் அத் தேர்தலில் ஸ்ரீ.ல.சு.கட்சி பூரணபெரும் பான்மை பெற்று ஆட்சிக்கு வந்தது. சிறிமா பண்டாரநாயக மூதவை உறுப்பினராக்கப்பட்டுப் பிரதமர் பதவி ஏற்றார்.

தமிழரசுக்கட்சி மொழிப் பிரச்சனை தவிர்ந்த வேறெந்தப் பிரச்சனை பற்றியும் அக்கறை காட்டத் தவறியதால் பல விடயங்களில் அதன் கொழும்புத் தலைமைப்பீடத்தின் வர்க்க நலன்களால் உந்தப்பட்டே செயற்பட்டது. முன்பு நெற்காணிச்சட்டம், அந்நிய தளங்களை அகற்றல் போன்ற பிரச்சனைகளில் அது யூ.என்பி. யுடன் நின்றது போலவே பாடசாலைகள் அரசின் கட்டுப் பாட்டுக்குள் வருவதை



எதிர்ப்பதிலும் யூ.என்.பியுடனும் கத்தோலிக்க மதபீடத்துடனும் சேர்ந்து நின்றது. அரசாங்க உதவி பெற்ற மிஷன் பாடசாலைகள் அரசாங்க நிதியுதவியின் அடிப்படையிலேயே செயற்பட்டன். ஆயினும் அவை மதமாற்றம் உட்பட்ட பல்வேறு மதச்சார்பு சடவடிக்கைகளை எடுத்ததோடு மட்டுமின்றி அரசியலிலும் அன்றைய கிறிஸ்தவ மதபீடங்களின் ஆணையையேற்று யூ.என்.பிக்கு அனுசரனையாகவே நடந்துவந்தன. பாடசாலைகளை அரசு பொறுப்பேற்பது என்ற முடிவும், விரும்பியவர்கள் வேண்டுமானால் தனியார் பாடசாலைகளாக இயங்குவதற்கு அனுமதி தரப்படும் என்ற அடிப்படையிலே எடுக்கப்பட்டது. கல்வி மீது சமய நிறுவன ஆதிக்கம் தகர்வதைக் தமிழரசுக்கட்சி எதிர்க்க ஒரு நியாயமே இருந்தது. அது பாடசாலைகள் சிங்கள ஆதிக்கத்திற்கு உட்படலாம் என்ற அச்சமாகும். (ஆயினும் இது நிகழவில்லை என்பது வேறு விடயம்) தமிழரசுக்கட்சியின் நிலைப்பாடு ஒருபுறமிருக்க ஸ்ரீ.ல.சு. கட்சி அரசாங்கத்திலும் அரசாங்க நிர்வாக இயந்திரத்தினுள்ளும் பல சிங்கள இனவாத விஷமிகள் இருந்தனர். தமிழரசுக்கட்சி பற்றிய பிரிவினைவாதப் படிமமும் இத்தகைய விஷமிகளது செயலுக்கு ஊக்கமளித்தது. அரசகரும மொழியான சிங்களத்தை நீதிமன்ற மொழியாக்குவது என்று ஸ்ரீ.ல.சு.க. எடுத்த முடிவு தமிழரசுத் தலைமை வெகுண்டெழச் செய்தது. யாழ் மாவட்டத் தமிழரசு உறுப்பினர்களுட் பெருவாரியானோர் அப்புக் காத்துமாராக இருந்தும் இந்த தர்மாவேசத்துக்கு ஒரு காரணமாக இருந்திருக்கலாம்.

தமிழரசுக் கட்சி போராடப் போவதாக அறிவித்ததையடுத்து அரசாங்கத்திற் கும் தமிழரசுக் கட்சிக்குமிடையே பேச்சுவார்த்தைகள் நடந்தன. நீதி அமைச்சர் சாம். பி.சி. பெர்ணாண்டோவும் செல்வநாயகமும் தலைமை தாங்கி நடத்திய இப் பேச்சுவார்த்தைகளில் ஒரு விடயம் தவிர மற்றவற்றில் பொதுவான இணக்கம் காணப்பட்டது. சர்ச்சைக்குரிய விடயத்தை மீண்டும் பேசி முடிவெடுப்பதற்கு இடமளிக்காமலே தமிழரசுக்கட்சி யாரும் எதிர் பாராவிதமாக யாழ்ப்பாணத்தில் ஒரு சத்தியாக்கிரக போராட்டத்தை தொடங்கியது. இப் போராட்டத்திற்கான எந்தவித முன்னேற்பாடும் செய்யப்பட்டதாக யாரும் அறிய மாட்டார்கள். போராட்டம் எதிர்கொள்ளக் கூடிய மிகச் சாத்தியமான நிலைமைகள் கூட ஆராயப்படவில்லை.

உதாரணமாக 1958ல் தமிழர் விரோத வன்முறையை அடுத்து ஒருசில சிங்களப் பேரினவாதிகளும் சகல தமிழரப் பாராளுமன்ற உறுப்பினர் களும் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டனர். 1958ல் அவசரகாலச்சட்டம் பிறப்பிக்கப் பட்டது. தென்னிலங்கையில் ஏற்கெனவே இனவாத வன்முறை நிகழ்ந்துள்ளது. இவையாவுமே மீளவும் நிகழக்கூடியனவே என்பதைக் தீர்க்கதரிசியாகக் கருதப்பட்டு வந்த தழிரசுத் தந்தையாரால் கணிப்பிற்கூட எடுத்திருக்க முடியவில்லையா? தமிழரசுக் கட்சியின் இந்த அவசரமுடிவு ஸ்ரீ எதிர்ப்புப் போராட்டத்தைப் போலவே தீரயோசியாமல் எடுக்கப்பட்டது எனவும் கட்சிக்குள் கட்சியாக இயங்கிய ஒருசிறு கும்பலின் நெருக்குவாதத்தின் பேரில் எடுக்கப்பட்டது எனவும் கிழக்கிலங்கையில் கருதப்பட்டதில் நியாயம் உண்டு.

சத்தியாக்கிரகம் என்பது ஒரு திட்டமிட்ட போராட்டம் மோகனதாஸ் காந்தியின் சத்தியாக்கிரகங்கள் எல்லாமே ஒரு அரசியற் கணிப்பின் அடிப்படையில் நடத்தப்பட்டவை தான். அக்கணிப்புகள் சரியானவையா என்பது பற்றி விவாதிக்க இடமுண்டு. போராட்டமுறை பற்றி விவாதிக்கவும் இடமுண்டு. ஆயினும் ஏதோ ஒரு திட்டம் இருந்தது. தமிழரசுக்கட்சியினிடமும் பாராளுமன்றத் தேர்தல்களையும் பொதுக் கூட்டங்களையும் விட வேறெதற்கும் திட்டம் இருந்ததாகக் கூறமுடியவில்லை. வெகுசன இயக்க அரசியல் என்பது அவர்கட்கு அந்நியமான ஒன்று மட்டுமல்ல ஆபத்தானதும் கூட. எந்த வெகுசனப் போராட்டமும், அதன் இலக்கின் வரையறைகளை மீறிப் பரந்துபட்ட மக்களின் பிற பிரச்சினைகளை உட்கொணர்ந்து சமுதாய மாற்றத்திற்கான சக்திகளை கட்டவிழ்த்து விடுகிற அபாயம் எப்பொதும் உண்டு. இதனாலேயே, காந்திய வரையறைகட்குள் போராட்டத்தை நடத்துகிற பாவனையில், போராட்டத்தை மொழிப் பிரச்சனைக்குள் மட்டுப்படுத்தும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

தமிழரசுக்கட்சி எதிர்பாராத அதிஸ்டம் சத்தியாக்கிரகத்தின் தொடக்க நிலையிலேயே கிட்டியது. முதலில் யாழ்ப்பாணக் கச்சேரி முன் அமர்ந்திருந்த சத்தியாக்கிரகிகளின் தொகை அதிகமல்ல. இதை மிகவும் தவறாக கணிப்பிட்ட பொலிஸார் குண்டாந்தடிப் பிரயோகத்தின் மூலம் மறியலை முறியடிக்கலாம் என்று எதிர்பார்த்தனர். அதன் விளைவாக அசட்டையாக இருந்த மக்களும் மிகுந்த உற்சாகத்துடன் கச்சேரிக்கு முன்வந்து சத்தியாக்கிரகத்தில் இணைந்தனர். இந்த நிலையிலும் இப்போராட்டத்தை எப்படி விஸ்த்தரிப்பதுஎன்பது பற்றிய தெளிவான சிந்தனை தமிழரசுத் தலைமையிடம் இருக்கவில்லை. சில நாட்களின் பின்பு சத்தியாக்கிரகம் வவுனியா, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு வரை விஸ்த்தரிக்கப்பட்டது. அங்கும் கச்சேரிமுன் மறியல் தவிரவேறு நடவடிக்கை இல்லை. பொதுமக்களது அனுதாபம் மிகுந்த சூழ்நிலையில் அரசாங்கம் சத்தியாக்கிரகிகள் மீது வன்முறை பிரயோகிப்பதைக் கவனமாகத் தவிர்த்தது. இந்தவிதமான இழுபறியான நிலைமையின் போதுதான் 'தமிழரசுத் தபால் சேவையை நடத்துவது என்ற அதிமேதாவித்தனமான யோசனை தமிழரசுக் கட்சிக்குள் இயங்கி வந்த சிறு கும்பலால் நடைமுறைப் படுத்தப்பட்டது. இந்த நடவடிக்கையின் உடனடியான எதிர்விளைவு பற்றியோ போராட்டத்தைப் பற்றிய அபிப்பிராயங்களை அது எப்படி மாற்றும் என்பதைப் பற்றியோ அதன் சூத்திரதாரிகள் போதியளவு சிந்தித்ததாக நம்ப இடமில்லை.

சத்தியாக்கிரகம் தொடங்கிய நிலையில் சமசமாஜக் கட்சித்தலைமை அதற்கு ஆதரவு தெரிவித்ததோடு இரண்டு சமசமாஜக்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் நேரிற் சென்று ஆதரவு கூறியதாகவும் நினைவில் உள்ளது. கம்யூனிஸ்ட் கட்சி போராட்டத்தின் நியாயத்தை ஏற்றது. ஆயினும் போராட்ட முறையின் பலவீனங்களும் கம்யூனிஸ்டுகளால் விமர்ச்சிக்கப்பட்டன. தமிழரசுக்கட்சி ஒட்ட முயன்ற பேரினவாத, துரோக முத்திரைகட்குச் சத்தியாக்கிரகத்தின் போது இடதுசாரிகளின் நடத்தையில் எந்தவிதமான ஆதாரமும் இல்லை.

தபாற்சேவை ஆரம்பமான பிறகு தமிழரசுக் கட்சியின் போராட்டம் நாட்டைப் பிரிப்பதற்கும் நாட்டின் அமைதியைக் குலைப்பதற்குமான போராட்டம் என்று அரசாங்கத்தால் வாதிட முடிந்தது. வெகு விரைவிலேயே அவசரகாலச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. சகல தமிழரசுக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களும் சத்தியாக் கிரகத்துடன் சம்பந்தப்பட்டவர்கள் சிலரும் பனாகொடையில் உள்ள ராணுவ முகாமில் பலவசதிகளுடனும் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டனர். செல்வநாயகம் மட்டும் சில நாட்களில் அவரது வீட்டிலேயே தடுப்புக்காவலில் இருத்தப்பட்டார். சத்தியாக்கிரகத்தைப் பொறுத்தவரை அது அவசரகாலச் சட்டத்துடனேயே முடிவுக்கு வந்துவிட்டது. தடுப்புக்காவலில் வைக்கப்படாத சிலர் ஒருசில வாரங்களாக அரசாங்கப் பிரசாரத்தை மறுத்து ஆங்கிலத்தில் ரோணியோ அச்சிடப்பட்ட சில பிரசுரங்களை வெளியிட்டனர். மட்டக்களப்பு மாவட்டத்தில் துறைநீலாவணையில் இராணுவத்தினருடன் சில தமிழ் மக்கள் பதில் தாக்குதல் தொடுத்த தாகவும் செய்திகள் பரவின. குறிப்பிடத்தக்க விதமாக எதுவும் நடக்கவில்லை. நடந்த எதற்கும் தமிழரசுத் தலைமை வழி காட்டியதாகவும் கூற இடமில்லை.

> **இராணுவத்தினர் ஊரடங்குச் சட்டத்தைப் உலகமகா யுத்தத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட விளக்கணைப்புச் சட்டமாகக் கருதி மக்களை விளக்குகளை அணைக்குமாறு கட்டாயப்படுத்தியது போன்ற சில்லரை உபாதைகள் போக அவசரகாலச் சட்டம் அரசாங்கத்தைப் பொறுத்தவரை எவ்வித எதிர்ப்புமின்றி நடைமுறைப்படுத்தப்பட்டது.**

இராணுவத்தினர் ஊரடங்குச் சட்டத்தைப் உலகமகா யுத்தத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட விளக்கணைப்புச் சட்டமாகக் கருதி மக்களை விளக்குகளை அணைக்குமாறு கட்டாயப் படுத்தியது போன்ற சில்லரை உ்பாதைகள் போக அவசரகாலச் சட்டம் அரசாங்கத்தைப் பொறுத்தவரை எவ்வித எதிர்ப்புமின்றி நடைமுறைப் படுத்தப்பட்டது.

சத்தியாக்கிரகத்தின் இத்தோல்வி, தமிழரசுக்கட்சி அந்தப் போராட்டத்தைத் தொடர்வதற்கும் விரிவுபடுத்துவதற்கும் எந்த வகையிலும் ஆயத்தமாக இல்லை என்பதை மிகவும் தெளிவாக உலகுக்கு உணர்த்தியது. தமிழ் மக்கள் பெருமளவு அந்தப் போராட்டத்துக்கு வழங்கிய ஆதரவைத் தமிழரசுக்கட்சியால் பயன்படுத்த முடியவில்லை. மறுபுறம் தமிழரசுக்கட்சியுடைய அறப்போர், சாத்வீகப் போராட்டம் என்பன பற்றித் தமது எதிர்பார்ப்புகளை 'இந்திய விடுதலைப் போராட்டத்துடனான உவமைகளின் அடிப்படையில் வளர்த்துக் கொண்ட தமிழ் மக்கள் மிகுந்த ஏமாற்ற உணர்வையே அடைந்தனர். இதுவே தமிழரசுக்கட்சியின் செல்வாக்கின் சரிவின் தொடக்க நிலையாகும். ஆயினும் மாற்றுக் கட்சியென ஒரு பாராளுமன்ற அரசியற் கட்சி இல்லாத சூழ்நிலையில் அதன் பாராளுமன்ற வலிமை மேலும் சில ஆண்டுகள் தொடர்ந்தது. 1965ல் யூ.என்.பி. அரசாங்கத்தில் தமிழரசுக்கட்சியின் இணைவு அதன் அரசியல் அஸ்தமனத்தின் தெளிவான அடையாளமானது. 1961க்கும் 1965க்கும் இடையிலான காலத்தில் தமிழரசுக்கட்சி ஒரு பாராளுமன்ற அரசியற்கட்சி என்ற வகையிலும் அடிசறுக்க ஆரம்பித்து விட்டது.

நன்றி - நூலகத்திட்டம்



# திருகோணமலையில் ஆண்டிகள் கட்டிய மடம்

திருகோணமலை நகரில் புனித சூசையப்பர் கல்லூரி மண்டபத்தில் ஒரு அறுபது எழுபது ஆண்டிகள் கொண்ட கூட்டம் தமக்குள்ளே கூடிக் குலாவிக் கதைத்து மடம் கட்டினர். மூன்று நாட்கள் இந்தக் கூத்து நடந்தது. இருந்த மண்டபத்தில் அழுக்கைத் துடைப்பதும், கொட்டப்பட்ட எச்சில் இலைகளைப் பொறுக்குவதும் பாடசாலைக்கு எஞ்சியதற்கு மேல் 'மடத்தை' எங்கும் காணாமல் ஆண்டிகள் கலைந்து போயினர்.

இது நடந்தது 1998இன் ஆகஸ்ட் 28,29,30 ஆகிய மூன்று நாட்கள் கூடித் 'தமிழை நிர்வாக மொழியாக' காணும் பேறைப்பெற பல்கலைக்கழகக் கல்விமான்கள், கல்வி அதிகாரிகள், கலைஞர்கள், மற்றும் பல்துறை அறிஞர்கள் ஆகியோர் முயன்றனர். இப்படிக் கூட்டியது வடக்கு-கிழக்கு மாகாணசபையின் கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத் துறை அமைச்சு. கூடிப்பேசிக் களைத்ததின் பெறுபேறைப் பற்றி மூன்றாம் நாள் அரங்கில் இறுதிக் கலந்துரையாடலில் அலசியபோது 'இந்த முயற்சி வெறும் ஆண்டிகள் கட்டிய மடம்' என முத்தாய்ப்பு வைத்தார் ஒரு கல்வி அதிகாரி.

இப்படி நேர்ந்ததற்கான நிலைமையை வேறொரு அதிகாரி (வெகுஜன தொடர்பு சாதனம் ஒன்றில் உயர்பதவி வகிக்கும் ஒருவர்) குறிப்பிட டிருந்தார். தமிழ் நிர்வாக மொழியாக இயங்காமல் போவதற்கான காரணங்களை ஆராயாமல் வெறும் காரியாட்களை பேசிப்பலனில்லை என்றார் அவர். அதிகாரிகளின் மனோபாவம் உட்படப் பல காரணங்களை அவர் அடுக்கிச் சென்றபோது ஆய்வரங்கை நெறிப்படுத்திய போராசிரியர் கா.சிவத்தம்பி நேரத்தைக் குறிப்பிட்டு உரையை நிறுத்தும்படி கேட்டுக் கொண்டிருந்தார். இத்தகைய அபிப்பிராயம் கொண்டு பேசியவர்கள் பலவகையில் குறுக்கீடு செய்யப் பட்டார்கள். மாறாக, ஆங்கிலம் நீடிக்க வேண்டும் என்றவர்கள் சுதந்திரமாக முழங்க முடிந்தது.

இந்த அவலத்தை உடைத்தவர்கள் தமிழக அறிஞர்கள் தாம். முனைவர் வி.அரசு எழுந்து தமிழ் நிர்வாக மொழியாக இயங்க முடியும் என்பதை தமிழக அனுபவ உதாரணங்களுடன் எடுத்துக் கூறினார். எங்கள் கறுத்த ஆங்கில விற்பன்னர்கள் பேரூந்து, வெதுப்பகம் என்றோமே வாயில் நுழைந்தனவா, என்று கேட்டிருந்தனர். முனைவர் அரசு கூறினார், தமிழகத்தில் சர்வ சாதாரணமாயே பேரூந்து, ஓட்டுனர், நடத்துனர் என்ற பதங்கள் புழக்கத்தில் உலாவுகின்றன என்று. நடைமுறைக்கு கொண்டுவந்து விட்டால் முடியாதென நினைத்தன வெல்லாம் சாத்தியமான்வை ஆகிவிடும் என்றார்.

இதன்பின்னர் இந்தப்பக்கத்தைச் சார்ந்துகொண்டு, தலைவர் என்பதை விடுத்து சிவத்தம்பியாக ஒரு வார்த்தை கூறுகிறேன் எனத் தொடங்கி ஆணித்தரமான விடயத்தை முன்வைத்தார் சிவத்தம்பி அவர்கள். சிங்களம் நிர்வாக மொழியாவதைத் தமிழர் தலைமை ஐம்பத்தாறில் எதிர்த்ததேயன்றித் தமிழ் நிர்வாக மொழியாக வேண்டும் என்பதற்குப் போராடவில்லை என்றார். தங்கள் அதிகாரத்தை ஆங்கிலத்தின் வழியே செலுத்திய தமிழ் அதிகார வர்க்கம் எப்போதுமே தமிழ் நிர்வாக மொழியாக ஆவதை விரும்பிய தில்லை என்றும் கூறினார்.

இவ்வாறு தமிழ் முழுமையாக நிர்வாக மொழியாக வேண்டும் என்ற குரல் இறுதியில் வெற்றிபெற்ற முழக்கமாக முடிந்தமைக்கு பெரும் பான்மையானவர்களது உணர்ச்சிக் கொந்தளிப்பே காரணம். இந்த உணர்ச்சிக்கு அடிப்படை ஏற்படுத்தியது இரண்டாம் நாள் கலந்துரையாடல் நிறைவுபெறும் இறுதித் தருணத்தில் எழுந்த க.சண்முகலிங்கம் என்ற அதிகாரி, எங்களுக்கு ஆங்கிலத்தில் தமிழர்கள் எழுதும் கடிதத்துக்கொல்லாம் நாங்கள் தமிழில் பதில் எழுதுகிறோம், எங்கள் கோப்புகளில் நூறுவீதம் தமிழில் குறிப்புகளை அடுக்கி உள்ளோம் எனக் கூறினார். முடிவாக, இதற்கு மேலால் நிர்வாக மொழியாய்த் தமிழைக் கொண்டுவந்துவிட முடியாது என்றார். தமிழின் போதாமை தடை என்றார். சிங்களவர்கள் ஏற்கனவே ஆங்கிலத்துக்கு மாறி முன்னேற நாங்கள் பின்னடைகிறோம் என்றார். எங்கள் கல்வியை ஆங்கிலத்துக்கு மாற்றாமல் விமோசனம் இல்லை என்றார். இவர் நவீனத் தமிழின் காவலர் என்ற வேடமும் தாங்குகிறவர் என்பது பெரும் வேடிக்கை என்றால், தமிழறிஞர் எழுந்து ஆங்கில வழிபாட்டை வழிமொழிந்தார் என்பதுதான் பெருங்சோகம்.

ஆயினும் மூன்றாம் நாள் அரங்கில் தமிழ் அரியாசனம் ஏறிவிட்டது. தமிழக அறிஞர் முனைவர் எம்.இராஜேந்திரன் எழுத்தில் கொடுத்த விடயத்தை சிவத்தம்பி வலியுறுத்தியிருந்தார். 'தமிழ் வேண்டும் என்பது தமிழுக்காக அல்ல, தமிழ் மக்களுக்காக' என வலியுறுத்தப்பட்டது.

இதற்குப் பின்னரும் ஆண்டிகள் மடம் என்பது பொருத்தமுடையதா? அப்படித்தான் தெரிகிறது. கொள்கையளவில் தமிழன் தேவை உணரப்பட்டதே அன்றி அதிகார வர்க்கத்தின் கொட்டம் மக்கள் உணர்வைக் குழிதோண்டிப் புதைக்கும் என்றே காட்டிநின்றது.

அமைச்சின் செயலாளர் சுந்தரம் டிவகலாலா நூறுவீதம் கோப்புக்கள் தமிழில் உள்ளதெனக் கூறிய சண்முகலிங்கத்தின் கூற்று பொய் என்றார். இன்னமும் இடர்கள் உண்டு என்றார். ஆயினும் தமிழில் நிர்வாகம் நடத்துவோம் எனச் சூளுரைத்தார். பின்னர் கலைஞர்களை பாராட்டியதில் டிவகலாலாவின் தர்பார் அட்டகாசத்தைப் பார்த்தபோது அவரால் முடியாதது எதுவுமில்லை என்றேபட்டது. புகைப்படப் பிடிப்பாளரின் ஆளுமையைக் கொச்சைப்படுத்தி கீறிய கோட்டுக்குள் நிறுத்தி வைத்தார். பாராட்டுப்பெற வந்த மூத்த கலைஞர்களை ஒரு வட்டத்துள் அடக்கினார். நேராக்கி நிறுத்தினார். ஒவ்வொருவருக்கும் சைகையால் ஆணை பிறப்பித்தார். அவர் அசைய விழாவே அசைந்தது. விழாக்கள் எடுப்பதில் வல்லவர் என்பது முன்னமே அறிந்த ஒன்று. ஆனால் விழாக்கள் முடிந்தவுடனேயே அதன் நோக்கம் எனக் கூறப்பட்டவைகளும் ஒழிந்து விடுவது வழக்கம். இந்த அதிகாரத்துவ மமதைகளுக்கு ஆங்கிலம் நீடிப்பது அத்திய வசியமானது. திரு. சண்முகலிங்கம் இதை ஒரு மொழியில் வலியுறுத்தினார் என்றால் திரு.டிவகலாலா வேறொரு பாஷையில் தெளிவுபடுத்திவிட்டார். இனி டிவகலாலா தர்பார் மகத்துவம் உணர்த்த ஆய்வுக் கட்டுரைகள் புத்தகமாய் வரலாம்: அதற்குமேல் ஒரு அணுவும் அசையாது.

கூட்டத்தில் சொன்னார்களே, வெளிநாடு போக வேண்டுமாம்: ஆங்கிலத்தை விட்டால் வேறு கதி? இங்கேயும் பல்தேசியக் கம்பனிகளுக்கும் அரசுக்கும் ஆங்கிலம் தேவபாஷையாய்த் தெரிகிறதே? ஆனால் மக்கள்....?

திருமலையிலிருந்து
சிறப்பு நிருபர்

## மலையகத்........

6ம் பக்க தொடர்ச்சி..

கடந்த கால அரசியலில் மேற்கொண்ட சில நடவடிக்கைகளை இன்று மேற்கொள்வதில் உள்ள சிரமங்கள் கவனிக்க வேண்டியவை. முக்கியமாக, தொழிற்சங்க வேலை. (பழைய)செங்கொடிச் சங்கம் போல ஒரு வலிய தொழிற்சங்கத்தை கட்டி எழுப்பும் வாய்ப்பு உடனடியாக இல்லை. அதைவிட, தொழிற்சங்க வேலைகள் மூலம் அரசியலில் சாதிக்கக் கூடியதும் முன்னை விடக் குறைவு. இதனால் தொழிற்சங்க வேலைகள் புரட்சிகர அரசியலுக்கு அவசியமில்லை என்று நாம் நிராகரிக்க முடியுமா? எங்கெல்லாம் தொழிற்சங்கங்கட்குள் உள்ள நல்ல சக்திகளுடன் தொடர்புகளை ஏற்படுத்தி தொழிலாளி வர்க்கத்தின் நண்பர்கள் யார் என்பதை மக்கள் அறியச் செய்வதற்கான ஒவ்வொரு வாய்ப்பும் பயன்படுத்தப்பட வேண்டும்.

தொழிற்சங்க அமைப்புகளை உருவாக்கும் வாய்ப்புகள் முடியுமான போது பயன்படுத்தப்பட வேண்டும். ஆயினும் அதன் நோக்கம் வெறுமனே ஒரு போட்டித் தொழிற்சங்கமாகச் செயற்படுவது அல்ல. மாறாகத், தொழிலாளர்களது உரிமைப் போராட்டங்களின் போது அப்போராட்டங்கள் காட்டிக் கொடுக்கப்படாது காப்பாற்றப்படவும் உறுதியாகவும் வலிமையாகவும் முன்னெடுக்கப்படவுமே கட்சியின் தொழிற்சங்க அமைப்புக்கள் பணியாற்ற வேண்டும். தொழிலாளி வர்க்கத்துக்கு துரோகம் செய்யும் தலைமைகளின் பின்னால் உள்ள தொழிலாளர்கள் நடைமுறை மூலமே தமது அரசியல் அறிவைப் பெறுகின்றனர். எனவே அவர்களுக்கு அந்த வாய்ப்பை வழங்கவும் புதிய புரட்சித் தலைமையை வேண்டுகிறவர்கட்கு ஒரு புகலிடத்தைத் தரவும் கட்சிக்கு நெருக்கமான தொழிற்சங்க அமைப்புக்களுக்கான தேவை இருக்கிறது.

பாராளுமன்ற அரசியற் பாதையை நிராகரிப்பது என்பது குறிப்பிட்ட சில அரசியல் சூழ்நிலைகளில் ஒரு போராட்ட முறையாகக் கூட அமையலாம். வேறு சூழ்நிலைகளில் அது அரசியல் தற்கொலையாகவும் முடியலாம். 1977ல் யூ.என்.பி. ஆட்சிக்கு வந்த பின்பு நமது பாராளுமன்ற ஜனநாயகம் என்ற முதலாளித்துவ ஜனநாயகத்துக்கும் குழிபறிக்கப்பட்டது. நாட்டின் ஒவ்வொரு அடிப்படை உரிமைக்கும் ஆப்பு வைக்கப் பட்டது. மக்களது அரசியல் வலிமை திட்டமிட்ட முறையில் சீர் குலைக்கப்பட்டது. இதற்கு எதிராக மனித உரிமை, ஜனநாயக வலிமை, தேசிய இனப்பிரச்சினை போன்றவற்றை வைத்து நடத்தப்பட்ட இயக்கங்களாலேயே யூ.என்.பிக்கு எதிராக சக்திகளை அணிதிரட்டித் தேர்தல்களில் யூ.என்பியை முறியடிக்க முடிந்தது. அந்தத் தேர்தல்களில் எவரும் ஒரு நிலைப்பாட்டை எடுக்காமல் இருந்திருந்தால் மக்களிடமிருந்து முற்றாகவே அந்நியப்பட்டுப் போகவே நேர்ந்திருக்கும். 1970 தேர்தலின் பின்பு மாக்ஸிஸ - லெனினிஸ கம்யூனிஸ்ட்கட்கும் இதுவே நடந்தது.

புதிய ஜனநாயக கட்சிக்குத் தேர்தலில் ஒரு கட்சியை அல்லது இன்னொரு கட்சியை ஆதரிப்பதை விட வேறு நிலைப்பாட்டுக்கு இடம் இல்லையா? இரண்டு பிரதான கட்சிகளுமோ அல்லது அணிகளுமோ மக்களுக்கு நல்லவையல்ல என்ற நிலையில் கட்சி எடுக்கக்கூடிய நிலைப்பாடு என்ன? தேர்தல் பகிஷ்கரிப்பு மூலம் சமுதாய மாற்றத்திற்கான ஒரு புரட்சிக்கு வாய்ப்பு உண்டா? இப்பகிஷ்கரிப்பின் மூலம் ஒரு அரசியல் இயக்கத்தைக் கட்டி எழுப்ப முடியுமா? போன்ற பல கேள்விகள் எழுகின்றன. மறுபுறம், தேர்தலில் பங்குபற்றுவதன் மூலம் ஒரு மாற்றுச் சக்தியை அடையாளம் காட்டி வலுப்படுத்த முடியுமா? என்ற கேள்வி எழுகிறது. இன்றைய சூழலில் பின்னயதே பொருத்தமான ஒன்றாகத் தெரிகிறது. ஆயினும் அதன் ஆபத்துக்களையும் நாம் கணிப்பில் எடுக்க வேண்டும்.

மக்களிடம் ஒரு புரட்சிகரக் கட்சி போவதற்கு அவசியமாகவும் ஆதாரமாகவும் உள்ள ஒரு செயல்முறையே அதன் புரட்சிகர நடைமுறைக்கு எதிரியாக மாறலாம். இலங்கை இடதுசாரி இயக்க வரலாற்றில் இது பல முறை நடந்துள்ளது. அதை எவ்வாறு தவிர்ப்பது என்ற கேள்வி மிகவும் முக்கியமானது. சாதகமான ஒரு அம்சம் ஏதெனில், பாராளுமன்ற அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றி எவரும் சமுதாயத்தில் ஒரு புரட்சிகர மாற்றத்தைக் கொண்டு வரமுடியாது என்பது இன்று முன்னைவிட அதிகமாக மக்களால் உணரப் பட்டுள்ளது. ஆயினும் பாராளுமன்ற, தொழிற்சங்க வேலைகட்குள்ளேயே தன்னைக் கட்டுப்படுத்திக்கொள்ளும் ஒரு கட்சி புரட்சிகரத் தன்மையை இழந்து விடும் அபாயம் உள்ளது. எனவேதான் கட்சியின் உண்மையான வலிமையும் அதிமுக்கியமான தளமும் வெகுஜன அரசியலாகவும் தளராத போராட்ட இயக்கங்களாகவும் இருப்பது அவசியம். எங்கெங்கெல்லாம் புரட்சிகரக் கட்சி செயற்பட தவறுகிறதோ அங்கங்கெல்லாம் ஏகாதிபத்தியமும் பிற்போக்கும் போலிகளையும் புல்லுருவிகளையும் அனுப்பி அந்த இடைவெளிகளை நிரப்புகிறது. இதுவே இன்றைய என்.ஜீ.ஓ. அமைப்புக்களின் பெருக்கத்துடன் அடிப்படை என்.ஜீ.ஓக்களை கடுமையாக விமர்சிப்பது அவசியம். அதைவிட அவசியம் என்.ஜீ.ஓக்களுக்கு மாற்றாக, உண்மையான வெகுஜன அமைப்புக்களைக் கட்டியெழுப்புவதாகும். மக்களுக்கு கட்சி அரசியலே வேண்டியதில்லை என்றும் கலை இலக்கிய பணிகளை அரசியலில்லாமலே நடத்த முடியும் என்றும் என்.ஜீ.ஒக்கள் மூலம் விஷமமான கருத்துக்கள் வளர்க்கப்படுகின்றன. புதிய ஜனநாயகக் கட்சி அதற்குக் தரக்கூடிய பதில் என்ன?

மலையகத்தில் புதிய புத்திஜீவிகளின் பரம்பரை வேகமாக வளர்ந்து வருகிறது. இவர்களது திறமையும் ஆர்வமும் திசை திரும்பி மக்களுக்கு விரோதமான அல்லது பயன்ற திசைகளில் போகாமல் தடுப்பது புரட்சிகர கட்சியின் பணிகளில் ஒன்று. மலையகத்தின் புத்திஜீவிகள் தமது வர்க்கப் பின்னணியையும் தமது கடந்த கால வரலாற்றையும் மறந்துவிட கூடாது. இந்த அடிப்படையிலே செயற்படக் கூடிய வெகுஜன அமைப்புக் களுக்கான தேவை இன்று பெரிதும் உள்ளது. தொழிலாளர் கல்வி வட்டங்கள், சமூக ஆய்வு வட்டங்கள், கலை இலக்கிய அமைப்புக்கள், பண்பாட்டு பேரவைகள் போன்றவை இவற்றுட் சில.

**தென்னிலங்கையின் முற்போக்கு சக்திகளுடன் இணைந்த ஒரு வலிய இடதுசாரி இயக்கத்தை கட்டியெழுப்ப புதிய ஜனநாய!க கட்சி ஊடாக மலையக மக்கள் தமது பங்களிப்பை வழங்க வேண்டும்.**

புதிய மலையக புத்திஜீவிகளது அறிவு பிற மலையக மக்களுக்கும் பயன்படும் விதமாக, ஒவ்வொரு இயலுமான நடவடிக்கையிலும் புதிய ஜனநாயகக் கட்சி தலைமைப் பங்கு வகிக்க வேண்டும். முடியாதவிடத்து தனது இயலுமான பங்களிப்பை வழங்க வேண்டும்.

பெண்கள், குழந்தைகள் போன்றோர் விடயங்களில் மலையகத் தமிழ் சமுதாயம் இலங்கையின் பிறதேசிய இனத்தவரை விடவும் பின்தங்கியுள்ளது. இவர்களது கல்வி மற்றும் சமுதாய உரிமைகள் யாவும் அரசியற் பிரச்சினைகளே. இத்தகைய சூழ்நிலைகளில், ஒரு புறம் கட்சியின் வழிகாட்டலின் கீழான வெகுஜன இயக்க அமைப்புக்கள் கட்டியெழுப்பப்படும் அதே வேளை, கட்சியின் நோக்கங்கட்குப் பகைமையற்ற வெகுஜன அமைப்புக்கள் ஏற்கனவே செயற்படும் இடங்களில் ஒத்துழைப்பதும் பங்குபற்றி நல்ல தொடர்புகளை வளர்த்துக் கொள்வதும் அவசியமானது. பாடசாலை மாணவர்களை நேரடியாக அரசியலில் ஈடுபடுத்துவது மொத்தத்தில் பாதகமான விளைவுகளையே உண்டாக்க இடமுண்டு. அதே வேளை, பாடசாலை மாணவர் மத்தியில் முற்போக்கான சிந்தனையையும் அரசியல், சமுதாய விடயங்களில் ஆர்வத்தையும் ஆரோக்கியமான அக்கறையையும் வளர்க்கும் தேவை உண்டு. பிரதேச வாரியான கல்வி ஆய்வு வட்டங்கள், சமூக சேவை மன்றங்கள் போன்றன உருவாக்கப்படுவது பயனுள்ளது. இவற்றில், கட்சியின் நேரடியான கண்காணிப்பை விட, ஆதரவான

11ம் பக்கம் பார்க்க

நன்றி - நூலகத்திட்டம்



# அரச சார்பற்ற நிறுவனங்களும் அறிவு ஜீவிகளின் நிலைப்பாடும்

அரசசார்பற்ற தொண்டு நிறுவனங்கள் எனப்படும் என்.ஜீ.ஓக்கள் பற்றி எடுத்துரைக்கப்பட வேண்டியது அவசியமாகின்றது. அவ்வாறு உரைக்கப்படும் போது சில அறிவுஜீவிகள் என்போர் தம்மை எதிர்த்து கிண்டல் செய்வதாகவும் எதிர்ப்பதாகவும் ஆதங்கப்படுகின்றனர். என்.ஜீ.ஓக்களை எதிர்ப்பது அவற்றின் செயற்பாடுகளை விமர்ச்சிப்பது வெறுமனே அவற்றில் பணிபுரியும் அல்லது அவற்றை முன்னின்று நடாத்துபவர்கள் மீதான காழ்ப்புணர்ச்சி காரணமாகவே அல்லது தனிப்பட்ட எதிர்ப்புணர்வு சார்ந்ததாகவோ இருக்க முடியாது. அப்படி யாராவது அவர்களை நோக்கினால் அதுவும் இயலாமையின் தனிப்பட்ட சுயநலன் வகை சார்ந்ததாகவே இருக்க முடியும். ஆனால் நடைமுறை மார்க்சிசவாதிகளாக நாம் நோக்குவது முற்றிலும் தொழிலாளி வர்க்க நிலைப்பாட்டிலான சமூகமாற்றம், சமூக அக்கறை காரணமாகவே ஆகும். அது தனிப்பட்ட நலன் சார்ந்த ஒன்றல்ல. தத்துவம் கொள்கை கோட்பாடு அடிப்படை கொண்ட நிலையுடனும் நடைமுறை அரசியல் வேலைமுறைகளுடனும் தொடர்புடைய நோக்கில் இருந்தே நோக்கப்படுவதாகும்.

சோவியத் யூனியனில் சோஷலிசத்திற்கு முடிவு கட்டியாயிற்று என்று முதலாளித்துவ ஏகாதிபத்திய சக்திகள் பிரகடனம் செய்து கொண்டன. அதேவேளை உலகத்தை ஒரே ஏகாதிபத்தியக் குடையின் கீழ் கொண்டுவரும் பூகோள மயமாதல் உலகின் முன்வைக்கப்பட்டது. அதனை மூன்றாம் உலக நாடுகளில் தாராளமயம் தனியார்மயம் என்பன மூலம் . திணிக்கப்பட்டு நடைமுறைப்படுத்துமாறு நிர்ப்பந்தம் செய்யப்பட்டது. அரசியல் பொருளாதார துறைகள் அதற்காக ஒவ்வொரு நாட்டிலும் மாற்றியமைக்கப்பட்டன. இந்த என்.ஜி.ஓக்கள் பின்தங்கிய மூன்றாம் உலக நாடுகள் அனைத்திலும் பல்கிப் பெருகி தொண்டுப் பணி எனக்கூறி தமது நடவடிக்கைகளை ஆரம்பித்தன.

இத்தகைய என்.ஜி.ஓக்கள் வெளித் தோற்றத்தில் பல்வகைப் பிரச்சினைகளுக்கு உள்ளான மக்கள் பிரிவினருக்கு உதவி செய்து அம்மக்களைக் கைதூக்கிவிடும் இரட்சக நிறுவனங்கள் போலவே தம்மை அடையாளங் காட்டிக் கொண்டன. மக்கள் சேவையே தமது சேவை எனக்கூறி அபிவிருத்தி, முன்னேற்றம், விழிப்புணர்வு, கல்வி போன்ற வற்றுக்காக செயல்படுத்துவதாகக் காட்டிக் கொண்டன. ஆனால் இந்த என்.ஜி.ஓக்களுக்குப் பின்னால் கெட்டியான உலக நோக்கு அதன் அடிப்படையிலான கருத்தியல் இருந்து வருவதை பலர் கண்டுகொள்ளவில்லை. அல்லது கண்டு கொள்ள விரும்பாது இருந்த விடுகின்றனர். அத்தகைய உலக நோக்கும் கருத்தியலும் முதலாளித்துவ ஏகாதிபத்தியமாகவே உள்ளன. அதன் காரணமாகவே மேற்குலகில் இருந்த அத்தகைய நோக்கையும் போக்கையும் நடைமுறைப்படுத்த நிதி வழங்கலைப் போதியளவுக்கு இந்த என்.ஜி.ஓக்களுக்கு வாரி வழங்கி வருகின்றன.

என்.ஜீ.ஓக்களிடம் காணப்பட்ட அபரீதமான நிதி வளத்தின் காரணமாக அவற்றை நாடிச் செல்பவர்களின் எண்ணிக்கையும் வளர ஆரம்பித்தன. பணம் பாதாளம் வரை செல்லும் என்ற உண்மையை இந்த என்.ஜீ.ஓக்களின் பின்னால் செல்பவர்களின் ஊடாகக் கண்டு கொள்ள இயலும். இவ்வாறு சென்றவர்கள் செல்லுபவர்களில் முக்கியமானவர்களாகக் கொள்ள வேண்டியவர்கள் அறிவு ஜீவிகள் அல்லது புத்தி ஜீவிகள் என்போராகக் காணப்படுகின்றனர். இலங்கையை எடுத்து நோக்கின் நாடு முழுவதிலும் பல்வேறுபட்ட என்.ஜீ.ஓக்களை முன்னெடுத்துச் செல்லும் பாத்திரத்தை இவ் அறிவு ஜீவிகளே வகித்து வருகின்றனர். இதில் குறித்துரைக்கப்பட வேண்டிய அம்சம் யாதெனில் சிங்கள மங்கள மக்கள் மத்தியிலும் தமிழ் மக்கள் மத்தியிலும் உள்ள என்.ஜீ.ஓக்களில் ஒரு காலத்திய மார்க்சிச வாதிகளாக இருந்தவர்களே முனைப்புடன் செயல்படுபவர்களாகவும் காணப்படுவதுதான். மார்க்சிசம் வர்க்கப்போராட்டம், சமூக மாற்றம், சமூக அக்கறை எளிமையான வாழ்க்கை, வர்க்க நிலைப்பாடு என நின்றும் பேசியும் எழுதியும் வந்த பல அறிவு ஜீவிகள் இவ் என்.ஜீ.ஓக்களால் உள்வாங்கப்பட்டு தமது முன்னைய நிலைப்பாடுகளில் இருந்து முற்றிலும் விலகிக் கொண்டவர்களாக தம்மை ஆக்கிக் கொண்டுள்ளனர். அதே வேளை முதலாளித்துவம் மாக்சிசத்தை முற்றாகத் துடைத்தெறிவதற்கான புதுவகைக் கருத்தியல்களை பல்வேறு 'இஸங்கள்' என்னும் பெயரில் பரப்புவதற்கும் இவ் அறிவுஜீவிகளே முன்னின்று செயல்பட்டும் வருகின்றனர்.

இத்தகைய என்.ஜீ.ஓக்களில் செயல்பட்டு வரும் அறிவு ஜீவிகளை ஒரே தரத்தில் வைத்து நோக்கவும் முடியாது. சிலர் தமது தொழில்சார் நிலையில் ஏதோ தம்மாலான சமூகப் பணி என்ற அளவில் பணிபுரிந்து வருகின்றனர். இவர்கள் எத்தகைய நவீன மயப்படுத்தப்பட்ட கருத்தியலையும் உள்வாங்கிக் கொண்டவர்களாக இல்லாது உள்ளனர். வேறு சில என்.ஜீ.ஓக்களில் உள்ளவர்களின் முழு நேரப் பணி பணம் பண்ணுவதாகவும் மார்க்சிச விரோதக் கருத்தியலைப் பரப்புவதாகவுமே காணப்படுகிறது. குறிப்பாக எண்பதுகளுக்குப் பின் வடக்கு கிழக்கில் ஏற்பட்டு வந்த யுத்த சூழலால் அவற்றின் மத்தியில் இவ் என்.ஜீ.ஓக்கள் வளர வாய்ப்புகள் அதிகரித்தன. அவற்றில் அறிவு ஜீவிகள் எனப்படுவோர் தொற்றிக் கொண்டு தமக்குரிய இடங்களை உறுதிப் படுத்தி அதன் மூலம் வளமான பண வருவாயை பெற்றுக்கொள்ள ஆரம்பித்தனர். தொண்ணூறுகளுக்குப் பின் கொழும்பு நோக்கி வந்த வடக்கு கிழக்குப் புத்திஜீவிகள் ஏற்கனவே இருந்த என்.ஜீ.ஓக்களில் புகுந்து கொண்டதுடன் புதிய புதிய பெயர்களில் அவற்றைத் தொடக்கி இலகுவாகவே பணப்புளக்கத்தைப் பெற்றும் கொண்டனர். காசோலைக்கு கையெழுத்திட மூன்று அறிவு ஜீவிகளும் ஒரு முகவரியும் குறிப்பிட்ட வரையறைக்குட்பட்ட ஒரு திட்ட அறிக்கையைத் தயாரிக்க மேலும் இரண்டொருத்தரும் இருந்தால் ஒரு என்.ஜீ.ஓ. உருவாக்கிக் கொள்ள இயலும். அத்தகைய நபர்கள் என்.ஜீ.ஓக்களின் மூலஸ்தானத்திற்கு நேர்மையும் விசுவாசமும் உள்ளவர்களாக இருந்தால் போதுமானது. அதனை உறுதிப் படுத்த ஏற்கனவே என்.ஜீ.ஓ. ஒன்றில் விசுவாசத்துடன் இருந்து வருவோர் சிபார்சு செய்தால் போதுமானதாகும். என்.ஜீ.ஓ. ஆரம்பித்த ஓரிரு வாரங்களில் வங்கிக் கணக்கில் விசுவாசத்தையும் நேர்மையையும் பரிசோதிக்கும் முதல் பணத்தொகுதி சில லட்சங்களாக வந்து சேர்ந்து விடும். அப்பணம் செலவிடப்பட்டதற்கான அறிக்கையை அறிவு ஜீவிகளின் திறமைக்கு ஏற்ப முன்னையவர்களின் அனுபவ அனுசரணையுடன் தயாரித்து அனுப்பியதும் அடுத்த அடுத்த தொகுதிப் பணக்கட்டுக்கள் பல லட்சங்களாக வந்து சோர்ந்துவிடும். இதன்பின் அமெரிக்கா முதல் லண்டன் வரை உலக நாடுகளுக்கு அடிக்கடி மாநாடு கருத்தரங்கு பயிற்சிப் பட்டறைகள் எனக்கூறி பயணங்கள் தொடரும். நாளடைவில் நன்கு வசதிகள் செய்யப்பட்ட காரியாலயங்கள் வாகனங்கள் இன்னும் பிற பிற வாய்ப்புகள் யாவும் வந்த சேர்ந்து கொள்ளும்.

என்.ஜீ.ஓக்களுக்கு கிடைக்கும் பெருந்தொகைப் பணத்தின் மூலம் அவர்கள் திட்டமிடும் திட்டங்கள் மூலமாக மக்களுக்கு சென்றடையும் நன்மைகள் மிகமிக அற்பமானதே. ஆனால் அந்த அற்ப சொற்ப உதவிகள் வழங்கும் போது தடல்புடல் விழாக்களும் ஒலி ஒளிப் பதிவுகளும் செய்யப்பட்டு பிரமாதமாகக் காட்டப்படும். அவற்றுக்கான ஒரு பகுதி கணக்குகளும் காட்டப்படும் மீதி மறைக்கப்படும். அத்துடன் இவ் என்.ஜீ.ஓக்கள் நின்று விடுவதில்லை. தமது மூலதனத்தாரின் கருத்துக்களை பரப்பவும் செய்வார்கள். தாங்கள் அரசியல் சார்பற்றவர்கள், கட்சி அரசியல் தேவையற்றது, மக்கள் தொண்டு தான் மகேசன் தொண்டு என்பதுடன் சிலர் நின்று கொள்வர். வேறு சிலர் புதிய 'இஸங்கள்' பற்றி கருத்தரங்குகள் வைத்து கதை அளப்பர். கட்டுரைகள் அச்சிட்டு விற்பனை செய்பவர்கள். அவை அநேகமானவை முதலில் ஆங்கிலத்திலேயே வெளியிடப்படும்.

சில என்.ஜீ.ஓக்கள் நகரங்களில் செயல்பட சிலவகையானவை கிராமப்புறங்கள் மலையகத் தோட்டப் புறங்களில் தொண்டு செய்வதையும் காணமுடிகிறது. தகரப்பானை, சட்டி வாங்கி அன்பளிப்புச் செய்வது கூட என்.ஜீ.ஓக்களின் தொண்டாகி நிற்கிறது. சமூக முரண்பாடுகள் அவற்றுக்கான காரணங்கள் பற்றி மக்கள் அறியவோ தெளிவு படவோ கூடாது. அப்படி அறிய முற்பட்டால் அது அரசியலாகி விடும் என்பார்கள். ஆனால் தாங்கள் முதலாளித்துவ ஏகாதிபத்திய அரசியலின் கைக் கருவிகளாக செயல்பட்டு வருவதை மக்களிடம் இருந்து தொண்டுகள் மூலம் திறம்பட மறைத்துக் கொள்வர்.

ஒரு காலத்தில் காலனித்துவ வாதிகளுக்கு கிழக்கு நாடுகள் தங்கச் சுரங்கங்களாக இருந்தன. இன்றும் முதலாளித்துவ பல்தேசியக் கம்பனிகளுக்கு மூன்றாம் உலக நாடுகள் தங்கச் சுரங்கங்களாகவே இருந்து வருகின்றன. இதனை மறைப்பதற்கு என்.ஜீ.ஓக்கள் மூலம் பல முனைக் காரியங்கள் ஆற்றப்பட்டு வருகின்றன.

பின் தங்கிய மூன்றாம் உலக நாடுகளின் மோசமடைந்து வரும் பொருளாதார அரசியல் சமூக கலாச்சார துறைகளின் பின்தங்கிய நிலை என்.ஜீ.ஓக்களின் வாழ்வுக்கு உகந்த சூழலை வழங்கி வருகின்றன. இப்பின்தங்கிய பிரதேசங்களும் பிரச்சனைகளால் பாதிக்கப்பட்ட மக்களும் என்.ஜீ.ஓக்களுக்கு தங்கச் சுரங்கமாகவே இருந்து வருகின்றன. இதனை அனுபவித்து வரும் அறிவு ஜீவிகள் வெளிப்படையாக இல்லாது விடினும் தம்மளவில் இத் தங்கச்சுரங்கங்களில் இருந்து பெறக்கூடிய அதிஉயர் பலாபலன்களை பெற்றுக் கொள்ளவே செய்கிறார்கள்.

இன்று மூன்றாம் உலக நாடுகளில் ஆதிக்கம் பெற்றுள்ள என்.ஜீ. ஓக்களை முற்போக்காளர்கள், சமூக அக்கறையாளர்கள் ஏன் கம்யூனிஸ்டுகள் கூடப்பயன் படுத்தலாம் என நம்பிய சூழல் ஒன்று இருந்தது. இன்றும் சிங்கள மக்கள் மத்தியில் உள்ள ஓரிரு என்.ஜீ.ஓக்களை மேற்கூறிய சக்திகள் குறித்த வரையறைக்குள் பயன்படுத்தி வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கதாகும். ஆனால் பல மூன்றாம் உலக நாடுகளில் இவற்றைப் பயன்படுத்த முற்பட்டு பல நல்ல அறிவு ஜீவிகளை இழக்க வேண்டியே ஏற்பட்டது. அவ்விழப்பு கருத்தியல் சீரழிவாகவும் பணமோகம் கொண்ட சுய நலன்களாகவும் மாறிக் கொண்டன. ஆதலினாலேயே பல மூன்றாம் உலக நாடுகளில் உள்ள சமூக அக்கறையும் சமூக மாற்றமும் வேண்டி நின்ற அறிவு ஜீவிகளும் அவர்கள் சார்ந்த கட்சிகள் இயக்கங்கள் என்.ஜீ.ஓக்களை நிராகரித்தனர். அத்துடன் அவற்றின் சுயரூபத்தை அம்பலப்படுத்தி என்.ஜீ.ஓயிசம் என்பதற்கு எதிராகப் போராட வேண்டும் என வேண்டுகோள் விடுத்தனர். இதன் முழுமையான அனுபவத்தை பிலிப்பீன்ஸ் நாட்டில் காணலாம்.

ஆதலால் என்.ஜீ.ஓக்களை நடாத்தி வரும் அறிவு ஜீவிகள் அவற்றோடு தம்மை இணைத்து சமூக அக்கறைக்கு அப்பால் பணத்திற்காக வாய் பிழந்து நிற்கும் அறிவுஜீவிகள் என்போரையிட்டு மிக விழிப்பாகவும் அவதானமாகவும் இருப்பது அவசியமாகிறது.

-நமன்-

---

ஆசிரியர் புதியபூமி
அன்புள்ள ஆசிரியருக்கு,

சரிநிகர் பத்திரிகை தமிழ் மக்களிடையே இயங்கி வருகின்ற ஒரே நல்ல இடதுசாரிகட்சியான புதிய ஜனநாயகக் கட்சியியைத் திட்டமிட்டே தாக்குகிறது என்று நீங்கள் குற்றம் கூறியிருக்கிறீர்கள். அது முழுவதும் உண்மை. நீங்கள் சொன்ன இதழுக்கு அடுத்த அடுத்த இதழ்களிலும் அதே மாதிரி வம்புத்தனம் இருந்தது. மலைநாட்டில் புதிய ஜனநாயகக் கட்சியை நோக்கி புதிய வாலிபர்கள் வருவது பற்றி ஒத்தக் கொண்டிருக்கிற கட்டுரையில் மக்களைப் பாராளுமன்ற அரசியலில் இழுத்து ஏமாற்றுவார்களோ என்ற வீண் சந்தேகம் தெரிவிக்கப் பட்டிருக்கிறது. இந்த விதமான சந்தேகம் ஏன் எழுப்பப் படுகிறது? இன்று ஒரு நல்ல இடதுசாரிக்கட்சி என்ன செய்ய வேண்டும் என்றாவது இவர்கள் சொல்லட்டும். எல்லாரையும் எதையாவது செய்யவிட்டுவிட்டு தப்புக் கண்டுபிடிக்கிறதில் என்ன கெட்டிக்காரத்தனம் இருக்கிறது?

பொறுக்கி அரசியல்வாதிகளை எல்லாம் தேடித்தேடி பேட்டி எடுக்கிற சில பத்திரிகைகள் புதிய ஜனநாயகக் கட்சித் தலைவர்களை ஏன் பேட்டி எடுக்க மாட்டேன் என்கிறார்கள்? ஜே.வி.பிக்கு சரிநிகரில் எவ்வளவு விளம்பரம் கிடைக்கிறது? இப்போது அதற்கு ஆதரவாகப் பேசுவதால் விக்கிரமபாகு கருணாரத்தினவுக்கும் ஒழுங்காக எழுத இடம் இருக்கிறது. புதிய இடதுசாரி ஐக்கியத்தை ஒழிக்க சின்ற முடிகிற வேலையைத் தானே இந்தப் பேர்வழிகள் செய்கிறார்கள். புதிய ஜனநாயகக் கட்சியும் பிற இடதுசாரி ஐக்கிய முன்னணிக் கட்சிகளும் நிதானம் தப்பினால் அவர்களுக்குத்தான் சந்தோசம். தயவுசெய்து இவர்களுடைய பொறியில் விழாதீர்கள்.

வடக்கு முஸ்லீம் அகதிகளுக்காகப் பேசுவதற்கு ஒரு அமைப்பு இருக்கிறது. அப்படி இருக்க அவர்களுக்கு என்ன தேவை என்றுசொல்ல நோர்வேயி லிருந்து வந்த ஒரு பேராசிரியர் தான் இவர்களுக்கு தேவைப்படுகிறது. இப்போது மாக்சிசத்தைத் திட்டுவதற்கு 'சங்கமன்' என்று இன்னொரு மொட்டைக் கடதாசி பேர்வழி வாடகைக்குப் பிடிக்கப்பட்டு இருக்கிறார்.

தயவு செய்து புதிய பூமியை சீக்கிரம் வாரப் பத்திரிகையாகக் கொண்டுவர நடவடிக்கை எடுங்கள். மக்களுக்கு உண்மைகளைச் சொல்லி நீதிக்கும் நியாயத்துக்கும் போராட மக்கள் நன்மையை மனதில் கொண்ட பத்திரிகை ஒன்று ஒழுங்காக வர வேண்டும்.

சி. ஆறுமுகம்
கண்டி

நன்றி - நூலகத்திட்டம்



# அமெரிக்கத் தூதரகங்கள் மீதான தாக்குதல்: உலகின் அதிமுக்கிய பயங்கரவாதி யார்?

தான்சானியாவிலும் கென்யாவிலும் உள்ள அமெரிக்கத் தூதரகங்கள் மீது நடத்தப்பட்ட குண்டு வெடிப்புத்தாக்குதலின் விளைவாக எல்லாம் வல்ல அமெரிக்க ஏகாதிபத்திய எசமானத்துவம் கொஞ்சம் அதிர்ந்து போய் உள்ளது. சகல அமெரிக்கத் தூதரகங்களிலும் காவல், பாதுகாப்பு நடவடிக்கைகள் உக்கிரமாகியுள்ளன. பாகிஸ்தானிலிருந்து அமெரிக்கர்கள் பலர் வெளியேறுமாறு அமெரிக்க ஆட்சியாளர்களால் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். இஸ்லாமிய அடிப்படைவாதிகள் எனக் கூறப்படும் ஒரு தீவிரவாதக் குழு இத்தாக்குதல்களுக்கு உரிமை கோரியுள்ளது. ஐந்து சந்தேக நபர்கள் கென்யாவிலிருந்து அமெரிக்காவுக்கு விசாரணைகட்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

இந்தத் தாக்குதல்கள் பல நாடுகளாலும் இஸ்லாமிய அரசியற் கட்சிகளாலும் வன்மையாகக் கண்டிக்கப்பட்டுள்ளன. அரசாங்க ஊழியர்கள் உட்பட அப்பாவி மக்கள் இவ்வாறான வன்முறைக்கு ஆளாவது கண்டிக்க வேண்டியது தான். இவ்வாறான வன்முறை மூலம் அமெரிக்க ஏகாதிபத்தியத்தை முறியடிக்க முடியாது. தனிமைப் படவே நேரிடும். இது வெகுஜனப் போராட்டப் பாதை அல்ல. இது விரக்தியின் அரசியல்.

இத்துடன் நாங்கள் நிறுத்திவிட முடியுமா? இந்த விரக்தி ஏன் ஏற்பட்டது? உலகப் பயங்கரவாதத்தின் மோசமான பிரதிநிதியாக இஸ்லாமிய அடிப்படை வாதம் சித்தரிக்கப்பட்டு வருகிறது. அதோடு இப்பயங்கரவாதத்தைக் காரணங்காட்டி ஈரான், லிபியா போன்ற நாடுகள் மீது பழிவாங்கல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. அமெரிக்கா எண்ணெயைக் கொள்ளையடிப்பதற்கு வசதியாக மத்திய கிழக்கில் போர்ச்சூழல் பேணப்படுகிறது. ஈராக் ஆட்சியை எதிர்க்கிற பேரில் ஈராக் மக்கள் ஈவிரக்கமின்றி தண்டிக்கப் படுகின்றனர். அமெரிக்காவுக்கு ஆதரவான அல்ஜீரியா சர்வாதிகார ஆட்சி ஜனநாயக ரீதியிலான தேர்தல் முடிவுகளை கவுரவிக்க மறுத்ததால் அங்கு இஸ்லாமிய இயக்கம் வன்முறையில் இறங்கியுள்ளது. துருக்கியின் அமெரிக்க ஆதரவு ஆட்சியின் கீழ் குர்திஷ் மக்கள் கொடுமையாகச் சுரண்டப்பட்டு வந்துள்ளனர். அவர்களது போராட்டமும் அமெரிக்க ஆசியுடன் நசுக்கப்பட்டு வருகிறது.

இந்தோனீசியா ஆனாலும் சரி, அரபு ஷேக்குகளது ஆட்சியானாலும் சரி இஸ்லாமிய சர்வாதிகார ஆட்சிகள் அமெரிக்காவின் கொள்ளையடிப்புக்கு ஆமாப் போடுகிற வரையில் அவர்கள் எதையும் செய்யலாம். ஆப்கானிஸ்தானில் சோவியத் சார்பு ஆட்சியைக் கவிழ்க்க இஸ்லாமிய அடிப்படைவாதிகளான தல்பானுக்கு சவூதி அராபிய ஆட்சி பாகிஸ்தான் மூலம் வழங்கிய உதவிக்கு அமெரிக்காவின் ஆசி இருந்தது. சவூதி அராபிய ஆட்சி முன்னாள் சோவியத் யூனியனுள் இருந்த ஆசிய நாடுகளுள்ளும் சீன எல்லைப் பகுதிகளிலும் தீவிர மதவாதிகளைக் கிளறிவிடும் முயற்சிகளை அமெரிக்கா கண்டுகொள்வதில்லை. ஆயினும் அமெரிக்காவின் நலன்கட்கு எதிராகச் செயற்படும் போது மட்டும் இஸ்லாம் ஒரு பிரச்சனையாகிறது. இஸ்லாமிய அடிப்படைவாதம் ஒரு பெரிய பூதமாகி விடுகிறது.

இஸ்லாமிய தீவிரவாதமோ வேறெந்த மதவாதமோ மக்களுக்கு நன்மையானதல்ல. ஈரானின் அனுபவம் நமக்கு இதை உணர்த்தியுள்ளது. இன்னும் உணர்த்தி வருகிறது. ஆப்கானிஸ்தானின் நிகழ்வுகளும் இதையே கூறுகின்றன. ஆயினும் விரக்தி மக்களைத் தீவிர நிலைப்பாட்டுக்குத் தள்ளி விடலாம். இந்த விரக்தியின் காரணம் யாரோ அவரே அதன் விளைவுகட்கு மூல காரணம்.

உலகில் இடதுசாரி இயக்கங்களைக் கவிழ்க்கும் முயற்சியில் அமெரிக்கா 1950களிலிருந்தே கட்டவிழ்த்து விட்டபேய்கள் இன்று அமெரிக்காவுக்கு எதிரான புதிய பூதங்கள் தோன்ற வழிவகுத்துள்ளன. குறுகிய தேசியவாதமும் தேசிய இனங்கட்குமிடையான மோதலும் நாடுகளுக்கிடையிலான பகைமையும் அன்று அமெரிக்காவுக்கு வசதியான ஆயுதங்கள். இன்று அதே ஆயுதங்கள் அமெரிக்காவின் நலன்களை மிரட்டுகின்றன. அமெரிக்க ஏகாதிபத்தியம் உலக நாடுகள் மீது ஆதிக்கம் செலுத்தும் வரை, நாடுகளின் உள் விவகாரங்களில் குறுக்கிடும் வரை அது தனது அடக்குமுறைக்கான விலையைக் கொடுத்தே தீரும்.

வெகுஜன அரசியலற்ற வெறும் பயங்கரவாத நடவடிக்கைகள் மூலம் மக்களது விடுதலையை வென்றெடுக்க முடியாது என்ற பாடத்தையும் அமெரிக்கா என்ற பிரதான பயங்கரவாத ஆதிபத்தியத்திற்கு எதிரான போராட்டப்பாதை வெகுஜன அரசியலே ஒழிய குறுகிய பார்வையுடைய மததீவிரவாதமல்ல என்பதையும் இவ்விடத்தில் வலியுறுத்தியே ஆக வேண்டும்.

-மோகன்-

# கிழக்கு திமோர் கால் நூற்றாண்டுப் போராட்டத்தின் கடுந்தவம்!

இந்தோனீசியாவில் 1965ன் பின்பு உருவான ஃபாஸிஸ சர்வாதிகார ஆட்சி தனது அடக்குமுறைக் கொலைக் கரங்களை 5 லட்சத்துக்கும் அதிகமான இந்தோனீசிய முற்போக்கு வாதிகளும் அவர்களது குடும்பத்தினரும் மீது பிரயோகித்து நாட்டைத் தனது இரும்புப் பிடிக்குள் கொண்டு வந்ததுடன் நிற்கவில்லை.

1974ல் போர்த்துக்கேய கொலனி ஆட்சி தடுமாறி விழத் தொடங்கிய போது தனது எல்லையில் இருந்த கிழக்கு திமோர் என்கிற போர்த்துக்கேய கொலனியைக் கைப்பற்றவும் அது திட்டமிட்டது. 1976ல் போர்த்துக்கேயர் வெளியேறிய போது இந்தோனீசியாவின் படைகள் கிழக்கு திமோரைப் பிடித்தன. அந்தச் சிறிய நாட்டின் விடுதலைக்காக போராடி வந்த வந்த மக்களோ புதிய எசமானர்களைக் கடுமையாக எதிர்த்தனர். ஆயினும் சர்வதேச நிலவரங்கள் அவர்கட்குச் சாதகமாக இருக்கவில்லை. ஏகாதிபத்திய நாடுகள் எதிர்பார்த்தபடியே, இந்தோனீசிய சர்வாதிகார ஆட்சியை ஆதரித்தன. சீனாவுடனான முரண்பாட்டால் சோவியத் யூனியனும் மறைமுகமாக இந்தோனீசிய ஆட்சியுடன் ஒத்துப்போனது. ஆயினும் போராட்டம் தளராமல் தொடர்ந்தது. அது பெரிய வெற்றிகளென்று எதையும் பெறா விட்டாலும் பத்து லட்சமளவில் மக்களைக் கொண்ட அந்த மண்ணில் நிலைகொண்ட பத்தாயிரக் கணக்கான இந்தோனீசியப் படைகளை உறுதியாக எதிர்த்துப் போராடிவந்த மக்கள் தமது சொந்த பலத்திலேயே தங்கி நின்றனர். இந்த விடுதலைப் போரின் விளைவாக கிழக்கு திமோரின் மீது கடுமையான அடக்குமுறை திணிக்கப்பட்டது. விடுதலைப் போராட்டத் தலைமை இந்தோனீசியத் தலைநகரில் சிறைவைக்கப்பட்டது. ஆயினும் சர்வாதிகார ஆட்சியின் ஒவ்வொரு கொடுமையும் அதன் சவப்பெட்டியில் அறையப்பட்ட ஒவ்வொரு ஆணியாக மாறியது. இந்த ஆண்டு சர்வாதிகாரி சுகார்த்தோ தூக்கி எறியப்பட்டதை அடுத்து புதிதாக ஆட்சிக்கு வந்துள்ள ஹபீபி திமோருக்கு சுயாட்சி வழங்க உடன் பட்டிருக்கிறார். இதற்கான காரணம் கருணையோ நியாய உணர்வோ அல்ல. கிழக்கு திமோரில் பத்தாயிரக்கணக்கான படையினரை வைத்திருக்கக் கட்டாது என்ற உண்மைதான். கிழக்கு திமோரின் மக்கள் வேண்டுவதோ விடுதலை. அது அவர்களின் தெரிவாக உள்ளவரை அது மதிக்கப்பட வேண்டும். ஏனெனில் கிழக்கு திமோர் இந்தோனீசியாவால் ஆக்கிரமிக்கப் பட்ட பூமி.

இன்றைய இந்தோனீசிய ஆட்சி இன்னமும் பழைய ஆட்சியின் அரசியல் பொருளாதாரக் கொள்கைகளையே பின்பற்றி நாட்டை ஐ.எம்.எப்பும் உலக வங்கியும் சொன்ன திசையில் நடந்த முற்படுகிறது. எனவே இந்தோனீசிய மக்களது விடுதலைப் போராட்டம் இன்னும் வெகுகாலம் தொடர நேரலாம். ஆயினும் கிழக்கு திமோர் மக்களது உறுதியான போராட்டம் இந்தோனீசிய மக்களின் விடுதலைக்கான போராட்டத்தை வலுப்படுத்துகிறது.

ஒவ்வொரு நியாயமான போராட்டமும் பிற நியாயமான போராட்டங்கள் ஒவ்வொன்றையும் ~~சுட்டிக்காட்டிய~~ உண்மையை கிழக்கு திமோரின் போராட்டமும் நமக்கு விளக்குகிறது.

–மோகன்.

# சீன ஆக்கிரமிப்பா இந்திய ஆக்கிரமிப்பா

ஏ.ஜே. நூராணி ஒரு முக்கியமான இந்திய வழக்கறிஞர். அவர் புரொண்ட்லைன் பத்திரிகையில் சீன–இந்திய எல்லைத் தகராறு பற்றி எழுதிய கட்டுரை '98 ஓகஸ்ற் மாத இதழ்களில் வந்துள்ளது. அதில் 1947ல் இந்திய அரசு வெளியிட்ட இந்திய வரைபடத்தில் இந்தியா தனது என்று கூறுகிற காஷ்மீர எல்லைப்பகுதி (அக்சாய்–சின் பிரதேசம்) உள்ளடங்கவில்லை எனவும் 1950ல் அது சேர்க்கப்பட்டது எனவும் ஆதார பூர்வமாகக் காட்டியுள்ளார்.

அது மட்டுமன்றி 1950களிலிருந்தே எல்லை பற்றிய பேச்சுவார்த்தை தொடர்பாக சீன அரசு எடுத்த சகல முயற்சிகளையும் நேரு அரசாங்கம் மிகுந்த அலட்சியத்துடன் நடத்தியதாயும் 1962ன் பின் சீனாவின் ஒவ்வொரு சமரச முயற்சியும் இந்திய ஆட்சியாளர்களால் 1990கள் வரை திமிர்த்தனமாகவே புறக்கணிக்கப் பட்டதெனவும் விளக்கியுள்ளார்.

யாருக்கு யார் மிரட்டலென்பது நமக்கு இப்போது தெரிகிறதா? பிரிட்டிஷ் எசமானர்கள் கைப்பற்றத் தவறிய திபெத்தைப் பிடிக்கும் ஆவல் சுதந்திர இந்தியாவின் ஆட்சியாளர்களை விடவில்லை என்பது 1959ல் தாய்லாமாவுக்கு உபசரிப்பு வழங்கி புகலிடம் தந்தபோது சந்தேகிக்கப்பட்ட ஒன்றே. நுரானி கூறுவது சீனஅரசாங்கம் முன்பு கூறியவற்றை உறுதிப் படுத்துகிறதோடு நேரு குடும்பத்தின் இந்திய விஸ்தரிப்புவாத அரசியல் பற்றியும் உறுதிப்படுத்துகிறது.

# யாரை ஏமாற்ற இந்தத் தாக்குதல்கள்?

ஆப்கானிஸ்தானிலும் சூடானிலும் 'பயங்கரவாதிகளது தளங்கள்' மீது குண்டு வீசியதன் மூலம் தான் இன்னமும் பழைய சர்வதேச ரவுடிதான் என்று அமெரிக்கா காட்டிவிட்டது. இத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதன் மூலம் உலகின் 'முதல்' நாட்டின் 'முதலாவது' மனிதர் மாட்டிக் கொண்டுள்ள சங்கடத்திலிருந்து கவனத்தை திசை திருப்ப முடியலாம். ஆனால் நீண்டகாலத்தில் இதன் விளைவுகள் என்ன என்பதை அமெரிக்க அதிகாரம் எத்தனை முறை படித்தாலும் அதற்கு உறைக்காது.

நாட்டு மக்களின் கவனத்தை திசை திருப்புவதற்கு நடத்தப்பட்ட போர்களின் பட்டியல் நீளமானது. ஆன்மிக அணுகுண்டு வெடிப்பும் அது போன்றதுதான் மக்களைச் சிலகாலம் ஏமாற்றும் நடவடிக்கைகள் மூலமும் மக்கள் அரசியலில் பாடங்களைப் படிக்கிறார்கள். மக்களை ஏமாற்ற முயல்வோர் முடிவில் தாங்கள் தான் ஏமாந்து போவார்கள்.

# தலாய்லாமாவின் மதச் சுதந்திரம்

தலாய்லாமாவுக்கெதிராக அமெரிக்காவில் புத்த பிக்குமாரின் ஆர்ப்பாட்டம் ஒன்று நடந்தது பற்றி இங்கு நமக்குத் தெரியாது. அது பற்றி றோய்ட்டரோ, ஏ.ஃ.பியோ ஏன் சொல்ல வேண்டும்!

NI சஞ்சிகை இந்த ஆர்ப்பாட்டம் பற்றித் தனது 1998 ஓகஸ்ற் இதழில் படமும் வெளியிட்டுள்ளது.

350 வருடமாக திபெத்திய பௌத்தர்கள் வழிபட்டு வரும் டோர்ஜே ஷுக்டென் என்ற தெய்வ வழிபாட்டை தலாய்லாமா தடைசெய்ததையிட்டே இந்த எதிர்ப்பு எழுந்தது.

தலாய்லாமாவின் பாதுகாப்புக்கு இந்த தெய்வம் எதிரி என்று ஒரு மந்திரவாதி சொன்னதாலேயே இந்த ஆணை பிறப்பிக்கப்பட்டது. இந்தியாவில் உள்ள திபெத்திய அகதி முகாம்களில் உள்ள வழிபாட்டாளர்கள் கல்லெறி, எறிகுண்டுத் தாக்குதல் போன்றவற்றுக்கும் மிரட்டலுக்கும் ஆளாகி உள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது. இது மதத்துக்கு உட்பட்ட விதமாக மட்டுமில்லாமல் மதநம்பிக்கை பற்றிய விவாதமாகவும் விரிவு பெற்றுள்ளது. முன்னாள் அடிமைச் சொந்தக்காரரான தலாய்லாமா தனது தொண்டர்களையும் குண்டர்களையும் கொண்டு அயல் மண்ணிலும் ஒரு அடிமை ராச்சியத்தை நிறுவி ஆள முயலுகிறாரா?

"தலாய்லாமாவின் நலன்கள் என்று வரும் போது ஜனநாயகம் சுதந்திரம் போன்ற கருத்துக்களுக்கு ஒரு பொருளும் இல்லை" என்று ஷுக்டென் வழிபாட்டாளர்கள் கூறியுள்ளது தான் தலாய்லாமாவின் மத அரசிலின் சாராம்சம்.

நன்றி - நூலகத்திட்டம்



## அக்கம் பக்கம்

# வெப்பியாரங்கள் தணியவேண்டுமானால்...

இப்பொழுதொல்லாம் சட்டம் ஒழுங்கு நிலைமை அவ்வளவு சரியில்லை என்ற கருத்து, குடாநாட்டிலே உலாவத் தொடங்கியிருக்கிறது. விரும்பத் தகாத சம்பவங்கள் அதிகமதிகமாக நடந்து வருகின்றன. பாதுகாப்புக்கு பொறுப்பான ஆளணிகளும் ஆரவாரங்களும் நிறைய இருந்தும் கூட அமைதியான சூழலை காண்பது அரிதாகிக் கொண்டு வருகிறது.

இன்று தலையெடுத்து நிற்கும் ஒழுங்கீனங்களின் அடி நிலை ஏதுக்கள் முற்றிலும் வித்தியாச மானவை. இவற்றுக்கு அணை துணையாக நிற்கும் சூழற் காரணிகள், நீதி நிர்வாகத்திலும் சட்ட நிறைவேற்றத்திலும் காணப்படும் தளர்ச்சியும் ஈடாட்டமும் என்றே கருத்த தோன்றுகிறது.

இப்பொழுதொல்லாம் திருட்டுகளும் கொள்ளைகளும் அத்து மீறல்களும் சண்டித்தனங்களும் பற்றிய செய்தி களைத்தான் நாம் இங்கு அடிக்கடி கேள்விப்படுகிறோம். புதுப்புது விதங்களிலே இருட்டு வேளை களிலும் எதிர்பாராத தருணங்களிலும் திடும் திடும் என்று நுழைந்து தந்திரமான வகையிலும் சண்டித்தனத்தின் துணைகொண்டு வெருட்டியும் மிரட்டியும் கயவர்கள் தங்கள கைவரிசையைக் காட்டத் தொடங்கியுள்ளார்கள். இவ்வாறு அடாத செயல்களில் இறங்கும் துணிச்சல், ஒரு மூன்று நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் இருந்த சட்ட ஒழுங்கு நிலைமையை இன்றுள்ள நிலைமையுடன் ஒப்பிட்டுப் பார்ப்பதற்கு நம்மைத் தூண்டுகிறது. "என்ன இருந்தாலும் 'அந்தக் காலத்தில்' இப்படியொல்லாம் நடப்பதில்லை" என்ற அங்கலாய்ப்பு எழுவதைக்கூட நாம் இன்று அங்காங்கே அவதானிக்கிறேம். 'தட்டிக் கேட்பதற்கு ஆளில்லா விட்டால், தம்பி சண்டப்பிரசண்டன்' என்ற நிலைமையின் விளைவுதானே இது என்றும் யோசிக்க வேண்டி யுள்ளது. தட்டிக்கேட்கும் ஆட்கள் அருகியுள்ளதொரு நிலையில், பலரும் தடியெடுப்பதற்குத் துணிந்து விடுகிறார்களோ? தடி எடுப்பவன் தண்டக்காரன் என்ற நிலைதானோ? இது ?

சட்டம் ஒழுங்கின் காவலர்கள் என்று இங்கு இப்பொழுது வந்த அமர்ந்திருப்போருக்கு, மக்கள் நலஞ் சார்ந்த நடவடிக்கைகளில் மனம் தோய்ந்து ஈடுபடுவதற்கு நாட்டமும் வேட்கையும் போதுமளவு இல்லை. அவர்களும் வேறு பல சோலிகளும் அக்கறைகளும் கவலைகளும் உள்ளன. இங்கு செயற்படும் பொலிசார்களும் மக்கள் மொழியை மட்டுமட்டாக அறிந்தவர்களாகவே உள்ளனர். இங்குள்ள மக்களும் ஆட்சித்தரப்பாருடன் சரளமாக உரையாடும் ஆற்றல் குறைந்தவர்களாகத் தான் இருக்கிறார்கள். இப்படிப்பட்டதொரு சூழலிலே தங்கு தடையில்லாத செய்திப் பரிமாற்றம், கருத்துப் பரிமாற்றம், தகவல் பரிமாற்றம் எப்படி உண்டாகும்?

ஆளுகிறவர்களும் ஆளப்படுகிற வர்களும் வெவ்வோறு தரப்பினராகத் தம்மைக் கருதிக் கொள்ளும் நிலையில் அவர்களிடையே நல்விளக்கம் எப்படி உண்டாகும்? புரிந்துணர்வு எப்படி உண்டாகும்? நல்லெண்ணம் எப்படித் தலை தூக்கும்? 'அவர் யாரோ, நாம் யாரோ' என்ற மனப்பான்மை ஆட்சி செலுத்திக் கொண்டிருக்குமானால், ஆளப்படுவோர் தம் குறைகளையும் முறைப்பாடுகளையும் தயக்கமின்றி நம்பிக்கையுடன் எடுத்துரைக்கும் நிலை தோன்றுதல் கடினம்.

இப்படியான இடைஞ்சல்கள் – அகத்தடைகள் – இருக்கின்றதொரு சூழ்நிலை தீங்கியற் குற்றங்களுக்கு நல்ல விளைநிலமாகும். சட்டவொழுங்கின் காவலர்கள் தம் பொறுப்புகளை திறம்பட நிறை வேற்றும் ஆர்வமோ வலிமையோ அற்றிருக்கும்போது, அமைதி, சமாதானம், சாந்தி என்று எவ்வளவு உரத்து இடைவிடாமல் ஓதிக்கொண்டிருந்தாலும் ஒருவித பலனும் கிடைக்கப் போவதில்லை. ஏனென்றால், எந்த நியமங்களையும் நெறிகளையும், பண்புகளையும் துச்சமாக மதித்துத் தூக்கி எறிந்து போட்டுடைக்கத் தயங்காத ஒரு சாரார் எந்தச் சமுதாயத்திலும் இருக்கத்தான் செய்கிறார்கள். இது புறக்கணிக்க முடியாத – ஆனால் கசப்பானதொரு – மெய்யுண்மை. இப்படிப்பட்ட குழப்படிக் காரர்களை ஒழுங்காக வைத்திருக்க வேண்டுமானால், குற்றவாளிகள் தண்டிக்கப்படுவர் என்ற மனப்பயம் அவர்களிடம் உண்டாக்கப்பட வேண்டும்.

'அச்சமே கீழ்களது ஆசாரம்' என்பது ஒரு பழைய தமிழ் வசனம். இதைச் சொன்னவரும் இலேசுபட்ட மனிதர் அல்ல. பலருக்கு பழக்கமான ஒருவர்தான். ஆம். திருவள்ளுவர். இதே உண்மையை அவர் வேறொரு முறையிலும் தெளிவாக்கினார்.

**"சொல்லப் பயன்படுவர் சான்றோர்: கரும்பு போல் கொல்லப் பயன்படும் கீழ்"**

இங்கு 'கொல்லுவது' என்று சொல்லப்பட்டது மரண தண்டனையை மாத்திரம் அல்ல. மேலே நாம் குறிப்பிட்ட மனப்பயத்தை உண்டுபண்ணும் செயல்முறை களையும் தான். அது சரியாக உண்டாக்கப்படவில்லை என்றால் தரும நூல்களும் சாத்திரங்களும் கூட, பிணந்தின்னிகளாக மாறிவிடும். அந்த நிலையிலே, சட்டங்கள் எம் மாத்திரம்? பட்டிமன்றக்காரர்களும், சொற்பொழிவாளர்களும், பிரசங்கிகளும், உபதேசிமாரும் என்னத்தை தான் சாதித்துவிட முடியும்? எத்தனை உவமான உவமேயங்களையும் உபகதை களையும் விகடத்துணுக்கு களையும் அடுக்கடுக்காகக் குவித்தாலும், அல்லது அள்ளிக் கொட்டிக் சொரித்தாலும் கூட என்ன பயன்?

ஆகவே தான், மக்களிடையே காணப்படும் துன்ப துயரங்களுக்கு அமைதியின்மைக்கும் ஏதுவாக உள்ள பிறழ்வுகளையும், சீர்கேடு களையும், அநியாயங்களையும், கொடுமைகளையும் களைய வேண்டுமானால், சட்டத்தின் காவலர்கள் எனப்படுவோர் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்களாய் இருக்க வேண்டும்: எளிதில், உரிமையுடன் அணுகப்படக் கூடியவர்களாய் இருக்க வேண்டும்: 'நீதி' என்னும் பண்டத்தின் பரிமானங்களைப்பற்றிய தெளிவு படைத்தவர்களாக இருக்க வேண்டும். இது தான் இலட்சிய நிலைமை – ஆனால் நடைமுறையில் இவற்றை எல்லாம் எதிர்பார்ப்பது அப்பாவித்தனம் என்று 'உலக அனுபவம்' உடையவர்கள் சொல்லகிறார்கள்.

நடைமுறை தளத்திலிருந்து பார்த்தாற் கூட ஆள்வோருக்கு ஆளப்படுவோருக்குமிடையே உள்ள பெருத்த இடைவெளி எப்பொழுது குறைகிறதோ, அப்பொழுது தான் சமூக முறைகேடுகளின் உக்கிரத்தை ஓரளவுக்காவது குறைக்கலாம். அப்படிக் குறைத்தாலொழிய, மக்களின் வெப்பிராயங்கள் தணிந்து அவர்கள் மூச்சு விடும் வாய்ப்பு உண்டாகப் போவதில்லை. இடையறாது தொடர்ந்து செல்லும் போர்களும் பூசல்களும், கட்சிப்போட்டிகளின் அடிப்படையில் அமைந்துள்ள பாராளுமன்ற இழுபறிப் பந்தயங்களும், சவால்களும், வன்மமும் வஞ்சமும் நிறைந்த் நமது அரசியற்களம், அந்த விதமானதொரு நம்பிக்கை ஒளியைக் கோடி காட்டுவதாகக் காணோம்.

சட்டம் – ஒழுங்கு பற்றிய கவலைகள் இப்படி இருக்க, மற்றுமொரு குழப்ப அலை இங்குள்ள பெரியவர்களை குறிப்பாக முதிய தலைமுறையைச் சோர்ந்தவர்களைச் சலனமடையச் செய்துள்ளது. அது இது தான் இளைஞர்களின் பழக்கவழக்கங் களிலும் போக்குவாக்குகளிலும் மிகவும் சடுதியான மாற்றங்கள் தலைகாட்டத் தொடங்கியுள்ளன. இதனைப் 'பண்பாட்டுச் சீரழிவு' என்று கூறி அதற்கான பரிகாரங்களையும் சிலர் முன்வைக்கத் தொடங்கியுள்ளனர்.

இது பற்றிப் பிறிதொரு தருணத்தில் சற்று ஊன்றி நோக்குவோம்.

ஐ. ஐ. ஓ

---

## மலையகத்........

8ம் பக்க தொடர்ச்சி..

வழிகாட்டலே விரும்பத்தக்கது. இத்தகைய பணிகளுடாக மக்களது தேவைகள், அவர்கள் முகங்கொடுக்கும் இன்னல்கள், போன்றன பற்றிய தெளிவும் அவற்றை அரசியல் சிந்தனையுடன் இனைத்து நோக்கும் ஆற்றலும் வளர்கிறது. தமிழகத்தில் இடதுசாரி இயக்கங்கள் செய்து வந்துள்ள சில பணிகள் இவ்விடத்தில் நமது கவனத்துக்குரியன. மிகவும் பிற்படுத்தப்பட்ட நிலையில் உள்ள மக்கள் மத்தியில் மேற்கொள்ளப்படும் சீர்திருத்த சமூக சேவை பணிகள் மூலம் மக்களிடையே சுயசார்பை ஊக்குவித்து புரட்சிகர அரசியலுக்கு அவர்களை வளர்த்தெடுக்க உதவும். கட்சி இங்கு வெறும் சமூக சேவை மன்றமாகவோ அயலார் காசில் தருமம் செய்யும் என்.ஜீ.ஓ. போலவோ இல்லாமல் மக்களை சுயஉதவி, சுதந்திரமான சிந்தனை, வர்க்க இன உரிமைக்கான போராட்ட உணர்வு போன்ற விடுதலைக் குணாம்சங்களுடன் செயற்பட வழிகாட்ட வேண்டும் சம்பந்தப்பட்ட மக்கள் தங்கள் சொந்த வலிமையினால் வளர்ந்து குறைவான பொருளாதார வசதிகள் அவர்களது சமுதாய விருத்திக்குத் தடையாக உள்ளன. கூட்டுறவு, சுயஉதவி அமைப்புக்களை கட்டி எழுப்புவது மக்களது விருத்திக்கு மட்டுமல்லாது சமூகமாகச் செயற்படும் ஆற்றலையும் வளர்த்தெடுக்கும். மக்களை தனித் தனி மனிதர்களாகத் தெரிந்தெடுத்து லஞ்சம் கொடுப்பது போல கடன் மற்றும் மூலதன உதவி வழங்கும் என்.ஜீ.ஓ. செயல்முறைகட்கு மாறான முறையில் கூட்டுச் செயற்பாட்டு நடை முறையும் சுயசார்பும் முக்கியப் படுத்தப்பட வேண்டும்.

கலை இலக்கிய பண்பாட்டுத் துறையில் கட்சிக்கு அனுசரனையான அமைப்புக்கள் கட்டியெழுப்பப்பட்டு வெகுஜன கலை இலக்கியப் பணிகள் முன்னெடுக்கப்பட வேண்டும். மேலைநாட்டிலிருந்து நேரடியாகவும் இந்தியா மூலமும் நம்மை வந்தடையும் சீரழிவு கலாச்சாரத்திற்கு ஒரு மாற்றுக் கலாச்சாரத்தை முற்போக்குச் சக்திகள் உருவாக்கத் தவறுமேயானால் தமது அரசியற் பணிகளை அவ்வளவுக்கு அவ்வளவு கடினமாக்க நேரிடும்.

மலையக மக்கள் எதிர்நோக்கி வரும் அன்றாட நெருக்கடிகளுக்கு முகங்கொடுப்பதில் அரசியல் வேறுபாடுகட்கும் அப்பாற்பட்ட ஒத்துழைப்புக்கும் நடவடிக்கைகட்கான தேவைகள் உள்ளன. இவற்றுக்கான சட்ட ரீதியான மற்றும் உதவிகளை மேற்கொள்வதற்கு மலையகத்தைச் சேர்ந்தவர்கள் மத்தியிலும் மலையகத்தில் வாழும் நல்ல சக்திகள் மத்தியிலும் ஆதரவுக் குழுக்களை அமைப்பது மக்களது பாதுகாப்புக்கு உதவக்கூடிய ஒரு நடவடிக்கையாகும். இவ்வாறான பணிகளை அரசியல் இலாபத்திற்காகவும் பொது சேவை என்ற பேரில் பணம் திரட்டுவதற்காகவும் பயன்படுத்தும் தீய சக்திகள் பெருகி வருகின்றன. இவ்விடயத்தையும் கட்சி தனது. வெகுஜன இயக்கப் பணிகளுள் ஒன்றாகக் கருதிச் செயற்பட வேண்டும்.

### பெண்கள் மீதான பாலியல் மற்றும் உடல் உள்ளம் சார்ந்த பிற வன்முறைகளும் முற்றாக எதிர்க்கப்பட வேண்டும்

மற்றவர்களையும் தம் வழியில் நடக்கத் துண்டுவதன் மூலம் விழிப்புணர்வும் தெளிவான அரசியல் பார்வையும் கொண்ட ஒரு சமூகம் உருவாக உதவுவர்.

மலையக மக்கள் தொழில், கல்வி வாய்ப்பு, தொழிற் பயிற்சி போன்ற துறைகளில் மிகவும் பின்தங்கியே இருக்கின்றனர். தோட்டத் தொழில் துறையை மட்டுமே நம்பி அவர்களது எதிர்காலம் அமைய முடியாது. எனவே நாட்டின் பிற சமுதாயங்கட்குரிய குறைந்த பட்ச வசதிகளாவது சகல மலையக மாணவர்கட்கும் இளையோருக்கும் வழங்கப்பட வேண்டும். இதற்கான கோரிக்கைகளை முன் வைத்துப் போராடுவதில் கட்சியின் வெகுஜன அமைப்புக்கள் பங்குபற்றுவதுடன் குறிப்பான போராட்ட தேவைகட்கான பரந்துபட்ட அணிகள் கட்டிஎழுப்பப்பட வேண்டும்.

பெண்களின் மீதான பல்வேறு ஒடுக்குமுறைகளும் பாலியல் மற்றும் உடல் உள்ளம் சார்ந்த பிற வன்முறைகளும் முற்றாக எதிர்க்கப்பட வேண்டும். இவ்விடயங்களில் ஆண்,பெண் பகைமையை வளர்க்கும் சில தீவிர பெண்ணிய நோக்கங்கள் பற்றிய எச்சரிக்கை உணர்வும் அவசியம். குடும்ப வன்முறை, பெண்கள் மீதான குடும்ப ஒடுக்கு முறை போன்றவை பற்றி பெண்களுக்கும் ஆண்களுக்கும் தொடர்ச்சியான கல்வி அறிவுறுத்தலும் கட்சியினதும் வெகுஜன அமைப்பினதும் ஊழியர்களது முன்னுதாரணமான நடத்தையும் அடிப்படையானவை. சமவாய்ப்புக்கள், சம உரிமை என்பன சமமான முறையில் குடும்பத்தில் பொறுப்புக்களை ஏற்பது வரை வலியுறுத்தப்பட வேண்டும். குடும்பத் தகராறுகள் வன்முறைக்கு வளராதபடி அவற்றைத் தீர்ப்பதற்கான குடும்பப் பிரச்சனைத் தீர்வுக் குழுக்கள் வதிவிடங்களை சார்ந்து உருவாக்கப்பட வேண்டும்.

ஆண்களிடம் பெருகிவரும் குடிபழக்கமும் குறிப்பாக இளைஞரிடையே போதைப் பொருள் நுகர்வின் தோற்றமும் மிகவும் பாரதுாரமான பிரச்சனைகள். இவற்றுக்கொதிரான பணிகளும் அவசியமான போது வெகுஜன நடவடிக்கைகளும் கல்வி மூலம் சீர்திருத்தம் என்ற முனைப்புடன் மேற்கொள்ளப்பட வேண்டும். மலையக தமிழ் மக்களது

இங்கு குறிப்பிட்ட பல விடயங்களில் புதிய ஜனநாயக கட்சி சிறு அளவிலான தொடக்கங்களையும் வேறுபடும் அளவிளான நடவடிக்கைகளையும் எடுத்து வந்துள்ள போதிலும் கட்சியின் வளர்ச்சிக்கேற்றபடி அதன் செயற்பாட்டுத் தளமும் அளவிலும் வீச்சிலும் விரிவு பெற வேண்டும்.

இலங்கையின் தேசிய இனப்பிரச்சனையில் இன்று மிகவும் தெளிவானதும் தடுமாற்றமற்றதும் சகல இனமக்களதும் நலன்களைக் கருத்தில் கொண்டதுமான கட்சியாகப் புதிய ஜனநாயக கட்சி இருப்பதற்குக் காரணம், அது மாக்ஸிஸ – லெனினிஸத்தை நமது நாட்டின் நிலைமைகட்கேற்பச் சரிவரப் புரிந்து கொண்டு இருப்பது தான். நாட்டின் பொருளாதார நலன்களும் சமுதாய நலன்களும் குறுகிய காலத்திலும் நீண்டகாலத்திலும் பேணப்படுவதற்கான அரசியல் மார்க்கமும் அதனிடம் தெளிவாகவே உள்ளன. தென்னிலங்கையின் முற்போக்குச் சக்திகளுடன் இணைந்து ஒரு வலிய இடதுசாரி இயக்கத்தைக் கட்டியெழுப்பப் புதிய ஜனநாயக் கட்சியின் பங்கு மிகவும் முக்கியமானது. இன்றைய சூழலில் மலையகத்தில் கட்சியின் வளர்ச்சி மலையக மக்களது அரசியல் எதிர்காலத்தின் ஒரு அளவு கோலாகவே அமையும் என்றால் மிகையாகாது. அதன் தளராத வளர்ச்சிக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

நன்றி - நூலகத்திட்டம்




# புதிய பூமி

செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

PUTHIYA POOMI புதியபூமி

சுற்று 05 செப்டெம்பர் 1998 பக்கம்-12 விலை ரூபா10/= சுழற்சி 23


## யுத்தத்தை எதிர்க்கும் போராட்டத்துடன் சகல போராட்டங்களும் இணைக்கப்பட வேண்டும்

கடந்த 26ம் திகதி (26-09-98) யுத்தத்தை எதிர்த்து குருநாகலில் மாபெரும் சத்தியாக்கிரகப் போராட்டம் நடைபெற்றது. சிங்கள, தமிழ், மலையக, முஸ்லிம் மக்கள் கலந்த கொண்ட மேற்படி சத்தியாக்கிரக இயக்கத்தை புதிய ஜனநாயகக் கட்சி, தேசிய ஜனநாயக இயக்கம், ஐக்கிய சோஷலிசக் கட்சி, நவ சமசமாஜக் கட்சி, தியேச கல்வி வட்டம், புதிய இடதுசாரி முன்னணி இலங்கை தேசிய ஆசிரியர் சங்கம் உட்பட இருபதுக்கும் மேற்பட்ட அமைப்புகள் ஏற்பாடு செய்திருந்தன.

சகல மக்கள் பிரிவினது உரிமைகளை பாதுகாக்கவும், நாட்டின் சொத்துக்களையும், வளங்களையும் பாதுகாக்கவும், மனித உரிமைகள் ஜனநாயக உரிமைகளை பாதுகாக்கவும் நாம் மேற்கொள்ளும் போராட்டங்கள் யாவும் யுத்தத்தை எதிர்க்கும் போராட்டத்துடன் இணைக்கப்படவேண்டும் என்ற அடிப்படையிலேயே மேற்படி சத்தியாக்கிரகம் நடைபெற்றது.

சிங்கள தேசிய இனத்தின் மேலாண்மையை வலியுறுத்தும் பயங்கரவாத எதிர்ப்பு முன்னணி போன்ற பேரினவாத அமைப்புகளுக்கு சவாலாக அமைந்த சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஒரு தேசிய இனத்தின் மேலாண்மையை நிலைநாட்ட ஏனைய தேசிய இனங்களை அடக்கி தேசிய இனங்களுக்கிடையேயான முரண்பாடுகளை கூர்மையடையச் செய்யும் இனங்களுக்கிடையே சமத்துவத்தை நிலைநாட்டும் அடிப்படையை கொண்ட எந்தவொரு தீர்வையும் எதிர்க்கும் இனவாத சக்திகளின் நடவடிக்கைகளை அம்பலப்படுத்தி அச்சக்திகளுக்கு எதிராகவும் மக்களை அணி திரட்ட வேண்டும் எனும் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

இவ்வாறான சத்தியாக்கிரகப் போராட்டங்களை தொடர்ச்சியாக பல மாவட்டங்களிலும் முன்னெடுக்கப்பட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. யுத்தத்தை நிறுத்தி பேச்சுவார்த்தையின் மூலம் அரசியல் தீர்வை காண வேண்டும் என்பத்னை வற்புறுத்துவதையே உடனடி தேவையாக கொண்டு மேற்படி சத்தியாக்கிரக போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

பின்வரும் பிரதான சுலோகங்களை அடிப்படையாகக் கொண்டே சத்தியாக்கிரகப் போராட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

- ☆ யுத்தத்தையும், ஏகாதிபத்திய கொள்ளையையும் எதிர்ப்போம்.
- ☆ தனியார்மய கொள்ளையை எதிர்ப்போம்
- ☆ யுத்தத்திற்காக பிள்ளைகளை பலியிடுவதை நிறுத்து.
- ☆ தேசிய வளங்களை பாதுகாப்போம்.
- ☆ யுத்தவாதம், இனவாதம், என்பவற்றை தோல்வியடையச் செய்வோம்.
- ☆ யுத்தத்தின் பேரால் மக்களின் ஜனநாயக உரிமைகளை மறுப்பதை எதிர்ப்போம்.

## எரிபொருள் விநியோக கட்டுப்பாடு தமிழ் மக்கள் மீதான பேரினவாத கொடுமை

வவுனியா பகுதியில் கட்டுப் பாடுகளுடன் கூடிய எரிபொருள் பங்கீட்டு முறையை பாதுகாப்பு படையினர் அறிமுகம் செய்வதை எதிர்த்து ஆகஸ்ட் 16ம் திகதி வாகனங்களை செலுத்தாமல் வாகன ஓட்டுனர்கள் போராட்டம் செய்தனர். இதனால் வவுனியா பிரதேசம் போக்குவரத்து பூரண ஸ்தம்பிதமாக இருந்தது. அதனையடுத்து ஆகஸ்ட் 20ம் திகதி வவுனியா பிரதேசமெங்கும் ஹர்த்தாலும் நடத்தப்பட்டது.

வவுனியாவிலிருந்து புலிகளுக்கு எரிபொருள் எடுத்து செல்வதை தடுப்பதற்காகவே எரிபொருள் பங்கீட்டு முறையை அமுலுக்கு கொண்ட வருவதாக படைகளின் தரப்பில் நியாயம் கற்பிக்கப்பட்டுள்ளது. ஆகஸ்ட் 6ம் திகதி மன்னார் உயிலங்குளத்தில் 7பேர் கொல்லப்பட்டுள்ளனர். இவர்கள் எரிபொருளை கடத்தினார்கள் என்றே குற்றம் சாட்டப்பட்டது.

வடபகுதிக்கு உணவு பொருள்கள், எரிபொருள்கள் எடுத்துச் செல்வதில் ஐ.தே. கட்சி அரசாங்கம் கட்டுப்பாடு விதித்திருந்த போது இன்றைய அரசாங்கத்தில் அமைச்சர்களாக இருக்கும பலர் எதிர்க்கட்சி எம்.பீ.க்களாக இருந்து கொண்டு எதிர்த்தனர். அவ்வகை கட்டுப்பாட்டில் மக்களே பாதிக்கப்படுவர் என்றும் எவ்வித தடைகளையும் மீறி புலிகளுக்கு எல்லா பொருட்களும் தாராளமாக கிடைப்பதாகவும் கூறினர் என்பது ஞாபகம்.

எனினும் இப்போது அவர்களுக்கு எரிபொருள் பங்கீட்டு முறையால் தமிழ் மக்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர் என்பதை அவர்களால் கண்டு கொள்ள முடியவில்லை.

வவுனியாவில் எரிபொருள் பங்கீட்டு முறையை கொண்டு வந்ததுடன் இராணுவக் கட்டுப்பாடில்லாத பகுதிகளிலிருக்கும் மக்கள் வவுனியாவில் இருந்து மண்ணெண்ணெய் எடுத்துச் செல்வது முற்றாகவே தடைசெய்யப்பட்டுள்ளது. இராணுவ கட்டுப்பாடில்லாத பகுதிகளிலிருந்து வருபவர்கள் தலா 6 லீட்டர் மண்ணெண்ணையை எடுத்துச் செல்ல முன்பு அனுமதிக்கப் பட்டிருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

**வவுனியா நிருபர்**

ஏற்கனவே வவுனியா 'விடுவிக்கப்பட்ட பகுதி' என்று கூறப்பட்டாலும் மக்கள் பாஸ் நெருக்கடிக்குள்ளாக்கப்பட்டிருக்கின்றனர். நிவாரண உணவு விநியோகம் நிறுத்தப்பட்டதாலும் அகதிகளாக இடம் பெயர்ந்துள்ளோரும் பாதிக்கப்பட்டோரும் பாரிய கஷ்டங்களை எதிர் நோக்கியுள்ளனர். இந்நிலையில் டீசல், பெற்றோல், மண்ணெண்ணெய் விநியோகம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

இதனால் போக்குவரத்தும், விளக்கு எரித்தலும் விவசாய செய்கையும் நேரடியாக பாதிப்படைகின்றன.

எனவே இராணுவக் கட்டுப் பாட்டிலுள்ள அல்லது விடுதலை செய்யப்பட்ட பிரதேசங்களில் மக்கள் படுகின்ற அவலங்கள் அதிகம். பாதுகாப்பு என்ற பெயரில் நடை பெறுகின்ற துன்புறுத்தல்களுக்கு மத்தியில் அடிமைகள் போன்று வாழமுடியாதும், சுய கவுரவத்தை இழந்தும் ஜீவமரணப் போராட்டம் நடத்துகின்றனா. மறுபுறம் பொருட்கள் மீதான தடை உட்பட பல்வேறுபட்ட தடைகளால் உயிர்வாழவும் முடியாதிருக்கின்றனர். இவ்வாறு தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை இன ஒடுக்கல் என்று சொல்லாமல் இருக்க முடியுமா?

பயங்கரவாதத்தை ஒழிக்கும் நடவடிக்கைகள் சமாதானத்தை நிலைநாட்டுவதற்கான யுத்தம் போன்ற பல பெயர்களில் தமிழ் மக்களை மேலும் மேலும் அடக்கி அடிமைகளாக்குவது இப்போதெல்லாம் அரசாங்கத்திற்கும் பேரினவாதிகளுக்கும் மிகவும் வசதியாகிவிட்டது.

எரிபொருள் பங்கீட்டு முறையை எதிர்த்து புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப்., முஸ்லிம் காங்கிரஸ் போன்ற அமைப்புகளும் ஏனைய இயக்கங் களும் பல எதிர்ப்பியக்கங்களை நடத்தி வருகின்றன. அவ் வெதிர்ப்பியங்கங்களில் மக்கள் நம்பிக்கையுடன் கலந்த கொள்கின்றனர்.

எனவே இராணுவ கட்டுப் பாட்டிலில்லாத, இராணுவ கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் ஏனைய கொழும்பு, மலையகம் போன்ற பிரதேசங்களிலும் தமிழ் மக்கள் மீதான பேரினவாத அடக்கு முறைகள் வித்தியாசப்பட்டாலும் அவற்றுக்கெதிரான போராட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதும் அப்போராட்டங்களிடையே தொடர்பும் இணைப்பும் அவசியம் எபன்பதும் உணரப்பட வேண்டும். அதனூடாக இந்நாட்டில் தேசிய இனங்கள் யாவும் சமத்துவமாக வாழும் சூழ்நிலை வென்றெடுக்கப் பட வேண்டும்.

## பு. ஜ. கட்சி - ஜே.வி.பி பேச்சுவார்த்தை

"இன்றைய நிலைமையில் எல்லா பிரச்சினைகளும் ஏதோ வகையில் யுத்தத்துடன் தொடர்புடையதாகவே இருக்கின்றன. ஆனால் யுத்தத்துடன் தொடர்பில்லாத குறிப்பிட்ட விடயங்களில் இடதுசாரி கட்சிகள் யாவும் ஒத்துழைப்புடன் செயற்பட வேண்டிய தேவை ஏற்படின் அந்தந்த சந்தர்ப்பங்களுக்கேற்ப நிலைமைகளை சீர்தூக்கிப் பார்த்து மேற்படி தேவையை பூர்த்தி செய்ய வேண்டும் என்ற அடிப்படையில் யுத்தத்தை நிறுத்தி பேச்சுவார்த்தையின் மூலம் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண வேண்டும் என்ற ஆகக் குறைந்த அடிப்படையையும் ஏற்றுக் கொள்ளாத ஜே.வி.பி. போன்ற கட்சிகளுடனும் தொடர்புபட்டு வேலைகளை முன்னெடுக்க புதிய ஜனநாயக கட்சி ஆலோசிக்க முடியும்.

ஆனால் எந்தவொரு கட்சியுடனும் ஒரு முன்னணியாகவோ, புரிந்துணர்வுள்ள கூட்டாகவோ புதிய ஜனநாயகக் கட்சி அரசியல் வேலைகளை முன்னெடுப்பதாயின் அம்முன்னணி அல்லது கூட்டு 'யுத்தத்தை நிறுத்தி பேச்சுவார்த்தையின் மூலம் இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண வேண்டும் என்ற ஆகக் குறைந்த அடிப்படையையாவது அங்கீகரிக்க வேண்டும் என்ற நிலைப் பாட்டிலிருந்து மாக்சிஸ, லெனினிஸ, மாசேதுங் சிந்தனையை ஏற்றுக்கொண்ட கட்சி என்ற அடிப்படையில் புதிய ஜனநாயகக் கட்சி பின்வாங்க முடியாது."

இவ்வாறு புதிய ஜனநாயகக் கட்சி ஜே.வி.பி.யிடம் தெரிவித்துள்ளது.

கடந்த ஆகஸ்ட் 14ம் திகதி புதிய ஜனநாயகக் கட்சிக்கும் ஜே.வி.பி.க்குமிடையிலான பேச்சு வார்த்தையின் போதே மேற்படி கருத்து எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

மேற்படி கலந்துரையாடலில் ஜே.வி.பி.யின் சார்பில் தொடர்புகள் விமல் வீரவன்ச, குணவர்த்தன, ரமேஸ் ஆகியோரும் பு.ஜ. கட்சியின் சார்பில் தோழர்கள் சி.கா. செந்திவேல், இ. தம்பையா, சோ. தேவராஜா சி. இராஜேந்திரன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

யுத்தம் உட்பட இரண்டு கட்சிகளும் முரண்படுகின்ற சிக்கலான விடயங்கள் தொடர்பாக தொடர்ந்து கலந்துரையாடல்களை மேற்கொள்வதென இரு கட்சிகளும் அபிப்பிராயம் தெரிவித்துக் கொண்டன.

## தமிழர்கள் "ஒரிஜினல்" மக்களல்லர்!

தமிழ் மக்கள் இலங்கை நாட்டின் "ஒரிஜினல்" மக்களல்ல என்று இலங்கை ஜனாதிபதி திருமதி சந்திரிகா குமாரணதுங்க பண்டார நாயக தெரிவித்துள்ளார். இது பேரினவாதக் குரலாகும்.

பிரபாகரன் எந்த மக்களுக்கு தனிநாடு வேண்டும் என்று கோருகிறாரோ அம்மக்கள் இலங்கையின் "ஒரிஜினல்" மக்களல்ல. என்று பி.பி.சி. நிறுவனத்துக்கு தென்னாபிரிக்காவில் வைத்து கொடுத்த சிறப்பு பேட்டியில் தெரிவித்திருந்தார். அணிசேரா மாநாட்டில் கலந்த கொள்வதற்காக சென்றிருந்த வேளையிலே அவர் மேற்படி தெரிவித்துள்ளார்.

**தென்னாபிரிக்கர்கள் அவர்களது நாட்டை கோரி போராட்டம் நடத்தினார்கள். ஆனால் இலங்கையின் நிலைமையோ வேறு.**

தென்னாபிரிக்க விடுதலைப் போராட்டத்தையும் இலங்கையின் தமிழ் மக்களின் நிலையையும் பிரித்து பார்க்க வேண்டும். தென்னாபிரிக்கர்கள் அவர்களது நாட்டை கோரி போராட்டம் நடத்தினார்கள். ஆனால் இலங்கையின் நிலைமையோ வேறு. 4ஆயிரம் 5ஆயிரம் கொண்ட சிறு பயங்கரவாத கூட்டமே தனிநாட்டை கேட்கிறது. பிரபாகரன் எந்த மக்களுக்காக தனிநாடு வேண்டும் என்று கோருகிறாரோ அம்மக்கள் இலங்கையின் ஒரிஜினல் மக்களல்ல என்று ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்துள்ளார்.

அவர் தமிழ் மக்களை "ஒரிஜினல்" மக்கள் இல்லை என்று கூறுவதன் அர்த்தம் தமிழ் மக்கள் ஆரம்பம் தொட்டு வாழவில்லை என்பதாகும். இவ்வாறான அர்த்தங்களை கற்பிப்பதன் மூலம் இனப்பிரச்சினைக்கான தீர்வை மேலும் சிக்கலாக்குவதாகவே முடியும். சமூகமான தீர்வை காணமுடியாது. வேடர்களே இந்நாட்டின் பூர்வீகக் குடிகள் என்பதையும் அவர்கள் மஹியங் கனை காட்டுக்குள் அடைக்கப் பட்டவர்களாகவே வைக்கப் பட்டுள்ளனர் என்பதையும் ஜனாதிபதி அவர்கள் மறந்துவிட மாட்டார் என்று நம்புகிறோம்.

பழைய புராணங்களை பேசி, பேசி புண்களை பெருப்பிப்பதை தவிர்த்து இந்நாட்டின் தேசிய இனங்களான சிங்கள, தமிழ், முஸ்லீம், மலையகத் தமிழ் மக்கள் வாழ்கிறார்கள் என்பதையும் பறங்கியர், மலாயர், வேடர் போன்ற சமூகத்தினரும் வாழ்கின்றனர் என்பதையும் யதார்த்தமாக ஏற்றுக் கொள்ளும்வரை தீர்வு வெகுதூரத்திலேயே இருக்கும்.

வெளியிடுபவர்: இளையதம்பி தம்பையா, இல. 47, 3வது மாடி, கொழும்பு சென்றல் சுப்பர் மார்க்கட், கொழும்பு 11. அச்சுப்பதிப்பு லக்ஸ் கிராபிக் (பிரை) லிமிட், 94, விவேகானந்த மேடு, கொழும்பு 13.